# கிராம நலம்

ஜனவரி, 1968



— வண்ணவிளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட
ரிப்பன் மாளிகையின் எழில் தோற்றம் —





வள்ளுவப் பெருந்தகை



ஔவையார்



கண்ணகி



கம்பர்



வீரமாமுனிவர்



குடியரசுத் தலைவருக்கு
மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வரவேற்பு...
[2-1-68]



இராபர்ட் கால்டுவெல்



ஜி. யு. போப்



வ. உ. சிதம்பரனார்



சுப்பிரமணிய பாரதியார்



பாரதிதாசன்





# கிராமநலம்

தமிழக அரசின் கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறை மாத இதழ்

கதிர் 13 சனவரி 1968 நெல் 4

# "உயரிய பண்பாட்டின் களஞ்சியம்– தமிழ் மொழி.."

## குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகிர் உசேன்

"இந்த உலகத் தமிழ் மாநாட்டுடன் தொடர்பு கொள்வதை ஒரு பேருக நான் கருதுகிறேன். தென்கிழக்கு ஆசியாவின் ஆக்கமுள்ள பரந்த கலாச்சாரத்தின் ஒரு களஞ்சியமாகத் தமிழ் விளங்குகிறது.

இந்த மகாநாட்டைத் துவக்கிவைக்கும்படி என்னை அழைத்ததன் மூலம், உண்மையில் நாம் எவ்வாறு ஒருவரையொருவர் சார்ந்திருக்கிறோம் என்பதையும், கலாச்சார, ஆன்மிக ஒற்றுமை பற்றிய உண்மையான ஆராய்ச்சி ஒற்றுமை உணர்வை எவ்வாறு வளர்க்க முடியும் என்பதையும் மேலும் தீவிரமான முறையிலும் புதிதாகவும் நான் தெரிந்துகொள்ளும்படி அழைத்திருக்கிறீர்கள்.

வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையே உள்ள முக்கிய தொடர்புகளை தமிழ்மொழி இணைத்திருக்கிறது. நம் நாட்டிற்கும் வெளியே அது பேசப்படுவதால், தமிழ் ஒரு சர்வதேச மொழியாகத் திகழ்கிறது.

தமிழ் நாட்டின் எல்லைகள் பழமையானவை. நில எல்லைகளையும் கலாச்சார எல்லைகளையும் தாண்டிச் செல்கின்ற ஒரு பண்பாட்டையும் தமிழ்மொழி பெற்றிருந்தது. தமிழ் உணர்ச்சி இருந்த இடமெல்லாம் தமிழ்நாடு பரவியிருந்தது. வடக்கில் இமயத்தையும், கிழக்கிலும் மேற்கிலும் திரைக் கடல்களையும் அந்தக் கடலுக்கு அப்பாலுள்ள நிலங்களையும், அது கண்டது.

### புனிதக் களஞ்சியம் குறள்

தமிழ் மொழி, தமிழ்ப் பண்பாட்டைப்பற்றி இங்கு குழுமியுள்ள பேரறிஞர்களைவிட அதிகமாக நான் ஒன்றும் கூறிவிட முடியாது. எல்லோருக்கும் தெரிந்தவற்றை நாம் மீண்டும் கூறினுல், அது ஒரு மாபெரும் மரபிற்கு செலுத்தும் அஞ்சலிதான். இந்த மரபு, சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பு உலகின் மிகப் பழமையான இலக்கியம் எனக் கருதப்படும் சங்க இலக்கியத்திலிருந்து ஆரம்பமாகிறது. செழித்த, பண்பட்ட தமிழ் இலக்கியம், பல நூற்றுண்டுகளாய் ஏற்பட்ட வளர்ச்சியைக் காட்டுகிறது. உலக அறிவின் புனிதக் களஞ்சியமாக விளங்குகிறது திருக்குறள். வால்மீகியின் கதையை அடிப்படையாகக் கொண்ட கம்பராமாயணம் ஒரு மாபெரும் காவியமாகும்.

தமிழ் மரபு பழமையானது மட்டுமின்றி, பரந்த உணர்வையும் பெற்றிருந்தது. தமிழ் மரபு எல்லா வகைகளிலும் சிறப்புற்று இருப்பதால், அதில் எந்த அம்சம் அதிகச் சிறப்பு வாய்ந்தது என்பதைக் கூறுவது கடினம். சமஸ்கிருத மொழிக்கு பாணினி செய்துள்ளதைப்போன்று, தமிழுக்கு தொல்காப்பிய ஆசிரியர் திடமான விஞ்ஞான ரீதியில் இலக்கண அடித்தளத்தை அமைத்திருக்கிருர்.

வேறு மொழிகளை அறிந்து தன்னுடைய அறிவாற்றலை பல்வேறு விதங்களில் வெளிக்காட்டுவதற்கு தமிழன் பேரார்வம் கொண்டிருந்தான். மாபெரும் ஆழ்வார்களில் ஒருவரான குலசேகரர், பெருமாள் திருமொழியின் ஆசிரியர் என்ற முறையில் தமிழ் இலக்கியத்தில் உயர்ந்த இடத்தை வகிக்கிருர். அவருடைய முகுந்தமாலா சமஸ்கிருத இலக்கியத்தில் சிறந்ததொரு படைப்பாக விளங்குகிறது. ராமானுஜர் ஆண்டாளின் பக்திப் பெருக்கையும், நம்மாழ்வாரின் ஆன்ம தத்துவத்தையும் சம்ஸ்கிருதத்தில் விவரித்திருக்கிருர். சம்ஸ்கிருத இலக்கியத்திற்கு தமிழர்கள் ஆற்றியுள்ள பணிபற்றி மேலும் விவரித்துக்கூற நான் விரும்பவில்லை.

## கலாச்சாரத்தின் நிலைக்களன்களாக அறிவாலயங்கள்

ஸ்தாபனங்களைத் தோற்றுவிப்பதில் தமிழர்கள் ஒரு தனித்திறனைப் பெற்றிருக்கிருர்கள். சமூக அமைப்புக்களைப் பற்றி நான் இங்கு குறிப்பிடவில்லை. உயர் கல்விக்கான பல பள்ளிகளும், ஸ்தாபனங்களும் இங்கு இருந்தன என்று தமிழ்நாட்டில் பல இடங்களில் உள்ள கல்வெட்டுக்கள் மூலம் நாம் அறிகிருேம். ஆலயம் இல்லாத கிராமத்தில் குடியிருக்கக்கூடாது : ஏனெனில் ஆலயம் பூஜைக்குரிய இடம் மட்டுமின்றி, கல்வி போதனைக்கான ஒரு இடமும் ஆகும். இவ்விதம் தமிழர்களின் அறிவு மூதாட்டியான ஒளவை கூறியிருக்கிருர். இலக்கியம், கலை, மதம், சமூக உறவுகள் முதலிய கலாச்சார வாழ்க்கைக்கான அனேகமாக எல்லா அம்சங்களையும் உருவாக்கி ஊக்குவிப்பதில், ஆலயம் ஒரு மத்திய கேந்திரமாக விளங்கி வந்தது. மக்கள் தொகை அதிகமுள்ள பெரிய பட்டணங்களில் இவ்வசதிகளை ஆலயம் அதிகமாக அளித்தது. ''கடிகா'' அல்லது பல்கலைக்கழகம் பெருமதிப்புடன் விளங்கியது மட்டுமின்றி, அரசியல் துறையில் செல்வாக்கு பெற்றிருந்ததாகவும் அறிகிருேம். உதாரணமாக, அரச வாரிசு இல்லாமல் இருந்தபோது இரண்டாவது நந்திவர்மனை ஆட்சிபீடத்தில் அமர்த்துவதில் காஞ்சிபுரத்திலிருந்த பல்கலைக்கழகம் முக்கிய பங்கு ஆற்றியது. மதம், சரித்திரம் ஆகியவற்றை நேரடியாக போதிக்கும் ஒரு ஸ்தாபனமாகவும் ஆலயம் இருந்தது. காஞ்சிபுரத்தில் வைகுந்தநாதபெருமாள் கோவிலில் உள்ள சிற்பங்கள் பல்லவ மன்னர்களின் சரித்திரத்தைத் தெளிவுடன் விளக்குகின்றன என்பதையும், தஞ்சாவூரில் ராஜராஜேஸ்வர ஆலயத்திலுள்ள ஓவியங்கள் புகழ்பெற்ற ராஜராஜரின் சாதனைகளைச் சித்தரிக்கின்றன என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

சங்ககால இலக்கியத்தில் 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்று அழகான பாடல் ஒன்று வருகிறது. இப்பாடலில் ஊர் என்பதைக் கவனியுங்கள். என் இச்சைப்படி வாழக்கூடிய வீடு அல்ல உலகம். உலகம் எனக்குச் சொந்தமில்லை. உலகம் எனது ஊர் ; அங்கு வேலை செய்வதற்கும் களிப்புடன் இருக்கவும் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. அங்கு எல்லா உயிர்களிலும் நேசத்தன்மை பொலிகிறது.

## பாரதி கண்ட கனவு

வருங்கால பாரதம் பற்றி கவிதை வடித்த கவி சுப்பிரமணிய பாரதி, குறுகிய எண்ணங்களற்ற, மொழி, பிராந்திய தடைகளற்ற இந்தியாவைப் பற்றி கனவு கண்டார்.

நம்மிடையே பாரதி இப்போது வாழ்ந்திருந்தால் அவர் என்ன எண்ணியிருக்கக்கூடும் ? மனக்கசப்பு அடைந்திருப்பாரா ? ஆழ்ந்த வருத்தத்தினுல் கண்ணீர் சிந்தியிருப்பாரா ? மனிதத் தன்மையுடனும் பரந்த நோக்குடன் கூடிய தங்களுடைய சிறந்த மரபை மறுக்கும்படி அவர் தமிழர்களைக் கேட்டுக்கொண்டிருப்பாரா ? அல்லது அமைதியையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தி பொய்த் தோற்றங்களை நீக்க தமிழ் மரபின் நற்சக்தியை உபயோகித்திருப்பாரா ?

ஒதுங்கி இருக்கும்படி தமிழர்களை அவர் கேட்டுக்கொண்டிருப்பாரா ? அல்லது எல்லா இந்திய மக்களின் மேன்மையே தங்களுடைய மேன்மை எனக்கருதி அந்த இலட்சியத்திற்காகப் பாடுபட அழைப்புவிடுத்திருப்பாரா?

தாங்கள் நெடுங்காலமாகப் போற்றி வரும் பரந்த மனப்பான்மை கொண்ட பண்பாட்டிற்கிணங்க, இக்கேள்விகளுக்கு, தமிழர்கள் விடை கூறுவர் என்பதில் எனக்குச் சந்தேகமே இல்லை.''

[உலகத் தமிழ் மாநாட்டில்; குடியரசுத் தலைவரின் துவக்க உரை—3-1-1968.]

# "தமிழன் தனக்கென்று உள்ளதை இழக்க ஒருக்காலும் சம்மதிக்கமாட்டான்.."

"நமது தமிழ் மொழி தொன்மைமிக்கது, மென்மை மிக்கது. வளம் பெற்றது. வலிமை பெற்றது. வலிவும், பொலிவும் வாய்ந்தது. தானும் வாழ்ந்து பிற மொழிகளையும் வாழ வைத்தது தமிழ். பல மொழிகளுக்கு தாயக மான அத்தகைய தமிழை, தமிழின் சிறப்பை பல பகுதிகளிலும் உள்ளோர் ஓரளவு அறிந் துள்ளார்கள். பெரும் அளவு, முழு அளவு தமிழின் சிறப்பை, மாண்பை உலகம் ஒப்புக் கொள்ளும் அளவுக்கு ஆவன செய்ய இந்த மாநாடும், மாநாட்டில் நடக்கும் ஆராய்ச் சியும் உதவும் என நம்புகிறேன். இத் தமிழ் ஆராய்ச்சியால் புதிய கட்டம், நல்ல கட்டம் ஏற்படுத்தப்படும் என நம்பலாம். இந்த ஆராய்ச்சியின் பயன், பல காலமும் தமிழ் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் தமிழர் வாழ்வுக் கும் வழிகோலும் என்பதில் ஐயமில்லை.

அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் திரு காம ராஜ் பேசுகையில் முதல் மாநாட்டையே இங்கே நடத்தியிருக்க வேண்டும் என்றார். உண்மை தான். ஏனோ அந்த வாய்ப்பு கிட்டாமல் போய்விட்டது. ஆனால் அண்ணன் அக்கறை யற்றிருந்தாலும் தம்பி அதிக அக்கறை காட்டுவது வழக்கம். அந்த முறையில் இரண் டாவது மாநாடு இங்கு இப்போது நடக் கிறது. மலேசியாவில் நடந்த முதல் மாநாட் டில் 20 வெளிநாட்டுப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். 2-வது மாநாட்டிற்கு 30-க்கும் மேற்பட்ட வெளிநாட்டினர் கலந்துகொண் டுள்ளனர். ரஷ்யா, செக்கோஸ்லோவேகியா, ஆஸ்டிரியா, ஹங்கேரி, இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளிலெல்லாம் இருந்து ஆராய்ச்சி வல்லுனர்கள் சென்னை வந்துள்ளனர்.

இத்தனை நாடுகளுக்கும் அறிமுகமாயுள்ள தமிழ் மொழி இந்தியாவுக்குள்ளேயே இன் னும் பல பகுதிகளில் இடம்பெற முடியாம லிருப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும். செக்-கோஸ்லோவேகியாவில் தமிழ் மொழி வியந்து பாராட்டப்படுகிறது. அமெரிக்கர்கள் அறிந்து போற்றுகின்றனர். பிரிட்டிஷ், அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் தமிழ் பயிற்றுவிக்கப்படு கிறது என்றெல்லாம் உணரும்போது, உணர்ச்சி யால் விம்மும் நமது உள்ளம் நம்மை எங்கே யெல்லாமோ இட்டுச் செல்கிறது. இன்றுள்ள நிலையை எண்ணும்போதுதான், இருக்கின்ற இடத்திற்கு வருகிறோம். தமிழர் தமிழ்ப் பண்பாட்டை, தமிழ் வரலாற்றை அறிந்து ஆற்றலுடன் அறிவுடன் ஒன்று பட்டு பெரும் முயற்சி செய்தால், நிச்சயம் அந்த இடத்திற்கு நாம் செல்வோம்.

**அந்த நிலையும் இந்த நிலையும்;**

உலகில் மொழி அறிவு தோன்றியிராத காலத்தில், மொழி இலக்கியம், மொழி இலக்கணம் பெற்றிருந்தது தமிழ். எட்டுத் தொகை என்றும், பத்துப் பாட்டு என்றும், பதினெண் கீழ்க் கணக்கென்றும் பெற்றிருந்தோம். "எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு" என்ற உயரிய தத்துவத்தை உலகுக்கு உணர்த்தும் குறளுக் குச் சொந்தக்காரர்களாக நாம் இருந்தோம். அத்தகைய தமிழுக்கு புதிய வலிவும் பொலி வும் இந்த மாநாட்டினால் கிட்டும் என்பதில் ஐயமில்லை.

**உலகத் தமிழ் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையுரை**

தமிழ் மாநாட்டில் நடந்த, நடக்கின்ற அரிய நிகழ்ச்சிகளைக் கண்டும் தமிழ்

ஆராய்ச்சி, கருத்தரங்கு உரைகளின் சிறப்பைக் கேட்டும் புதுப்பயன் பெறலாம்.

நாம் அடைந்துள்ள இந்த அக மகிழ்ச்சி மற்றவர்கள் கருதுவது போல இல்லாமல் தமிழ் வளம்பெற, தமிழ் வளர்ச்சியுற வேண்டிய வழியினை, வகையினைக் காணப் பயன்படுத்தப்படும் என உறுதி கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

நமது தமிழ்மொழி பற்றி நடக்கும் ஆராய்ச்சிகளையும், முடிவுகளையும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு மட்டுமே பயன்படுத்திக்கொள்வோம் என்று உறுதியாகத் தெரிவித்துக் கொள்வோம்!

இங்கிலாந்திலிருந்தும் பிற நாடுகளிலிருந்தும் வருகிற நிபுணர்கள் தமிழ்மொழி இத்தகைய அருமையான மொழி என்று கூறுகிற நேரத்தில்—அந்த மொழிக்குச் சொந்தக்காரர் என்று நினைக்கும் போது, அந்த மொழி மீது பற்று—பாசம் ஏற்படாமலா இருக்கும்?

அத்தகைய மொழிக்கு எந்தக் காலத்திலாவது—எந்த நோக்குடனாவது—எப்படிப்பட்டவர்களிடமிருந்தாயினும் தனி மரியாதை கிடைக்கவில்லையென்ருல், அதைத் தமிழகம் பொறுத்துக் கொள்ளாது.

### "எனது தமிழ் உணர்வை வளர்த்த இருபெரும் ஆசான்கள்"

"தமிழ் மொழியை-என் கல்லூரி வாழ்வில் முறையாக நான் கற்கவில்லை. கல்லூரியிலிருந்து வெளியேறியபோது, தமிழைக் கற்க நான் முயற்சி எடுத்துக்கொண்டது உண்டு.

இண்டர்மீடியட் வகுப்போடு தமிழ்க் கல்வி நாங்கள் இருந்தபோது முற்றுப்பெற்றுவிட்டது. அதற்குப் பிறகு ஆங்கில மொழியில் எண்ணிடும் அளவுக்கு அமைந்த ஆங்கிலக் கல்வியே எனக்குக் கிடைத்தது.

நான் கல்லூரியில் பயின்றபோது தமிழ் வகுப்பு என்பது ஓய்வுக்குரிய நேரமாகக் கருதப்பட்டது.

தமிழ் வகுப்புக்குச் செல்லாமல் நூலகத்திற்குச் சென்று-சரித்திர ஏடுகளையோ - கணக்கு ஏடுகளையோ புரட்டிப் பார்ப்பது தான் திறமையான மாணவனுக்கு அடையாளம் என்று கருதப்பட்டு வந்தது.

அப்போதுகூட எனக்கு மிகவும் சுவையும் பயனும் அளித்த வகுப்பு - தமிழ் வகுப்புதான்.

எனது தமிழ் உணர்வை வளர்த்த இருபெரும் தமிழ் ஆசான்களில் ஒருவர் மோசூர் கந்தசாமி முதலியார்.*

அவர் ஆங்கிலம், தமிழ் ஆகிய இரண்டிலும் புலமையுடையவர். அவரது வகுப்பில் 40 நிமிடம் ஆங்கிலமும், 20 நிமிடம் தமிழும் நடமாடும்.

தமிழ்க் கவிதைக்கு நிகரான - அல்லது அதற்கு மேலான ஆங்கிலக் கவிதைகளை எடுத்துரைத்து, இரண்டையும் அழகுற ஒப்பிட்டுக் காட்டுவார்.

இன்னெரு ஆசான் மணி திருநாவுக்கரசு என்பவர். அவர் வகுப்பில் ஆங்கிலம் நுழையாது. தமிழின் அடித்தளத்திற்கே சென்று தமிழ் மொழியின் மாண்பினை எடுத்துக்காட்டி - தமிழ்த்தேனை மாந்தி மாந்தி இன்பம் துலங்கச் செய்வார்.

எனக்கு இப்போது ஏதாவது தமிழ் ஆர்வம் இருக்கிறது என்ருல், அதற்குக் காரணம் இந்த இருபெரும் புலவர்கள்தான்."

[பூம்புகார் நகரில் 5–1–68-ல் தமிழகப் புலவர் குழுவுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில், மாண்புமிகு முதலமைச்சர் அறிஞர் அண்ணா.]

தமிழ்ப் பண்பாடு உலகத்தில் எல்லா மனிதர்களையும் சகோதரர்களாகவும், தோழர்களாகவும் ஏற்றுக்கொள்ளும் தன்னிடம் வருபவர்களை வாழ்த்தி வரவேற்கும்; எந்த மொழியையும் உரிய முறையில் மதிக்கும்; அறிவுச் செல்வம் உலகின் எந்தக் கோடியில் இருந்தாலும் தேடிச் சென்று எடுத்து வரும்!

ஆனல்.. தமிழர்கள் தமக்கென்று உள்ளதை இழக்க ஒருக்காலும் சம்மதிக்கமாட்டார்கள்!

ஆழ்கடல் கொந்தளித்துக் கொண்டுதானிருக்கிறது, பக்குவமாகக் கடக்க வேண்டுமானல், நல்ல நாவாயின்—கப்பலின் மூலம் கடக்கலாம்.

அதுபோல, தமிழர்களை அணைத்துக் கொண்டு சென்ருல், அவர்களைவிடச் சிறந்தவர்கள் யாரும் இருக்க முடியாது.

ஐக்கிய நாடுகள் சபையில் ஒற்றுமையைக் குறிக்கோளாகக் கொண்டு பணியாற்றினலும்—அனைத்து நாட்டுக் கொடிகளும் வெளியே பறக்க- உள்ளே பேசிவிட்டு வெளியே வந்தாலும் எந்த நாட்டின் மீது யார் படை

யெடுப்பார்களோ என்ற பேச்சும் இருக்கும்!

"தீதும் நன்றும் பிறர்தர வாரா"

ஆனல் உண்மையான ஒற்றுமை உணர்வின 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற பொன்மொழியில் வடித்து ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தந்த தமிழரின் பெருந்தன்மையை எண்ணி—எண்ணி நெஞ்சம் விம்முகிறது.

'யாதும் ஊரே—யாவரும் கேளிர்' என்று பாடிய புலவர் 'தீதும் நன்றும் பிறர்தர வரா'—என்றும் அடுத்த அடியில் பாடியிருக்கிறார்.

நல்லது வரவேண்டுமா? அது நாம்தான் செய்துகொள்ளவேண்டும். கெட்டது வர வேண்டுமா? நாம்தான் வரவழைத்துக்கொள்ள வேண்டும்! எனவே, தீது வருமோ என்று ஐயப்பாடு கொள்ள வேண்டாம்! தமிழருக்குத் தீது பிறர் தருவதால் அல்ல—நாமே தீது தேடிக்கொண்டாலொழிய, தமிழர்களுக்குத் தீது ஒருபோதும் வராது.

## தமிழ்ப் பண்பாட்டின் மையம்

"அமிர்தசரசில் உள்ள சீக்கியக் கோயிலுக்கு நான் மூன்று நான்கு தடவைகள் போயிருக்கிறேன். அந்தக் கோயிலுக்குள் சென்றுவரக் கூடிய எவரும் சீக்கிய மதத்திடம் மிகுந்த மரியாதையுடனே திரும்புவர். அத்தனை நேர்த்தியாகவும் சுத்தமாகவும் அக்கோயில் வைக்கப்பட்டுள்ளது.

அக்கோயிலுக்குச் சென்றிருந்தபோது, அங்கே நான் ஒரு காட்சியைக் கண்டேன். நன்ருக உடுத்தியிருந்த ஒருவர் அக்கட்டிடத்தின் தாழ்வாரங்களை எல்லாம் சுத்தம்செய்ததோடு, அங்கிருந்த காலணிகளையெல்லாம் துடைத்துச் சுத்தப்படுத்திக் கொண்டிருந்தார். ஏனென்று நான் அவர் அருகில் சென்று கேட்டேன். "பண்புகள் எல்லாவற்றிலும் தன்னடக்கமே மிக உயர்ந்த பண்பு என்பதைச் செயலால் உணரவே, இவ்வாறு செய்கிறேன்" என்று அவர் சொன்னர்.

தங்களது மக்கள் ஒரு சமுகமாகக் கூடிப்பிணைந்து வாழவும் மக்கட்சமுதாயத் தொண்டிற்குத் தங்களை அர்ப்பணித்துக்கொள்ளவுமே, சீக்கிய சமயம் தோன்றிற்று,

பணி, தனக்கௌமட்டுமல்லாமல், சமூகம் முழுமையும் அதன் மூலம் நாடு முழுமையும் பயனடைய வேண்டும் என்ற மனே நிலையுடனே அவர்கள் பணி செய்கின்றனர். தமிழர்களாகிய நாங்களும் அத்தகைய உயர்ந்த கோட்பாடுகள் உடையவர்களாயிருந்தோம். சமுதாயத் தொண்டே தமிழர் பண்பாட்டின் மையமாக விளங்கிற்று.

இதனல்தான் தமிழகம் சீக்கியர்களை அணைத்துச் செல்கின்றது. இங்கே பேசிய சீக்கியப் பிரமுகர் "எங்கள் குழந்தைகளெல்லாம் இங்கேதான் பிறந்தன" என்ருர். ஒன்றைச் சொல்கிறேன். உங்கள் குழந்தைகள் மட்டுமல்ல, உங்கள் பேரன்களும் கொள்ளுப் பேரன்களும் இங்கேயே பிறக்கட்டும். அக்குழந்தைகளெல்லாம் சுவாசிக்கிற முதல் காற்று, தமிழ் மணங் கமழும் காற்ருக இருக்கட்டும். தமிழ் மண்ணில் அவர்கள் தவழட்டும். நிரந்தரமாக நீங்கள் இங்கேயே இருக்கலாம். வேறு சில சமூகத்தாரைப் போல கவலை கொள்ளத் தேவையில்லை."

(7-1-68-ல் சென்னையில் சீக்கியர் கோவிலில் நடைபெற்ற குரு கோவிந்தசிங்கின் 301-வது ஆண்டு நினைவு விழாவில், மாண்புமிகு முதல் அமைச்சர் அறிஞர் அண்ணா)

தமிழ் மொழியின் அருமை பெருமையை நாம் உணர்வதோடு பிறரும் உணர்ந்து, தமிழர்களாகிய நம்மை அவர்கள் நோக்கி இந்தத் தமிழ் மொழி உங்களுக்கு மட்டும் உரிய மொழி அல்ல, எங்களுக்கும் அதுதான் மொழி, அதுதான் இணைப்பு மொழி, அதுதான் பொது மொழி, அதுதான் ஆட்சி மொழி என்று கூறும் காலம் வரும்!

அந்தக்காலம் அவசர நடையால் வருவதல்ல! அவசரக் கோலத்தில் கிட்டுவதல்ல!

தூண்டில் போடுபவன் முள் அருகில் மீன் வரும்வரை எப்படிப் பொறுமையுடன் இருப்பானே, அத்தகைய பொறுமையை நாம் கைக்கொள்ளவேண்டும், கற்றுக்கொள்ளவேண்டும். தமிழ் மறையிலும் தமிழ் நெறியிலும், காலம்—இடம்—வகை—பொருள் அறிந்து செய்யவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. அந்த வழி நடந்து, தமிழ் மொழியை அரியாசனத்தில் அமர்த்திடக்கூடிய நன்னிலை நாம் உருவாக்குவோம்.

---

மாண்புமிகு முதலமைச்சரின் தமிழ் உணர்வை வளர்த்த இருபெரும் ஆசான்களில் ஒருவரான மோசூர் கந்தசாமி முதலியார் அவர்களின் புதல்வியார் திருமதி வாசுகி அம்மையார், டில்லியில் உள்ள மகளிர் கல்லூரியில் தமிழ்த்துறையில் பணியாற்றுகிருர். அவர் உலகத் தமிழ் மாநாட்டில் பங்கு கொண்டதோடு, தமிழ் மாநாடு பற்றிய தன்னுடைய அனுபவங்களை, சுவைபட எழுதியுள்ளார். அவருடைய சிறப்புக் கட்டுரை, அடுத்த இதழில் இடம் பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிருேம்.

—ஆசிரியர்.

# வரலாற்றுப் புகழ்பெற்ற ரோமாபுரியில் விவசாயப் புரட்சிக்கு வித்திட்ட மாநாடு

[ மாண்புமிகு உணவமைச்சர் திரு கே. ஏ. மதியழகன் ]

[1967 நவம்பரில், ரோமாபுரியில் உலக உணவு-விவசாய மாநாடு நடைபெற்றது, அம்மாநாட்டில், இந்திய நாட்டுக்குழுவின் மாற்றுத் தலைவராக, தமிழக அரசின் மாண்புமிகு உணவமைச்சர் திரு கே. ஏ. மதியழகன் அவர்கள் கலந்து கொண்டார். உலக-உணவு விவசாய மாநாட்டைப் பற்றியும்-ரோமாபுரியின் சிறப்புக்கள் பற்றியும் மாண்புமிகு உணவமைச்சர், இத்தாலி நாட்டின் வாத்திகன் நகரின் வானொலி நிலையத்தின் தமிழ் ஒலிபரப்பில், தமிழில் ஆற்றிய சொற்பொழிவின் சாரம் இது: —ஆசிரியர்]

“என்னருந் தமிழ்நாட்டின் பெரியோரே, பெற்ற நல் தாய்மாரே, உடன்பிறப்புக்களே, உங்கள் எல்லோருக்கும் என் அன்பு வணக்கங்கள். நான் நின்றுகொண்டிருக்கும் இத்தாலி நாட்டின் இணையற்ற கவிஞன் சொன்னான்: ‘‘எழில் சிறந்த இத்தாலிய நாடே, என் இதயத்தில் வாழ்கின்றாய்’’ என்று. தேசப்பிரஷ்டம் செய்யப்பட்ட ‘தாந்தே’ என்ற கவிஞன், வெளிநாட்டு மண்ணிலே இருந்தபோது, இந்தக் கவிதை வரிகளை வடித்தான். அதே பாடல் தான், என் இதயத்தில், காடுமலை, வனாந்திரங்கள், பாலை வனங்கள், கடல்கள், வயல் வெளிகள் இவற்றையெல்லாம் தாண்டி ஐயாயிரம் மைல்களுக்கும் அப்பால் உள்ள போதும், அன்புத் தமிழகம் இன்பத் தமிழகத்தை நினைக்கும் போது, என் இதயத்தில் நர்த்தனமாடுகிறது. தொலை தூரம் சென்றவுடன்தான் சில பொருள்களின் அருமை மேலும் தெளிவாகிறது. இங்கே உங்கள் எல்லோரையும், நமது திருமண்ணின் பல்வளமும், காவிரிநதி தீரத்தின் பைநிறப் பழனத்தையும், பாலாற்று மணலும், நீலகிரி மலையும், சிங்காரச் சென்னையும், குமரி முனையும், குற்றால நீர்வீழ்ச்சியும் மற்ற கோலக்காட்சிகளும் என் அகக்கண் முன்னே உருவெடுத்து உவகையூட்டுகின்றன.

### அன்பு சாம்ராஜ்யமாகத் திகழும் வாத்திகன்

ஒரு காலத்தில் பளபளக்கும் கடகம் ஏந்தி தகதகக்கும் கவசம் பூண்டு ரோமானிய முடி மன்னர்கள் ஆரோகணிக்கும் புரவிகள் மீது அமர்ந்து, மண்டலங்கள் பலவற்றைத் தங்கள் காலடியிலே மிதித்துத் துவைத்து, சாம்ராஜ்யம் நிறுவியது போய், இன்றைக்கு அவை சவக்களை படிந்த—காலத்தின் புழுதி படிந்த பழமையின் சின்னங்களாகக் காட்சியளிக்கின்றன. ஆனால், ரோம் நகரின் நடுநாயகமாக விளங்கும் வாத்திகன் நகரம், உலகில் உள்ள ஐம்பது—அறுபது கோடி கத்தோலிக்கு மக்களுக்கு கலங்கரை விளக்கமாகவும், யாத்திரை செல்ல வேண்டிய திருத்தலமாகவும் இயங்குகிறது. பழைய போர்வெறி கொண்ட சாம்ராஜ்யம் எங்கோ மறைந்தது. கத்தோலிக்க மக்களின் லோக குருவின், போப்பாண்டவரின் சந்நிதானமாக பீட்டர்ஸ்பர்க் தேவாலயமும், மற்றைய தொழுகை—நிலையங்களும் இணைந்த அன்பு-சாம்ராஜ்யமாக இன்று இயங்குகின்றன.

ரோம் நகரம், ஐரோப்பிய நாகரிகத்தின் தொட்டில்· மறவர் கூட்டம்: கோட்டை—கொத்தளங்கள், கொடி மரங்கள், அரண்மனைகள், மலர்த் தோட்டங்கள், மாதா கோவில்கள், மைதானங்கள், வெற்றி வளைவுகள் தூண்கள்-ரோமாபுரியின் எல்லைச்சுவர், பழைய பாதைகள், மாநகர மன்றம்: ஓவிய மாளிகை, நினைவு மண்டபங்கள், நுழைவு வாயில்கள், மல்யுத்த வீரர்கள் சண்டையிட்ட விளையாட்டு அரங்கம்: நாடாளும் மன்றக் கட்டிடம், நீராடும் தடாகங்கள், அந்தப்புர மகளிரின் இருக்கை; மன்னர்களின் மாளிகை, நீர் ஊற்றுக்கள், பிறந்த மேனியுடன் கூடிய சலவைக் கல்லாலான சிலைகள், சின்னாபின்னமான நினைவு மண்டபங்கள், தூர்ந்து போன அகழிகள், கல்லறைகள்— இப்படியெல்லாம் எத்தனை யெத்தனையோ ஆயிரக் கணக்கான நினைவுச் சின்னங்கள் ரோமாபுரியிலே உள்ளன. அந்த நினைவுச் சின்னங்களோடு இல்லாமல், புதிய இத்தாலியினுடைய வடிவங்களாக, மாஜனியும், கரிபால்டியும், காவரும்—இந்தத் திருநாமங்களை—இவர்களைத்தான் புதிய இத்தாலியினுடைய வளர்ப்புத் தாதிமார்கள் என்கிறார்கள். புதிய இத்தாலி ஒன்றை இன்றைக்கு நாம் காணமுடிகிறது.



**புதிய உலகம்-புதிய பிரச்னைகள்**

நெடுநேரம் கல்லறைகளுக்குப் பக்கத்திலே நாம் நின்றுகொண்டிருக்க முடியாது. புதிய உலகத்திற்கே வரவேண்டும். இத்தாலிநாட்டில் மிகப் புராதனமான ஒரு இடத்தில், அங்கேதான் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு—வேளாண்மைத் துறையினுடைய மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில் 117 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டிருக்கிறார்கள். இந்தியாவினுடைய தூதுக்குழுவின் சார்பில் நானும் கலந்து கொள்கிற வாய்ப்புப் பெற்றேன். எழில் நிறை—மாடம் ஒன்றின் மாடியிலே உள்ள மண்டபத்திலே—இந்த மாநாடு நடைபெற்றது. இந்த மண்டபத்தைச் சுற்றி அதன் மேல் மாடியிலே நின்று, நான் ஒருநாள் பார்த்தேன். பெரும் நீரோ மன்னன் என்று நாம் கேள்விப் படுகிறோம்: அந்த நீரோ மன்னன் ரோம் நகர் பற்றி எரிகின்ற காட்சியைக் கண்ட அந்த ரோமாபுரிக்குப் பக்கத்தில் இந்த அருமையான அழகான புதிய மாடம் இன்றைக்கு அமைந்திருக்கிறது. மறுபுறத்திலே திரும்பினால், காரக்கல்லா என்று ஒரு மன்னன்: அந்த மன்னன் நீராடும் தடாகங்கள் அமைத்து, உல்லாசமாக நீராடிக் கிடந்தானாம். அந்த இரண்டு கட்டிடங்களுக்கும் அதற்கு எதிராக பண்டைக் காலத்தில் ரோமாபுரி வீரர்கள் வெறித்தனமாக சிங்கத்திற்கும் புலிக்கும் மனிதனைப் பலியிட்டு மிருகங்களுடைய உணவுக்கு—பிரச்னைக்கு வழிதேடிய அதே ரோமாபுரி நகரத்தில், இனறைக்கு உலகினுடைய பல்வேறு நாட்டுப் பிரதிநிதிகள் உலகத்தினுடைய உணவுப் பிரச்னையைச் சமாளிப்பதற்காக இங்கே கூடினர்.

உணவு நெருக்கடி இன்றைக்கு உலகத்தில் ஒரு பயங்கரமான அறைகூவலாக இருக்கிறது. 117 நாட்டுப் பிரதிநிதிகளும் உலகத்திற்கு எவ்வளவு பெரிய பேரபாயம் நேர்ந்திருக்கிறது என்பதை உணர்ந்து ஒருவரோடொருவர் தங்களுடைய கருத்துக்களை இங்கே பரிமாறிக் கொள்கின்றனர் அதுவும் கடந்த இருபத்தைந்து ஆண்டுகாலமாக ஆப்பிரிக்க நாடுகள் பல,

**உணவு நெருக்கடி— ஒரு பயங்கரமான அறைகூவல்**

ஆசிய நாடுகள் பல,காலனி ஏகாதிபத்தியத்திடமிருந்து விடுதலை பெற்றதற்குப் பிறகு புதிய பொறுப்புகளும் புதிய நிலைமைகளும் அங்கெல்லாம் ஏற்பட்டிருக்கின்றன. உலகத்திற்கு வெளியே தெரிந்ததெல்லாம் புதிய ஆப்பிரிக்கா நாட்டில் விடுதலை பெற்ற சின்னஞ்சிறு நாடுகளில், ஆசிய நாடுகளில்—அங்கெல்லாம் ஜன

**ஒரு புறம் வளமும்**

நாயக முறைகளையும், அரசியல் முறைகளையும்—அவர்கள் பின்பற்றுகிறார்கள் : புதிய வாழ்க்கை முறையை அமைக்கிறார்கள் என்பதைத்தான் உலகம் தெரிந்திருக்கிறது. ஆனால் இவைகளுக்குப் பிறகு மௌனமாக ஒரு பெரும் புரட்சி அங்கே இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தந்த நாடுகள் தங்கள் தங்கள் மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக, இன்றைக்கும் பல்வேறு வகைகளிலே பொருளாதார முறையிலே செயல் புரிவதிலே ஈடுபட்டிருக்கிறார்கள்· உற்பத்தியைப் பெருக்கிறார்கள்· ஒரு போகத்தை இரு போகமாக்குகிறார்கள். உயர்ந்த ரக வித்துக்களையெல்லாம் பயிரிட்டுத் தங்கள் தங்கள் அனுபவங்களையெல்லாம் உணவு உற்பத்தி பெருக்கத்திற்காக வழங்குகிறார்கள்.

### சக்களத்திப் போராட்டம்

ஆனால், அதே நேரத்தில், வளர்கிற மக்கள் தொகை பிடிக்க முடியாத அளவிற்கு, கண்ணுக்கெட்டாத தூரத்திற்குப் போட்டி போடுகிறது. ஒரு சக்களத்

**என்றுள்ள நிலை, உலகின்**

திப் போராட்டமே உற்பத்திக்கும், வளர்கிற மக்கள் தொகைக்கும் நடைபெறுகிறது. இந்த மகத்தான பிரச்சினையை சமாளிப்பதற்குத் தான் 117 நாடுகள்—இன்றைக்கு இந்த மாபெரும் மாநாட்டிலே கலந்து கொண்டிருக்கின்றன. பல்வேறு நாடுகளுடைய பிரதிநிதிகள் தங்களது அனுபவங்களையெல்லாம் எடுத்துச் சொல்வதை நான் கேட்டேன். அவைகளிலிருந்து இந்தியாவும், குறிப்பாகத் தமிழகமும் பெற வேண்டிய எத்தனையோ நல்ல விஷயங்கள் நிச்சயமாக இருக்கின்றன.

### ஒளிமயமான எதிர்காலம்

நம்முடைய தமிழகத்தைப் பொறுத்த வரையில், நமது வாய்ப்புகள், நம்முடைய எதிர்காலம் மிகப் பிரகாசமானது என்றே எனக்குத் தோன்றுகிறது. தஞ்சைத் தரணியில் நாம் இன்றைக்கு மேற்கொண்டுள்ள விவசாயப் புரட்சி, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய ஆட்சியின்கீழ் இன்றைக்குத் தமிழகம் உணவுத் துறையிலே நடத்திச் செல்கிற முன்மாதிரி, இவைகளைப் பலரும் இங்கே பாராட்டினார்கள். நம்முடைய ஆடுதுறை—27 நெல்விதைகளைப் பற்றியும், ஒரு போகத்தை இருபோகமாக நாம் தஞ்சைத் தரணியிலே செய்வது குறித்தும், படியரிசித் திட்டம் குறித்தும், பலநாட்டுப் பிரதிநிதிகள் இங்கே பெரிதும் பாராட்டுகிறார்கள்.

பல்வேறு நாட்டுக்காரரும் தத்தமது அனுபவத்தை இங்கே எடுத்துரைக்கின்றனர். யூக்ரடிஸ், டைப்ரஸ் நதிக்கரையிலே இருந்த ஈராக் நாட்டுகாரர்கள் அரிசியைத் தாங்கள் எப்படி ஏற்றுமதி செய்கிறோம் என்று எடுத்துரைத்தார்கள். என்னை மிகவும் கவர்ந்தது, பிலிபைன்ஸ் நாட்டுக்காரர்கள் மீன்பிடிக்கும்

**ஒரு புறம் வறுமையும்**

துறையிலே நம் நாட்டார் எப்படி முன்னேறலாம் என்பதைப்பற்றி எடுத்துரைத்ததுதான்· அப்படி அவர்கள் எடுத்துரைத்த நேரத்தில், என்னுடைய உடலெல்லாம் சிலிர்த்தது. சூடான் நாட்டில் நைல் நதிக்கரையிலே இன்றைக்கு புதிதாக பல விவசாயப் புரட்சிகளை—நிலச் சீர்திருத்த முறைகளை ஈஜிப்ட் நாடும், சூடான் நாடும் மேற்கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு நாட்டாரும் தத்தமது அனுபவங்களை தத்தமருடைய முயற்சிகளை, இந்த அறைகூவலை சமாளிப்பதற்காக மேற்கொண்ட அருமையான அனுபவரீதியான முயற்சிகளை பல நாட்டாரும் எடுத்துரைக்கிற செயல்கள் இன்றைக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இவைகளிடையே இருந்து நாம் பெறுவதற்கு ஏராளமாக இருக்கிறது. உலகத்திலே இன்றைக்கு இதைச் சமாளிக்காவிட்டால், ஒருபுறம் வளம் ஒரு புறம் வறுமை என்று இரு பெரும் நிலைமை இருக்குமானால், சமாதானத்திற்கும்,

**அமைதிக்கே ஊறு விளைவிக்கும்**

ஒவ்வொரு நாட்டினுடைய அமைதிக்குமே இது அறைகூவலாகும். மனித சமுதாயம் தீர்க்கவேண்டிய அடிப்படை பிரச்னையாகும் இது என்பதை எல்லோரும், உலக உணவு மாநாட்டில் கலந்துகொண்ட அனைவரும், தெளிவாக உணர்ந்திருக்கிறார்கள்.”

—0—

# கிராம நலத் திட்டங்கள்

[மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி]

"ஏழை எளியவர் வாழ்வில் ஏற்றம்காணவேண்டும் என்ற நோக்கத்தோடு, பயனுள்ள திட்டங்களை, தமிழக அரசு உருவாக்கி நிறைவேற்றி வருகிறது. சிறப்பாக, இயற்கைச் சூழலில் வாழ்ந்து, உழைப்பையே பெரிதெனக் கொண்டிருக்கும் கிராமமக்களிடையே, முன்னேற்றம் ஏற்படச்செய்ய வேண்டியது மிகவும் அவசியம். ஏனெனில், நம் நாட்டில் வாழும் மக்களில் பெரும்பாலோர், கிராமங்களில்தான் வாழ்கின்றனர். எனவே கிராமங்களின் நல்வாழ்வுக்கான திட்டங்களை உருவாக்கும் பணி, உள்ளாட்சித்துறையில் முதலிடம் பெறுகிறது.

உள்ளாட்சித் துறையின் உறுப்புகளாக, ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகரியங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள், மாவட்ட வளர்ச்சி மன்றங்கள், மாநகராட்சி மன்றம் முதலிய பல்வேறு நிறுவனங்கள் இயங்கி வருவது, அனைவரும் அறிந்ததே.

இந்த உள்ளாட்சி நிறுவனங்கள் அனைத்தும், மக்கள் நலனுக்கான தலைமைப் பண்பையும் பொதுநலப் பணியையும் வளர்க்கும் பயிற்சி நிலையங்களாக விளங்கி வருகின்றன. இக்கருத்தை, அண்மையிலே நமது சென்னையில் நடைபெற்ற அகில இந்தியக் கருத்தரங்கு ஒன்றில், நான் தக்க எடுத்துக்காட்டுகளோடு விளக்கி கூறியதோடு, நமது நாட்டில் புகழ்பெற்ற தலைவர்கள் பலர், தொடக்க நிலையிலே, உள்ளாட்சித்துறையில் பணியாற்றிப்பயிற்சி பெற்றதைச் சுட்டிக்காட்டினேன். இந்திய நாட்டில் பல்வேறு மாநிலங்களின் உள்ளாட்சித்துறை அமைச்சர்களும் அதிகாரிகளும் கலந்து கொண்ட அந்தக் கருத்தரங்கும், மாநாடும், டிசம்பர் 8-ந்தேதி முதல் 11-ந் தேதிவரை, மத்திய அரசின் ஆதரவில் நடைபெற்றன. அச்சமயம், தமிழக அரசின் சார்பில் நானும், நமது மதிப்பிற்குரிய மேதகு ஆளுநர் சர்தார் உஜ்ஜல்சிங் அவர்களும், உள்ளாட்சித் துறையில் நாம் பெற்றுள்ள மேன்மையான சாதனைகளை, விரிவாக எடுத்துரைத்தோம்.

**முதலமைச்சரின் பிறந்தநாள் விழா காணிக்கை**

கிராம நலத்திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தும் பொறுப்பு, தமிழகத்திலே உள்ள 12881 ஊராட்சி மன்றங்கள், 438 பேரூராட்சி மன்றங்கள், 14 நகரியங்கள், 374 ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றைச் சாரும். அங்கங்கே வாழும் மக்களின் உடனடியாக தேவைகளுக்கேற்றவகையில் கிராமநலத் திட்டங்களை உருவாக்கும் முழு உரிமையும், இந்த நிறுவனங்களுக்கு உண்டு.

இவற்றில் உணவுப்பொருள் பெருக்கத்திற்கான திட்டங்களுக்கே, முதலிடம் தரப்பட்டுள்ளது. விவசாய முன்னேற்றத்திற்கான 'டிராக்டர்கள்' மற்ற உழவுக் கருவிகள் முதலியவற்றை, ஊராட்சி ஒன்றியங்கள் வாங்கி வைத்து குறைந்த வாடகைக்கு, எளிய விவசாயிகளுக்கு அளித்து உதவ ஏற்பாடாகி உள்ளது. தரிசு நிலங்களைச் செப்பனிடவும், பள்ளிக்கூடங்களையடுத்து காய்கறிகளைப் பயிரிட்டு மதிய உணவுத் திட்டத்தை மேலும் செம்மையான முறையில் நடத்தவும், 'ஓராண்டுத் திட்டம் ஒன்று' உருவாகியுள்ளது. நமது பேரன்புக்குரிய மாண்புமிகு முதலமைச்சரின் பிறந்தநாள் விழா காணிக்கையாக விளங்கும் இத்திட்டம், கிராம மக்களின் நலனுக்கு, உடனடியாக வழி வகுக்கும் என்பதில் ஐயமில்லை. இதை நிறைவேற்றுவதில், அனைவரும் உள்ளன்போடு பணியாற்றுவார்கள் என்று உறுதியாக நம்புகிறேன்.

கிராமங்களுக்குக் குடிநீர், சாலைவசதி, பள்ளிக்கூடம், ஆரம்ப சுகாதார நிலையம், மகளிர் மன்றம், செய்தி நிலையம், நீர்ப்பாசனம் முதலிய பல்வேறு வசதிகளை அளிக்க ஏற்பாடாகியுள்ளது. இதற்கான நிதி ஒதுக்கீடும், ஆண்டுதோறும் தரப்பட்டு வருகிறது. இத்திட்டங்களின் முன்னேற்றம், ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத்தலைவர்கள் ஆகியோரின் ஆர்வத்தையும் ஒத்துழைப்பையும் ஒட்டியே அமையும். இவை தவிர, பிற்போக்கான பகுதிகளுக்குச் சிறப்புத் திட்டங்களும் நிறைவேறி வருகின்றன. மலைவாழ் மக்களின் முன்னேற்றத்திற்காக, மத்திய அரசின் உதவியுடன், சிறப்புத்திட்டம் ஒன்று, கொல்லிமலை, ஏர்க்காடு ஆகிய வட்டாரங்களில் நடைபெற்று வருகிறது. தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள 'கல்ராயன்குன்று' வட்டாரத்திலும், இதைச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் கிராம மனித சக்தியைப் பயன்படுத்தும் திட்டம் 72 வட்டாரங்களிலும் சத்துணவுத் திட்டம் 9 வட்டாரங்களிலும் நடைபெறறு வருகின்றன.

[28-ம் பக்கம் பார்க்க....]

உலகத் தமிழ் மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு, முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் அரசினர் கோட்டத்தில் 1968-ம் ஆண்டு ஜனவரி மாதம் 11-ம் தேதி ஒரு விருந்தளித்தார். அப்போது, தேங்காய் மூடியிலான மலர் வைப்புப் பொருளும், குங்குமம் வைக்கும் சிமிழும், உலகத் தமிழ் மாநாட்டுக்கு வருகைபுரிந்த வெளிநாட்டு அறிஞர்களுக்கு, கிராம வளர்ச்சித் துறையின் பரிசாக, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு *முத்துசாமி* அவர்களால் மாண்புமிகு முதலமைச்சர் மூலமாக, பரிசாக அளிக்கப்பட்டன. [படம் : மூன்றுவது அட்டைப்பக்கம் பார்க்கவும்]

*மூன்று கண்களும் முத்தமிழும்*

உலகத் தமிழ் மாநாட்டின் வெற்றிக்குழைத்தவர்களைப் பாராட்டி பொற்பதக்கங்களை அண்ணா அவர்கள் வழங்கினர். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் *திரு கருணாநிதி* பேசும்போது குறிப்பிட்டதாவது:—

''உலகத் தமிழ் மாநாடு எனும் பெயரில் இரண்டு மாநாடுகள் இங்கு ஒரே நோக்கத்துடன் நடைபெற்றன. கள் தரப்பட்டன. அந்தத் தேங்காயில் மூன்று கண்கள் இருக்கின்றன. அவை முத்தமிழை நமக்கு எடுத்தோதுகின்றன'' என்றார்.

மலேசிய பிரதிநிதியான அந்நாட்டுச் செனட்டர் திரு ஆதிநாகப்பன் அவர்கள் பேசுகையில்,

# உலகத் தமிழ் மாநாட்டுக்கு வருகை தந்த

# வெளிநாட்டு அறிஞர்களுக்கு

தமிழரின் வாழ்வு அகம்—புறம் எனப் பிரிக்கப்பட்டு, அந்த அகமும் புறமும் இணைந்த வாழ்வைத்தான் வாழ்ந்தார்கள். அவ்விதம் இம் மாநாட்டுக்கும் அகக்குழு—புறக்குழு என அமைந்தன. அகக் குழுவின் சார்பில் வெளிநாட்டறிஞர்களை அழைத்து தமிழ் ஆராய்ச்சி நடத்தப்பெற்றது. தீவுத்திடலில் அமைந்த பூம்புகார் மாநாட்டில் தமிழ்ச் சான்றோரும் தமிழறிஞர்களும் கூடிப் பேசினர்கள். அதனால் மக்களும் பயன்பெற்றார்கள்.

வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு தேங்காய் மூடியிலான கலைப் பொருட்

பிஜித் தீவைச் சேர்ந்த *திருமதி சந்திரா முருகேசனுக்கு*, அப்பொருட்களை, மாண்புமிகு உணவமைச்சர் *மதிபழகன்* அவர்கள் வழங்கினர். நன்றியுரை கூறிய திருமதி சந்திரா முருகேசன் ''பிஜித் தீவில் தமிழ் மக்கள் தமிழ் அறியாத நிலையில் இருப்பதைக் கண்டேன். அவர்கள் எல்லாம் தமிழ் கற்க, அண்ணா அவர்கள் உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்'' என்றார்.

*சோவியத் நாட்டின் பரிசு*

சோவியத்நாட்டின் சார்பில், ருஷ்ய மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட பாரதியார் நூல் ஒன்று அறிஞர் அண்ணா அவர்களுக்கு அளிக்கப் பட்டது.

இலங்கையிலிருந்து வந்த பிரதிநிதி *திரு தம்பய்யா* பேசுகையில்,

''இலங்கையில் நாங்கள் இருந்தாலும், தமிழ்த்தாயின் பிள்ளைகள்தான் நாங்கள். இலங்கையின் பெரிய மதமான புத்த மதத்தினை தோற்றுவித்த புத்தரைத் தந்தது இந்நாடு. எங்களுக்கு மொழியைத் தந்தது இந்நாடு. தமிழர்கள் தங்கள் தாய்க்கு அடுத்தபடியாக தாய்மொழியை உயிரினும் மேலாகக் கருதுகிறார்கள்' என்று குறிப்பிட்டார்.

'' அகவேலை—புறவேலை என இரண்டு உண்டு. அந்த அகவேலை— உலகத்தமிழ்க் கருத்தாராய்ச்சி அரங்கில் நடைபெற்றது. புறவேலை பூம்புகார் நகரில் நடைபெற்றது. அங்கு இலட்சக் கணக்கில் தமிழர் கூடி உரை கேட்டது, உலகத்திலேயே உன்னத நிகழ்ச்சியாகும். இதுவரை இப்படியொரு நிகழ்ச்சி நடந்ததில்லை எனக் கூறத் தகுந்தது ஆகும். அடுத்த மாநாடு பாரிசிலும், அதற்கடுத்த மாநாடு, இலங்கையிலும் நடைபெற இருக்கின்றன. அதற்கடுத்து மலேசியாவில் நடைபெற இருக்கிறது. அந்த மாநாட்டிற்கு வருக என அனைவரையும் அழைக்கிறேன்'' என்று அழைப்பு விடுத்தார்.

இலங்கையின் சார்பில் முதலமைச்சருக்குப் பரிசுப் பொருள்கள் அளிக்கப்பட்டன.

விருந்திற்குப் பிறகு உலகத் தமிழ்க் கருத்தரங்கின் பொருளாளர் திரு வி. எஸ். *தியாகராஜன்* அவர்கள்,

# கிராம வளர்ச்சித் துறையின் பரிசு

முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சரவையிலுள்ள அனைவருக்கும், மற்றும் ஆர்வத்தோடு ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றி கூறினர்.

---

முதல் அட்டைப்படம் : உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி நடைபெற்ற ஊர்வலத்தில், '' பண்டைத் தமிழகத்திலே மாடு கட்டிப் போரடித்தால் மாளாது என்று யானை கட்டிப் போரடித்த '' காட்சியைச் சித்தரிக்கும் அலங்கார வண்டி.

G.N.—3A

## "புகாரில் ஒரு நாள்"

**பேராசிரியர் திரு மா. கி. தசரதன்**

(கவிதை ஆய்வுக் குழுத் தலைவர்.)

உலகத் தமிழ் மாநாட்டினை ஒட்டி அறிஞர் அண்ணா அவர்கள் கவிதைப் போட்டி ஒன்றனை அறிவித்தார்கள். 'புகாரில் ஒரு நாள்' எனும் தலைப்பினையும் தந்தார்கள்; இளங் கவிஞர்காள், எழுதுக பாடல்! என்றார்கள். கவிஞர் பலர் கற்பனைத் தேர் ஏறிக் கவிதை யுலகில் பறந்தனர். சுமார் ஆயிரத்திருநூறு பாடல்கள் வந்து குவிந்தன.

வந்த பாடல்களின் வரிசையறியும் பணியை மேற்கொள்ளக் குழு ஒன்று அமைக்கப்பெற்றது. கவிதையில் ஈடுபாடு கொண்ட புலமை சான்ற பலர் அக்குழுவின் உறுப்பினர்களாக இடம் பெற்றனர். யான் அக்குழுவின் தலைவனாகும் பேறு பெற்றேன்.

கவிதைகள் அனைத்தையும் யாப்பிலக்கணச் சல்லடையிட்டுச் சலித்தோம். தேறிய பாடல்களைத் தெரிந்தெடுக்கும் பணியில் குழுவினர் பல நாட்கள் ஈடுபட்டனர்; முடிவு: மூன்று கவிதைகள் பரிசுக்குரியனவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

கவிஞர் ஏ. சண்முகம் அவர்கள் முதலிடத்தைப் பெற்று அறிஞர் அண்ணா பரிசு பெறுகின்றார்; கவிஞர் ஞானச்செல்வம் அவர்கள் இரண்டாம் பரிசும், புலவர் ந. சந்தானம் அவர்கள் மூன்றும் இடமும் பெறுகின்றனர்.

இம்மூன்று கவிதைகளோடு பாராட்டுக்குரிய சில கவிதைகளையும் சேர்த்து, "புகாரில் ஒரு நாள்" எனும் கவிதைத் தொகுப்பு உருவாகியுள்ளது. பரிசும் பாராட்டும் பெறுபவையல்லாது எஞ்சிய கவிதைகளில் சுவையான பகுதிகளை எடுத்துத் "தேன் துளிகள்" என்ற தலைப்பில் சேர்த்துள்ளோம்.

இப் போட்டியை அறிவித்து ஊக்கமூட்டிய உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு மா. முத்துசாமி அவர்கட்கும், இளங் கவிஞர்களுக்கு வாழ்த்துரைத்துள்ள முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கட்கும் தமிழ் இலக்கிய உலகு என்றும் நன்றி செலுத்தும்.

## கவிதைப் போட்டி முடிவுகள்

உலகத் தமிழ் மாநாட்டினை ஒட்டி "புகாரில் ஒருநாள்" என்ற தலைப்பில் நடத்தப்பெற்ற இளங் கவிஞர்களுக்கான கவிதைப் போட்டிக்கு ஏறத்தாழ 1200 கவிதைகள் வந்தன. பேராசிரியர் திரு மா. கி. தசரதன் தலைமையில் கவிதை ஆய்வுக் குழுவினர் அக் கவிதைகளை ஆராய்ந்து கீழே காணும் பத்து கவிஞர்களின் படைப்புக்களைப் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரியதெனத் தெரிந்தெடுத்தார்கள்:—

**முதல் பரிசு :**

திரு ஏ. சண்முகம், குருவிக்கரம்பை, பட்டுக் கோட்டை.

**இரண்டாவது பரிசு :**

புலவர் திரு கோ. திருஞானசம்பந்தம், திருவாரூர்.

**மூன்றும் பரிசு :**

புலவர் திரு ந. சந்தானம், கும்பகோணம்.

**பாராட்டுக்குரியவர்கள் :**

திருவாளர்கள் இரா. முத்துலிங்கம், சைதை.

,, சக்கரைப் புலவர், வெள்ளக்கோவில், ஈரோடு.

,, க. நெடுஞ்செழியன், மாநிலக்கல்லூரி, சென்னை.

,, அம்பிகைபாகன், தெல்லிப்பழை, இலங்கை.

,, புலவர் ஆர். கே. நாராயணசுவாமி, நாகப்பட்டிணம்.

,, வி. நாகராசன், யாழ்ப்பாணம், இலங்கை.

,, புலவர் கி. வேங்கடசுவாமி, அவிஞசி

முதல் மூன்று கவிஞர்கள் தங்கப் பதக்கம் பெற்றனர். ஏனைய எழுவர் பாராட்டுப் பெற்றனர்.

பரிசளிப்பு விழா "தீவுத்திடலில்" சனவரி 10-ந் தேதி நடைபெற்றது.

# பொன் மலர்

**மாண்புமிகு திரு மா. முத்துசாமி**

மலர்க்குழுத் தலைவர்,

உள்ளாட்சித்துறை அமைச்சர்.

"எழுத்தில் பேச்சில் இனிப்புக் கரும்பை
வழங்கும் அண்ணா! வண்டமிழ் அன்னை
மணிவயிற் றுதித்த மாண்பார் தலைமகன்
அணிதமிழ்மா நாட்டை யொட்டியோர் அறிவிப்புச்
செய்தனர்! அதுதான்...... ...... ....
நெய்யுங் கவித்தொழில் நிகழ்த்தும் நெஞ்சினர்
பூம்புகா ரிலொருநாள் என்னும் பொருளில்
தீஞ்சுவைக் கவிதை தேனூறு வரிகளில்
ஆக்கி யனுப்பினல் அதன்திறம் தேர்ந்து
தங்கப் பதக்கம் தருவோம் என்பது!
வேண்டுகோள் பலர்க்குத் தூண்டுகோ லாக
ஆயிரத் திருநூறு பாக்கள் வடித்து
அனுப்பினர்; சிலசில அலைகடல் கடந்து
வந்தன; வன்சிறைக் கோட்டக் கம்பிகள்
கடந்து வந்தன சிலசில! கற்றோர்
ஆய்வு மேடையை அடைந்து நின்றே
அழகும் திறமும் காட்டின! ஆய்ந்தோர்
பழக்குலைக் கவிகளில் பரிசுக் குரியதை
நன்காய்ந் தெடுத்து நல்கினர்.
பரிசு பெற்றிடும் பாகுப் பாடலும்
பாராட் டடையும் பலாச்சுளைக் கவிகளும்
தேன்துளி யாகிடும் தித்திப்பு வரிகளும்
சுவடி வடிவிலே சுடர்விட லாயின!
அண்ணா அளிக்கும் அருமைப் பதிகமும்
கருணா நிதியார் கவிதை முகமனும்
இந்நூல் சிறப்பை ஏற்றி யுள்ளன!
அறிவிப் புதவியும் அருங்கவி கண்டு
தங்கப் பதக்கம் தந்தா தரித்தும்
உருக்கொளும் இந்நூல் கருக்கொளக் காரணம்
ஆகிய அண்ணா அழகு மலரடி
தன்னில் இந்தப் பொன்மலர் தன்னைப்
படைத்தேன்! மகிழ்ச்சி படைத்தேன்."

"புகாரில் ஒரு நாள்" மலரிலிருந்து.

முதற் பரிசுக் கவிதை :

# புகாரில் ஒரு நாள்

(கவிஞர் ஏ. சண்முகம்)

மணிமிக உடையன கதிர்நிறைந் திடுவன கலம்பல விளைவன வயல்,
வணிகமே புரிபவர் கலங்களில் உலவிட மறிபல உடையது கடல்,
மணமிக உடையன மலர்மிகுந் திடுவன மனம்கவர்ந் திடுவன பொழில்,
அணிமிக உடையன விறல்கவர்ந் திடுவன பலபல நிறைந்தது புகார் !

உடலிடை உளமென உலகிடை இலங்கிய உயர்திறம் உடையது புகார்,
படைபல உடையராய்ப் படிதனை அடையினும் பகைவரும் இந்நகர் புகார்,
இடமிலை எனுமொழி இயம்பிடில் இருந்தவர் புவிதனில் வேறிடம் புகார்,
கடலிடைப் புகுந்தது கனவென அழிந்தது கவிதனில் நிலைத்தது புகார் !

அன்றொரு நாள் :

மேகத்தைச் சென்று கூடும் மிக்குயர் கமுகின் உச்சி
தோகையை விரித்தங் காடும் மயிலெனத் தோற்றம் நல்கும்
வேகமாய்க் கடற்க ரைக்கு விரைந்திடு நாவாய் எல்லாம்
மேகத்தின் மேலு யர்ந்த கலங்கரை விளக்கம் மின்னும் !

கதிரவன் பொன்னி றத்தைக் கடலினில் வீசித் தோன்ற
எதிரவண் மருவூர்ப் பாக்கம் பொற்பணி செய்வோர் வீதி
பதிலுக்குப் பொன்னி றத்தைப் பளபள வென்றே வீசும்
அதிசயம் எங்கு மில்லா அதிசயம் அங்கே கண்டார் !

கூடங்கள் விண்மீன் வானம் ! கொடிகளும் மணியும் தொங்கும்
மாடங்கள் நிலவுப் பந்தல் ! மங்கையர் மாருக் காதல்
பாடங்கள் நிறைந்த ஏடு ! பரிதியின் வரவைக் கண்டு
கூடித்தான் அவர்கள் பாடும் கொம்புத்தேன் பாடல் உண்டு

காண்பவர் வியக்கும் வண்ணம் கடற்கரை ஓர மாக
மாண்புசால் யவன ரோடு வணிகர் பிறரும் வந்தால்
நான்வர வேற்பேன் என்று நல்லவர் உள்ளம் போல
வான்வரை ஓங்கி நின்ற மாளிகை யதனில் புக்கார் !

சாலையில் கஞ்சி யாறு தான்நடக் கவண்டு பாடும்
சோலையின் மரங்கள் யாவும் சந்தனக் கடையின் தூண்கள் !
காலையில் தொடங்கும் நாளங் காடியில் மணியும் முத்தும்
மாலைகள் ஆகித் தொங்கும் மணவறை போல மின்னும் !

வணிகமே செய்ய வந்த அயலவர் தெருவில் வந்து
மணிகளின் குவியல் கண்டார் ! மலைகளோ எனவி யந்தார் !
அணிகள், பொன் னுடை கண்டார் அசைந்திடும் காற்றை ஒத்த
துணிகளும் மணியின் வீச்சால் சுடர்விட மயங்கி நின்றார் !

மாம்பழ நிறத்தை ஒத்த வடமலைப் பொன்னைக் காட்டித்
தாமவலே பகர்வோர் ஓசை ! தண்மதி நிறமுத் தாலே
ஆம்பலவாய் திறந்த வண்ணம் அதைவிலை கேட்போர் ஓசை !
பூம்புகார்க் கடலைப் போலப் பொழுதெலாம் ஒலித்தி ருக்கும் !

வடவரை வென்று வேந்தன் வாங்கிய முத்துப் பந்தர்
உடன்திகழ் நல்ல பட்டி மண்டபம் ஒருங்கே சோழன்
அடிதனில் பகைவர் வைத்த தோரண வாயில் கண்டு
படிதனில் மிக்கு யர்ந்த பட்டினம் புகாரே என்றார் !

நிலையிலாச் செல்வம் தன்னை நிலையென எண்ணித் தானே
அலைகடல் தாண்டி வந்தீர் அள்ளியே கொள்வீர் என்று
கலைகளால் உயர்வு பெற்ற காவிரிப் பட்டி னத்து
நிலமகள் சுமந்து நின்றாள் நீங்காத செல்வம் தன்னை !

பன்னிற மலரின் கூட்டம் பார்ப்பவர் விழியை ஈர்க்கும் !
செந்நிறப் பவழக் கோவை சிந்தையைச் சேர்த்தி ழுக்கும் !
கண்கொளாக் காட்சி அவ்வூர்க் கடைத்தெருக் காட்சி வேற்றார்
மண்கொளப் புகுதற் கஞ்சும் மன்னவன் ஊரின் மாட்சி !

புலிக்கொடி ஏந்தி நின்ற புகாரின்நல் வேந்தன் வாளால்
பலிக்கொடி யாகிப் போன பகைவரின் கொடிகள் எல்லாம்
எலிக்கடி பட்ட ழிந்த எளியவர் துணிகள் போல
வலைக்கொடி யாகி நிற்க வணங்கினர் கப்பம் கட்டி !

தேர்ந்தடம் பதிந்த வீதி ! திருநாட்டின் வேந்தன், வீரர்
ஏர்த்தொழில் வல்லார், ஆடல் இயற்றுவோர், வணிகர் வாழ
நீர்த்துளி நங்கை ஈன்ற நிகரிலா வான வில்போல்
போர்த்தொழி லாளர் செங்கைப் போர்வில்லும் வாளும் மின்னும்

பட்டினப் பாக்கம் வேற்றூர்ப் பட்டினிக் காரர் வந்தால்
பட்டினைப் பொன்னை நல்கிப் பசியையும் போக்கும் பாக்கம்
பட்டினப் பாக்கம் பண்பார் மருத்துவர் கலையால் திக்காம்
எட்டிலும் புகழைப் பெற்றார் இலங்கிடும் பாக்கம் தன்னில்

கணிகையர் இருப்பி டத்தில் காண்பவர் வியக்கும் வண்ணம்
மணிகளால் அழகு செய்த மாடியின் நிலாமுற் றத்தில்
வணிகனின் மைந்த னான கோவலன் வரவை வேண்டி
இனியசொற் கடிதம் தீட்டி ஏமாற்றம் பெற்ற தாலே

மலையினில் பிறந்து நல்ல மண்மிசைத் தவழ்ந்து பாடும்
அலைகடல் கலந்த பொன்னி ஆற்றினைப் போல ஆடற்
கலையினில் தேர்ச்சி பெற்றுக் கலைகடல் கலந்த தாலே
தலைக்கோலாம் பட்டம் பெற்ற மாதவி தவித்தி ருந்தாள் !

அதே நேரத்தில் மற்றொரு புறம் :

கண்டதோர் கனவைக் கூறிக் கண்ணகி கலங்கும் காலை
பண்டையோர் நோன்பு பொய்த்தாய் பயன்பெறக் காம வேளைச்
சென்றுமே தொழுவோம் என்ற தேவந்தி சொல்ம றுத்து
நன்றல என்றி ருக்கக் கோவலன் வந்தான் நாடி !

வறுமையைக் காணு ஊரில் வறுமையைப் பெற்ற தாலே
சிறுமையாம் வெம்மை பெற்றேன் செல்வமே ! நிழலே ! என்றான்,
பெருமையில் நிகரில் லாத சிலம்புள பெறுவீர் என்றாள் .
மறுமுறை செல்வ னாக மதுரைக்குச் செல்வோம் என்றான் !

அனில்வாலைப் போன்ற மீசை அமைந்தநற் புலவர் நெஞ்சம்
பணிந்துபோய் உறங்கும் நேரம் ! பால்நிலா வானில் வந்து
தணிந்திடா ஆசை யாலே தன்முகம் பொன்னி யாற்றின்
மணிநீரில் பார்த்து விட்டு மயங்கியே மறைந்த நேரம்

பூம்புகார் தன்னை விட்டுப் போகின்றார் இருவர் அந்தோ !
தேம்பியே கடல மைக்கச் செல்வச்சீர் குடியின் றாரைப்
பூம்புகார் மண்ண ழைக்கப் பூங்காற்றும் தான ழைக்க
மாம்பிஞ்சு வடுக்கண் ணாளாம் மாதவி யாழ் அழைக்க.

தீம்புனல் பொன்னி யாற்றின் திரையெலாம் அழைக்கக் கொங்கைக்
காம்பினை மயங்கி விட்ட கடும்பசிக் குழந்தை யைப்போல்
பூம்புகார் தன்னைச் செல்வ புரியினை விட்டுச் சென்று
நாம்இனி வாழ்வோ மென்றார் ! நடக்கின்றார் முடிவை நோக்கி !

பிறநாட்டு வணிகர் வந்து பெரும்பொருள் ஈட்டிச் செல்லத்
திறல்நாட்டு வணிகன் மைந்தன் திருவினைத் தேடற் கென்று
புறநாட்டிற் போன வந்நாள் பூம்புகார் வரலாற் றின்கண்
கறைபட்ட ஒருநாள் துன்பக் கண்ணீரைத் துடைப்ப தென்றோ ?

**இரண்டாவது பரிசு பெற்ற கவிதை:**

# கண்டதெல்லாம் கனவு

[புலவர் கோ. திருஞானசம்பந்தன்]

காவிரிப்பூம் பட்டினத்துக் கடற்கரையில் அன்றொருநாள்
பூவிரியும் சோலைகளின் புதுமணத்தை அள்ளியுண்டு
மாலைப் பொழுதினிலே மணற்பரப்பின் மேலமர்ந்து
தாலை அசைத்தொரு தமிழ்ப்பாட்டுப் பாடலுற்றேன்
பாட்டின் சுவையாலோ பைந்தமிழின் திறத்தாலோ
கூட்டும் எழிலெல்லாம் கொண்டவிளம் பெண்ணொருத்தி
இளநகை காட்டியென்றன் எதிரிலே வந்துற்றாள்!
குளக்கமல முகமலரக் கொவ்வை இதழ்துடிக்க
வணக்கம் எனவுரைத்து வளக்காந்தள் கரங்குவித்தாள்!
இணக்கமுறும் அவளழகில் ஈடுபட்டுப் பேசலுற்றேன்;
“பெண்ணரசே! பேரெழிலே! பேசும்பொற் சித்திரமே!
விண்ணரச மகளோநீ? விளங்கவுரை” யென்றேன்.
“பூம்புகார் மங்கையான் பொய்யுரையேன் உமக்கிந்தப்
பூம்புகார்ச் சிறப்பெல்லாம் புலப்படுத்த வந்தேனல்!”
“நல்லதம்மா நானுமொரு நற்றுணையைத் தேடித்தான்
மெல்ல இவணிருந்தேன் மெல்லிழையே நன்றி”யென்றேன்
“வீண்பேச் சினியெதற்கு? விண்டுரைக்க மாட்டாத

மாணுயர்ந்த பூம்புகார் மாண்புகளைக் காட்டிடுவேன்;
பட்டினம் என்றாலே பூம்புகார்ப் பட்டினந்தான் !
தட்டில்லை ! தடையில்லை ! தவறில்லை ; ஆதலினால்
இந்நகரார் வாழ்வதற்காய் எவ்வூரும் புகாரே !
என்பதன்றோ இவ்வூருக் கேற்ற பெயராகும் !
எழிலின் திருவுருவாய் எழிசைக்கு நாயகியாய்
அழிவறு கூத்தியலின் ஆரணங்காய் அரங்கேறிப்
பண்ணுன்கும் கூத்துப் பதினொன்றும் திறங்காட்டி,
கண்டார்கள் உள்ளமெல்லாம் கவர்ந்த கலையரசி !
கானல் வரிபாடிக் காதலனைத் தானிழந்தாள்
தானோர் பிழையறியாள் தகவுடைய மாதரசி
மாதவியாள் நடமிட்ட மாமலர்ப்பூஞ் சோலையிது !
காதம் பலகடந்து கலங்கள் பலவந்து
நிற்கும் துறைபாரீர் ! நெடுங்கலங்கள் கொண்டுவந்த
முத்தும் பிறபொருளும் மொய்த்துள்ள திறம்காணீர் !
கொண்டுவந்த பொருள்மீது குத்துகிறார் புலிச்சின்னம் !
பண்டங்கள் கொண்டுசெலும் பரந்த கலமிவையாம் !

ஆங்கொருபால்,

காவிரிப்பெண் தன்கணவன் கடலோடு கலப்பதுவும்
மேவுகடல் அலைக்கரத்தால் மெல்ல அணைப்பதுவும்
கண்டீரோ" என்றென்னைக் கடைக்கண்ணால் தான்கண்டாள்!
"கண்டேன்" என்றவள் கண்களையே யான்கண்டேன்!
"இருபத்தொரு நாட்கள் இந்திர விழாநிகழும்
பெருநகரை இருபிரிவாய்ப் பேசுதலும் அறியீரோ ?
மருவூர்நற் பாக்கமிது மாநகரின் ஒருபிரிவு:
பெருநிலா முற்றமொடு பேசுமெழில் மாளிகைகள்
பயன்தொலை யறியாத பல்யவனர் இருப்பிடங்கள்
நயத்தபல நாட்டினர்கள் நன்குசெறி கரையிருப்பு!
சுண்ணமும் சாந்ததுவும் சூழ்புகையும் பூவுடனே
வண்ணமும் விற்போர்கள் வந்துலவும் பெருந்தெருக்கள்!
பட்டெலி மயிராடை பருத்தியுடை நெய்வார்கள்
இட்டமுறு பொன்னும் எடுத்தபிற மணிவகையும்
சந்தனமும் அகிலுமெனச் சார்ந்த வளப்பொருள்கள்
இந்த அளவினதென் றெண்ணிரிய மறுகுகளும்
எண்வகைக் கூலங்கள் இனிதுவிற்கும் அங்காடி
இன்னபிற சூழ்ந்துள்ள இப்பகுதி நீங்கிடுவோம்!.

அப்பாலே

பட்டினப் பாக்கமுண்டு பார்த்திடுவோம் வாரீரோ!
கட்டிடம் பலசார்ந்த கடிநகர்ப் பகுதியது!
அரசப் பெருந்தெருக்கள் அருமறையோர் உறைவிடங்கள்;
பரசும் பெருவணிகர் பல்குமெழில் மாளிகைகள்;
தேரோடும் வீதிகளும், திருமணிகள் குயிற்றுநரும்,
பார்காக்கும் உழவினரும், பல்பிணியும் தீர்ப்பவரும்
நேருறவே சோதிடங்கள் நிலமொழியாற் கூறுநரும்
ஏருறவே சித்திரங்கள் இனித்தமுடைச் சிற்பங்கள்
வல்ல பெருங்கலைஞர் வாழ்கின்ற வளமனைகள்
பல்லியுள வீதிகளும் பார்த்து மகிழ்ந்திடுவீர்!
இவ்விரண்டு பாக்கங்கள் இடைப்பட்ட பெருநிலத்தில்
செவ்வியநா ளங்காடி திகழும் வகைகாணீர்!
அல்லங் காடியென அமைந்த இராக்கடைகள்
பல்பொருளும் கொண்டுதிகழ் பான்மையினைக் காண்பீரே!
அங்காடி வாயிலுற்ற அழகார் திரைச்சீலை
இங்கிந்தப் பொருளுண்டென் றியம்பும் திறமென்னே!

இவையன்றி,

முத்துநற் பந்தரொடு பட்டியுரை மண்டபமும்
வாயிலின் தோரணமும் வரிப்பொருளாய்க் கரிகாலன்
பெற்றுவந்த புகழ்க்குரிய பீடுகெழு சின்னங்கள்
உற்றிங்கே திகழ்கின்ற உயர்வுதனை என்சொல்வேன்!
கள்வோரைப் பிடித்தவர் கழுத்தில் சுமையேற்றும்
வெள்ளிடை மன்றமெனும் வியப்புடை மன்றமுண்டு!
கூனர் தொழுநோயர் குளத்தில் முழுகிவந்தால்
ஈனம் தனையொழிக்கும் இன்னிலஞ்சி மன்றமுண்டு!
நஞ்சுண்டார் பேயுற்றார் நாடி வலம்வந்தால்
விஞ்சு துயர்நீக்கும் நீணெடுங்கால் மன்றமுண்டு!



பொய்த்தவ வஞ்சரையும், பொய்யொழுக்கப் பெண்டிரையும்,
பொய்க்கரி புகல்வரையும், பிறர்மனை நயப்பரையும்
துணிவுடனே வஞ்சிக்கும் தூய்மையிலா அமைச்சரையும்
பிணித்துக் குரலெழுப்பும் பெரும்பூதச் சதுக்கமுண்டு!
அரைசுநெறி தான்தவறின் அறங்கூறும் அவையத்தார்
உரைசிறிது கோடினும் உள்ளம் மிகவருந்திக்
கண்ணீரைச் சிந்தித்தன் கருத்தைப் புலப்படுத்தும்
பண்பில் திரியாத பாவைமன்ற மிங்குண்டு.
நாமினிமேல்,
மக்கள் பலர்வாழும் மறுகுகளைச் சென்றடைவோம்;
தக்கநற் பட்டாடை தமைக்களைந்து பருத்தியுடை
பூண்ட இவரெல்லாம் பொங்கும் நிலாவழகில்
தூண்டும் மகிழ்வினராய்ச் சிவல், கடா, மோதவிட்டும்
மற்போரில் ஈடுபட்டும் மனம்துள்ளக் கடல்படிந்தும்
உறசாக முடன்வாழும் ஒப்பரிய காட்சியிதே!"
என்றுரைக்க, நானுந்தான் "எந்திழையே நீயெனக்கே
என்றுந் துணையாவாய்" என்றுசொல்லி அணைத்திட்டேன்;
'ஒன்றுமில்லை'—வெறுந்தரையில் உருண்டு கிடந்தேனல்!
கண்டதெலாம் கனவென்று கருத மனநெகிழ்ந்தேன்!
பூஞ்சோலை தானில்லை; பொட்டல் மணல்வெளிதான்!
மாஞ்சோலை, மாளிகைகள், மாடங்கள் ஏதுமில்லை!
விண்ணை மறைப்பதற்கோர் மேற்கூரை யில்லாது
கண்ணகி சிலையொன்று கவினிழந்து நிற்பதுவும்
சீர்நகரம் இன்றோர் சிற்றூராய் நிற்பதுவும்
யாரிடத்துச் சொல்லிடுவேன் யான்!

# கவிப் பூச்சொரிய வழிவகுத்தார்!

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

திரு மு. கருணாநிதி,

'புகாரில் ஒருநாள்' என்றே
போட்டியை மூட்டிவிட்டு—பூம்
புகார்த் தமிழ் மாநாட்டில் - கவிப்
பூச்சொரிய வழிவகுத்தார்!—வாழ்க நன்று!

புதுநிலம் பிடிக்க எண்ணும் பகைவர் புகார்
—ஆயினும்
புகுந்துவிட்ட கடல் அலையின் ஆட்சிதான்
—இன்று அங்கே!

சமுத்திரத்தின் மடிதனிலே தூங்கிக்கொண்டு
சரித்திரத்தின் வரிகளிலே நடம்புரியும்
—பூம்புகாரே! உனைக்
கவித்திறத்தார்கொண்டு வந்தார் எம் எதிரே!
—என் வாழ்த்து!

(" புகாரில் ஒரு நாள் " மலரிலிருந்து)

உலகத் தமிழ் மாநாட்டுக்கு வருகை தந்த தமிழ்ப் பேரறிஞர்கள் தமிழகத்தின் பல பகுதிகளைக் காணச் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. சென்னையில் தமிழ் மாநாட்டு நிகழ்ச்சிகள் முடிந்ததும், 11-1-1968 இரவு 11-45 மணிக்கு சென்னை எழும்பூர் ரயிலடியில் தனி ரயில் அவர்களை ஏற்றிச்செல்ல தயாராகக் காத்திருந்தது.

# ... அறிஞர் பெருமக்களுடன் ஆறு நாட்கள் ...

[மாணவர் தலைவர் திரு இரா. சனார்த்தனம்]

### அறிஞர் அண்ணாவின் பரிசு

அன்று இரவு தமிழக முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா, வெளிநாட்டுத் தமிழ் நல்லோருக்கு நல்லுணவு அளித்து, சுவைமிகு உணவோடு கலைநயமிகு நினைவுப் பரிசும் கொடுத்து வழியனுப்பி வைத்தார். தேங்காய் ஓட்டால் செய்யப்பட்டு, வேலைப்பாடமைந்த தமிழக கைத்தொழிற் சிறப்பையும் கற்பனை வளத்தையும், எடுத்துரைக்கத்தக்க கலைப் பொருளை வழங்கி அன்பு நினைவாக்கினார்.

தனி ரயிலில், அனைத்தும் முதல் வகுப்புப் பெட்டிகளில், இருநூறு பேரடங்கிய நல்லோர், தமிழ் நாட்டு வளம் காணப் புறப்பட்டனர். சிற்றுண்டி தயாரித்து வழங்கப் பணியாட்களும், உடல் நலம் பேண டாக்டர்களும், உதவி புரிய அலுவலர்களும், பயண ஏற்பாடுகளைக் கவனிக்கப் போக்கு வரத்துத் துறை தனி அலுவலரும் துணையாக இருந்தனர்.

### தில்லைக் கூத்தனின் திருப்பதியில்....

முதலில் சிதம்பரம் நோக்கிச் சென்ற நாங்கள், விடியற்காலை விழித்தபோது எதிரே மாபெரும் வரவேற்பைச் சந்தித்தோம். மாலைகளோடு மாவட்ட ஆட்சித் தலைவரும், மற்றும் பல அலுவலரும், மாணவர்களும் மக்களும், அரசியல் கட்சித் தலைவர்களும் அன்போடு வரவேற்றனர். வரவேற்பு வேட்டொலி முழங்க, வாத்திய இசை ஒலிக்க, மகிழ்ச்சிக் கடலாயிற்று சிதம்பரம் ரயிலடி.

அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவ நண்பர்கள் அன்போடு அழைக்க வந்திருந்தனர். தமிழகப் போக்குவரத்துத் துறையினரின் ஆறு பேருந்துகள் எங்களை அழைத்துச் செல்வதற்குத் தயாராக இருந்தன. காலைச்சிற்றுண்டி புகை வண்டியிலேயே முடிந்தது. அவர்கள் வழங்கிய நிகழ்ச்சி நிரல்படி, பயணம் துவங்கியது. சிதம்பரம் கோயிலைக் கண்ட மேலை நாட்டோர் மலைத்து நின்றதும், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் முழுதும் சுற்றிப் பார்த்துப் பாராட்டியதும், பிற்பகல் சிதம்பரத்தை அடுத்துள்ள கடலோரப் பரங்கிப்பேட்டைக் காட்சியை ரசித்ததும், பல்கலைக் கழக வரவேற்பில் துணைவேந்தரது கொஞ்சு தமிழைச் செவி மடுத்ததும், சிதம்பரம் நகரில் பாராட்டுக் கூட்டத்தில், நல்லோர் வரவேற்பால் மகிழ்ந்ததும், வாண வேடிக்கைகள் வானைப் பிளக்கச் செய்ததும், அண்ணாமலை அரசர் பகலும் இரவும் நல்லுணவு அளித்து மகிழ்வித்ததும், இச் சிறப்போடு உணவு அமைச்சர் திரு மதியழகனும், விவசாய அமைச்சர் திரு கோவிந்தசாமியும், சிலம்புச் செல்வர் திரு ம.பொ.சி.யும், முத்தமிழ்க் காவலர் திரு கி. ஆ. பெ. விசுவநாதமும், பேராசிரியர் திரு மா. கி. தசரதனும், திரு சுப்பையாவும், திரு வி. எஸ். தியாகராஜனும், விருந்தினரைக் கவனித்துக்கொண்ட பாங்கும் சொல்லில் அடங்காச் சுவை மிக்கச் செய்திகளாகும்.

### தஞ்சைத் தரணியில் தமிழறிஞர் கூட்டம்

இரவு ரயிலில், சிதம்பரத்தில் வழங்கிய வேலைப் பாடமைந்த வண்ணப் பேழையைப் பார்த்தவண்ணம் உறங்கிய நாங்கள் கண் விழித்தபோது திருவாரூர் ரயிலடியில் இருப்பதை அறிந்தோம். குளிக்கவும், சிற்றுண்டியும் ரயிலடியிலேயே ஏற்பாடாகி இருந்தன. எதிரிலேயே இருந்த அரிசி ஆலையைக் கண்டு, பின் நகராத் தேரை நல்லபடி நோக்கி, கோயிலைக் கண்டு, திருவாரூர் தியாகராஜன் அளித்த நல்லுணவைச் சுவைத்துத் தஞ்சை அடைந்தோம்.

வாத்தியங்கள் முழங்க மலர்கள் தூவி, மாலைகள் அணிவித்து எங்களை மகிழ்வோடு தஞ்சைத் தரணி வரவேற்றது.

கரந்தைச் தமிழ்ச்சங்க வரவேற்பும், பூங்காவில் வழங்கிய தேநீர் விருந்தும், கண்டுகளித்த நூல்நிலையம் வாணி மகாலும், பெரிய கோயிலும், மறக்கமுடியா இனிய நினைவுகளாகும். இரவு, மக்கள் வரவேற்பில், சுவிட்சர்லாந்து தமிழறிஞர் கெல்லர் நிகழ்த்திய உரை பலரையும் கவர்ந்தது. நினைவாக வழங்கப்பட்ட செம்புச் சிலைகள் நீங்கா நினைவுச் சின்னங்களாயின. இரவு விருந்தும், இனிய நடனமும் முடிந்து, இரயிலில் உறங்கச் சென்ற நேரம் இரவு மணி பதினொன்றாக இருந்தது.

### கொங்கு நாட்டின் செங்கரும்பான வரவேற்பு

பொழுது விடிந்தது. கோவையை நெருங்கி விட்டோம். ஆலைகள் அன்போடு அழைத்தன. ரயிலடியில் பெருங் கூட்டம். அனைத்துக் கட்சியினரும் இருந்தனர். திருமதி சந்திரகாந்தி கோவிந்தராஜ் பொறுப்பில் இயங்கும் கிருஷ்ணம்மாள் கல்லூரியைக் கண்டுகளித்து, வழங்கப்

---

உலகத் தமிழ்நாட்டிற்கு வருகை தந்த வெளிநாட்டு அறிஞர்கள் மாநாடு முடிந்ததும் தமிழகத்தின் பல பகுதிகளுக்கும் சென்று பார்த்தனர். 12—1—68 முதல் 18—1—68 வரை ஆறு நாட்கள் இச் சுற்றுலா நடைபெற்றது. அவர்களுடன் அச் சுற்றுலாவில் கலந்து கொண்ட மாணவர் தலைவர் திரு இரா. சனார்த்தனம் அவர்கள் சுவைபட சுற்றுப் பயண அனுபவங்களை இக் கட்டுரையில் விவரிக்கிறார்.

—ஆசிரியர்

---



தெ.ம.—4a

பட்ட வெள்ளிக் குத்துவிளக்கைக் கையிலேந்தி பேரூருக்குப் பயணமாயினர். பேரூர் கோயிலைக் கண்ட விருந்தினர் சாந்தலிங்க அடிகள் தமிழ்க் கல்லூரியில், திரு ந. மகாலிங்கம் தலைமையில் அளிக்கப்பட்ட வரவேற்பை ஏற்றனர். வழங்கிய சைவ உணவைச் சுவைத்தனர். பிற்பகல் சித்திராவில் பேராசிரியர் அறிவழகன் எம். எல். சி. தலைமையில் திரு அவனுசிலிங்கம் செட்டியார் மனையியல் கல்லூரி வரவேற்பும், சிறப்புற அமைந்திருந்தன. ஐயா அவனுசிலிங்கனார் தலைமையில் நடந்த வரவேற்புக் கூட்டமும், முதல்வர் இராஜம்மாள் தேவதாஸ் வரவேற்க, மாணவியரும் ஆடிப் பாடி மகிழ்வித்ததும், தேனீர் விருந்தளித்ததும் கொங்கு நாட்டின் நல் உள்ளத்தின் விளக்கமாக அமைந்திருந்தன. இரவு, உணவு அமைச்சர் மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் அவர்களது தலைமையில் பாராட்டுக் கூட்டத்தோடு, கோவை நிகழ்ச்சி நிறைவுற்றது.

### சங்கம் வளர்த்த மதுரையில் நெஞ்சங் கவர்ந்த நினைவுகள்

மறுநாள் நான்மாடக்கூடல் மதுரை வரவேற்றது. ஜனவரி 15-ம் நாள் மகிழ்ச்சி பொங்கும் பொங்கல் புது நாள். இன்னிசை முழங்க இரயிலடியில் வரவேற்கப் பட்டோம். தமுக்கம் மைதானத்தில், ஆயிரத்திற்கு மேற்பட்ட பள்ளிச் சிறுவர் சிறுமியர், கல்வித்துறை துணை இயக்குநர் திரு சிட்டிபாபு கொடி வணக்கம் ஏற்க, பின் வண்ண உடைகளோடு பல விளையாட்டுகளால் கவரச் செய்தனர். பின் காந்தி மியூசியமும், மகாலும் கண்டு டி. வி. எஸ். நிறுவனத்தினர் அளித்த விருந்தினை உண்டு செவை பெற்றனர். பிற்பகல் மூன்று மணிக்கு மதுரை பெரிய கோயிலில் பட்டாடையால் பரிவட்டம் சூட்ட, விருந்தினர் பேருவகையோடு கண்டு களித்தனர். பின்னர் தமிழவேள் திரு பி. டி. இராஜன் தலைமையில் தமிழ்ச் சங்க வரவேற்பு. தமுக்கம் மைதானத்தில் இரவு, மாண்புமிகு திரு மதியழகன் தலைமையில் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான மக்கள் நிறைந்திருந்தனர். திரு கருமுத்து தியாகராஜ செட்டியார் அவர்கள் அளித்த இரவு உணவும் இனிய வரவேற்பும் ஏற்றுப் பின் இரவு ரயிலடியை அடைந்தோம்.

### தென்பாண்டிச் சீமையிலே....

ஜனவரி 16-ம் தேதி காலை நெல்லையில் எல்லையற்ற அன்போடு வரவேற்றனர். நகர மன்றமும் மற்றும் பலரும் கூடி வரவேற்புக் கூட்டம் நடத்தி நினைவுப் பொருளாக பத்தமடைப் பாயை வழங்கி, குமரிமுனை நோக்கிப் போக வழியனுப்பினர்.

---

## "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து...."

"உலகத்திற்கே பொதுவான வழிகாட்டி நூலாக திருக்குறள் இருக்கிறது. எல்லா காலத்தினருக்கும், எல்லா மொழியினருக்கும், எல்லா வகுப்பினருக்கும், எல்லா சமுகத்தினருக்கும், எல்லா தரத்தினருக்கும், எல்லா நிலையினருக்கும், துறையினருக்கும் ஏற்றதாகவும் பயன்படக்கூடியதாகவும் இருக்கிறது.

சில புலவர்கள் சில நாடுகளுக்கு மட்டுமே உரியவர்களாகப் பாடுபட்டிருக்கிறார்கள். ஆனால், உலகத்திலுள்ள எல்லாருக்கும் எப்பொழுதும் பயன்படுகிற அளவுக்கு திருக்குறளைத் தந்திருப்பவர், திருவள்ளுவர் ஒருவர்தான்."

மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் (திருவள்ளுவர் சிலைத் திறப்பு விழாவில்)

## வெளிநாட்டாரின் சேவை

"உலக மொழிப் பண்பாட்டில் நாகரீகத்தில் தொன்மையானது தமிழ்தான். நூற்றாண்டு தோறும் புதுப் புது புதுமைகள் தமிழில் ஏற்பட்டு வருகின்றன. உலக மொழிகளில் வேறு எதிலும் அப்படி இல்லை.

தமிழன்—'தமிழில் என்ன இருக்கிறது' என்று கேலி பேசிய நேரத்தில், தமிழின் சிறப்பை ஆங்கிலேயர்கள் சொன்னார்கள். கால்டுவெல்லும், போப்பும் ஆராய்ந்து, உலகத்தில் தமிழ் போல் சிறந்த மொழி வேறு இல்லை என்றார்கள்."

(பூம்புகார்க் கருத்தரங்கில் டாக்டர் மு. வ.)

---

கேரள அரசு மாளிகையில் ஏற்பாடாகி இருந்த விருந்தும், சுசீந்திரம் மற்றும் கோயில்களும், குமரி முனையில் ஆதவன் மறைவுக் காட்சியும் விருந்தினரை மகிழ்வித்தன. இரவு, தாளையூத்தில் சட்டப் பேரவைத் தலைவர் திரு ஆதித்தனார் பொறுப்பில் அங்கம் வகிக்கும் சங்கர் நகர் சிமெண்ட் தயாரிப்பு நிறுவனத்தினர் படைத்த நல்லுணவு ஏற்று விடை பெற்றோம்.

### 'சிராப்பள்ளி குன்றுடையானை'க் காண....

திருச்சிராப்பள்ளி எங்களை வரவேற்கத் தயாராக இருந்தது. மகளிர் கல்லூரி மாணவியர் வரவேற்க, சிலம்பம் ஆட்டக் காட்சி நல்க சென்னை மின் வழங்குக் கழகத்தின் வரவேற்பு ஏற்கப் புறப்பட்டோம். சிற்றுண்டியும் வழங்கினர். பின் மலைத்து நோக்கச் செய்தது மலைக்கோட்டை. பரிவட்டம் சுற்றிப் பரிவோடு கோயில் அரங்காவலர் வரவேற்றனர். உச்சி வரை சென்று திருச்சி முழுவதும் கண்டு மகிழ்ந்தனர். திருவரங்கமும், திருவானைக்காவலும், லயன்ஸ் கிளப்பினரும் அளித்த வரவேற்பு சிறப்பாக அமைந்திருந்தன. அடுத்து கரிகாலன் கட்டிய கல்லணையாம் நல்லணை கண்டு நனி மகிழ்ந்தனர், பிறநாட்டுத் தமிழ் வல்லோர். புனித சூசையப்பர் கல்லூரியில் மதிய உணவு மகிழ்வித்தது. தமிழ் தீரரது சல்லீக்கட்டு, பல்லாயிரம் மக்கள் கூடியிருந்த காசாமலையில் கண்டு களித்த பின் வானொலி நிலையம் வரவேற்றது. பல் இசைக்கருவிகள் ஒன்று கூடி இசைக்க, சிறப்புமிக்க வரவேற்பாக அது அமைந்தது. இலட்சக் கணக்கில் மக்கள் வெள்ளம் புனித சூசையப்பர் திடலில் காத்து இருந்தது, வற்வேற்பு நல்க. திருச்சி தமிழ்ச் சங்கமும், நகர மன்றமும், மற்றைய நிறுவனங்களும் மகிழ்வோடு வரவேற்பிதழ் வாசிக்க, திரு அன்பில் தருமலிங்கம் அவர்கள் தலைமையில் வரவேற்புக் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. எங்கும் காணாத அளவில் வான வேடிக்கை அனைவரையும் திகைக்க வைத்தது. இரவு உணவு அரிஸ்டோவில் டால்மியா சிமெண்ட் நிறுவனத்தாரால் வழங்கப்பட்டது. சுற்றுலா நிகழ்ச்சி முடிந்து இரவு சென்னை நோக்கிப் புறப்பட ரயிலடி வந்தோம். முத்தமிழ்க் காவலர் வழி அனுப்பினார். சிலம்புச் செல்வர் திரு ம.பொ.சி., திரு சுப்பையா, திரு அறிவழகன் எம்.எல்.சி., திரு தியாகராஜன் ஆகியவரோடு சென்னை வந்தடைந்தோம்.

தமிழகத்தின் பல இடங்களில் வழங்கப்பட்ட வரவேற்பும், விருந்துகளும், வெளிநாட்டுப் பெருமக்களை மகிழ்ச்சிக் கடலில் தள்ளியது. தமிழர்தம் விருந்தோம்பலை விளக்கியது. மாவட்ட அதிகாரிகளும், வரவேற்புக் குழுவினரும், ஊருக்கு ஊர் போட்டி போட்டுக் கொண்டு உயர்வான முறையில் வரவேற்றுச் சிறப்பித்தனர். பயணம் முடிந்தது. ஆனால் வரலாற்றில் பதிக்கத்தக்க அந்தப் பயண நினைவு மட்டும் நீங்காமல் நெஞ்சிலேயே நிற்கின்றது.

செந்தமிழர் பண்பாட்டினையும், நாகரீகத்தின் சிறப்பையும் விளக்கும் வகையில், உலகத் தமிழ் மாநாட்டினை ஒட்டி 3—1—1968-ல் அமைந்த மாபெரும் ஊர்வலம், தமிழரின் வரலாற்றிலே பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்கதொன்றாகும். சீரும் சிறப்பும் மலிந்து பொலிவுறும் சென்னை மாநகரின் வரலாற்றிலே, நினைக்கும் போதெல்லாம் தமிழ் மகனின் திண்டோள் விம்மத்தக்க, முத்தமிழ்க் காவலர்களின் முரசு கொட்டும் காவிய நிகழ்ச்சிகள் ஒருங்கிணைந்து கண்கொள்ளாக் காட்சியென பவனி வந்தன.

எழில் மிகுந்த அந்த ஊர்வலத்தின் முன்னால்—அலங்கரிக்கப்பட்ட யானைகள் ஒன்றன்பின் ஒன்றாகவர, இன்னிசை முழங்க, சங்ககாலமே நம் கண் முன்னால் ஊர்ந்து சென்றது.

முகப்பிலே—தமிழகத்திற்கே தனிச் சிறப்பளிக்கும் நாதசுர இசையைப் பழனி நாதசுரப் பயிற்சி பள்ளி மாணவர்கள் இசைத்து வந்தது, துவக்கத்திலேயே கண்டோர் மெய் சிலிர்க்கச் செய்தது.

அடுத்ததொரு ஊர்தியில், தமிழன்னையே பவனி வந்தாள். அத்திருமகள் பெற்ற இலக்கியச் செல்வங்களான தமிழ்ப் பெருங் காவியங்களும், காப்பியங்களும் மதலைகளாகச் சித்தரிக்கப்பட்டு, அன்னையின் காலடியில் தவழும் காட்சி அமையப்பெற்ற அலங்கார வண்டி வந்தது.

## வரலாறு படைத்திட்ட ஊர்வலம்

திருவள்ளுவர் கண்ட தமிழகமாகத் திகழ்ந்தது மூன்றாவது ஊர்தி. நாட்டின் அச்சாணியான உழவர் பெருமகன் உழைப்பினால் பயனடைந்த பூரிப்போடு, அறுவடை முடிந்து, அகமும் முகமும் மலர, மனையிலே பொங்கலிட்டு மகிழும் காட்சி கண்டோர் நெஞ்சத்தையே நிறைத்தது.

"என் கணவன் குற்றமென்ன செய்தான் கொற்றவனே" எனக்கேட்கும் பாவனையில் முகத்திலே கோபம் கொந்தளிக்க, 'தீதிலா வடமீன் போன்ற தெய்வக் கற்பினளான' நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரக் காப்பியத்தின் நாயகியான கண்ணகி, பாண்டியனின் அரசவையில் வழக்குரைத்த காட்சியை கண்முன் கொண்டு வந்தது அடுத்து வந்த காட்சி.

இடையிடையே பருவமும் எழிலும் மிக்க பாவையர் ஆடிவரும் அலங்கார வண்டிகளும், கிராமியக் கலையழகின் சிறப்பினை ஆடிப் பாடிக் காட்டிய ஊர்திகளும், காண்போரையெல்லாம் மெய்மறக்கச் செய்தன.

தகடூரை தலைநகராக, தமிழ் வளர்ச்சியே மூச்சாகக் கொண்டு, வாரி வழங்கும் வள்ளல் தன்மையை வாழ்வின் அடித்தளமாகக் கொண்ட வள்ளல் அதியமான் என்றும் இளமையுடன் இருக்கச்செய்யும் நெல்லிக்கனியொன்றை, தானுண்ண விரும்பாமல், தமிழ் வாழ வேண்டுமெனில் தமிழ்ப் புலமை மிக்கோர் வாழவேண்டுமென்ற ஆர்வத்தால் உந்தப்பட்டு, அக்கனியை அவ்வை மூதாட்டிக்கு வழங்கிய அரியதோர் காட்சியும் கடலென திரண்ட மக்கள் இமையாது பார்த்திருக்க ஊர்ந்து சென்றது.

படருவதற்குக் கொழு கொம்பில்லாது தள்ளாடித் தனித்து நின்ற முல்லைக் கொடியைக் காண்கிறான், கானகத்தே வேட்டையாடவந்த பறம்பு நாட்டு மன்னன் பாரி வள்ளல். அக்கொடி படர தேரையே ஈந்து திரும்புகிறான். வெண்ணிறப் புரவியும், தேரும், அதனருகே பாரி வள்ளலும், அவன் கையில் தவழ்ந்த முல்லைக் கொடியையும் கண்டபோது, பழந் தமிழகத்துப் பண்பாட்டுக் காட்சியினில் மெய்மறந்தனர் இருமருங்கிலும் திரளாகக் கூடியிருந்தோர்.

---

## "ஔவை யார்?" நூல் வெளியீட்டு விழா

சிலம்புச் செல்வர் திரு ம. பொ. சிவஞானம் அவர்கள் எழுதிய "ஔவை யார்?" நூல் வெளியீட்டு விழா (இன்ப நிலைய வெளியீடு) புத்தாண்டுத் தினத்தன்று (1-1-68) மாண்புமிகு உணவமைச்சர் திரு மதியழகன் தலைமையில், சென்னை பாலர் அரங்கில் நடைபெற்றது. இவ்விழாவில் பங்கு கொண்ட மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் "தாய்க்குலத்தின் ஆசியுடன் புத்தாண்டு பிறக்கிறது" என்று குறிப்பிட்டார். விழாவில் பேராசிரியர் இலக்குவனார், பேராசிரியர் சஞ்சீவி, ஔவை டி. கே. சண்முகம், திருமதி சௌந்தரா கைலாசம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தேரினடியில் அகப்பட்டு கன்று மாண்டது. கண்ணீருடன் நீதி வழுவாச் சோழ மன்னனின் அரண்மனை வாயிலில் ஆராய்ச்சி மணியை அசைத்து நீதி கேட்கிறது கன்றை இழந்த பசு. நீதி வழி நின்ற நம் முன்னவர்களின் நெறியறிந்து மெய்சிலிர்க்க நிற்கிறோம். ஊர்தி மெதுவாக நகர்ந்து செல்லுகிறது. கைப்பொருள் இல்லாத நிலையிலும். தன் தலையைக் கொய்திச் சென்று தன் தம்பியிடம் கொடுத்து, பொருள் பெற்று வறுமை நீங்குமாறு புலவனிடம் கூறி நிற்கும் குமணனின் கொடைத் தன்மைக்கும், தமிழ்ப் பற்றுக்கும் இலக்கணமாக துலங்கியது அடுத்து வந்த காட்சி.

கல்லெல்லாம் கதைசொல்லும் மாமல்லபுரத்துக் குகைக் கோயில்களும் கண்முன்னால் பவனி வந்தன.

" நெற்றிக்கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே" என முழங்கிய தமிழ்ப் பண்பாட்டின் தலை மகன் நக்கீரன் வடித்த திருமுருகாற்றுப்படையில் ஒரு காட்சி அடுத்து வந்த அலங்கார ஊர்தியின் கருப்பொருளாக அமைந்திருந்தது.

பருவமும் பூரிப்பும் எழிலும் கொலுவிருக்க, ஆண்டாளின் இளமையுள்ளத்திலே கவித்துவம் மலர்ந்து திருப்பாவை செப்பிய காட்சியும் காணக்கிடைத்தது.

அன்றையத் தமிழகத்தில், பொங்கிப் பெருகிய வளமான வாழ்வை இன்றைய நிலையிலே நிற்கும் நம் கண் முன்னே கொண்டுவர, ' மாடு கட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று யானை கட்டிப் போரடிக்கும்' தோற்றம் கண்டோரின் நினைவிலேயே தங்கிவிட்டது.

மனித இனம் தோன்றிய காலத்தே மேம்பாடடைந்த நாகரீகத்தை, தனது வாணிபத்தின் மூலம் உலகெங்கும் பரப்பியவன் தமிழன் என்பதை—புகாரில் படிகளால் முத்துக்களை அளக்க, அதை பல நாட்டு வணிகர் பொன் கொடுத்து வாங்கி கப்பலில் ஏற்றிச் செல்வதைக் கண்டு, களிப்பொடு திகைப்புடன் நிற்கிறோம்.

யாவரும் அருகே நெருங்க இயலாத அரசு கட்டிலில் களைப்பு நீங்க துயில் கொண்டிருக்கிறார், மோசிகீரனார் என்னும் புலவர். அப்போது அங்கு வந்த சேர மன்னன் பெருஞ்சேரல் இரும்பொறை சினம் கொள்ளாது புலவருக்குச் சாமரம் வீசி நிற்கிறான். தமிழ்ப் புலவருக்கு தமிழ் மன்னர் அளித்திட்ட ஏற்றத்தைச் சித்தரிக்கும் சிற்பங்கள் காண்போர் கண்களில் நீர் மல்கச்செய்தன.

உலகத் தமிழ்த் திருவிழாக் கொடியுடன், தங்க யானை வாகனம் இறுதியாகச் சென்ற ஊர்தியை அலங்கரித்தது.

புதியதோர் வரலாறு படைத்திட்ட இம்மாபெரும் ஊர்வலம் சென்ற திசையெங்கும் மக்கள் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. வெள்ளம்போல் தமிழர் கூட்டம், வீரங்கொள் வீரர்கூட்டம் நெஞ்சை யள்ளும் அணிகண்டு, நெகிழ்ந்து நின்றது.

# தமிழகத்தின் பொற்காலம் துவங்கியது!

[திரு மெ. சிதம்பரம், உதவியாசிரியர், ''தமிழ் முரசு'' நாளேடு சிங்கப்பூர்,]

''யாதும் ஊரே, யாவரும் கேளிர்'' என்று அன்று பாடிய தமிழ்ப் பெருமகன், இன்று தமிழகத் தலைநகரில் நடைபெறுகிற உலகத் தமிழ் மாநாட்டில், உலகமே தமிழுக்குத் தலை தாழ்த்துவதனைக் காண்பானுயில், தான் பாடியது எத்துணை உண்மை என்பது குறித்து, உள்ளம் பூரிப்பான் என்பது திண்ணம். தமிழகத்திற்குப் பொற்காலம் துவங்கியிருப்பதையே இந்த மாநாடு குறிக்கின்றது. ''வெளி நாட்டார் வணக்கம் செய்தல் வேண்டும்'' என்று பாடிய பாரதியின் கனவை நனவாக்கிய தனிப்பெருமை அறிஞர் பெருமகன் அண்ணாவின் தமிழக அரசிற்கே உரியதாகும். பொருளியல், அறிவியல் வசதிகள் மிக்க மேலைநாட்டவருங்கூட, இத்துணை விரிவான மாநாட்டை இவ்வளவு சிறப்பாக நடத்தியிருத்தல் இயலாது. உலகமே வியக்கத் தக்கவண்ணம் இந்த மாநாட்டை நடத்தியுள்ள தமிழக அரசிற்கும் நாம்பட்டுள்ள கடன் கொஞ்ச நஞ்சமன்று. இனி நடைபெறவிருக்கும் உலகத் தமிழ் மாநாடுகளுக்கு இந்தச் சென்னை மாநாடே வரம்பாக அமையும் என்பது வெளிப்படை. வெளிநாட்டுப்பேராளர்களுக்குத் தமிழக அரசு வழங்கியுள்ள உண்டி, உறையுள், போக்கு வரவு வசதிகள், போற்றத்தக்க வியக்கத்தக்க சிறப்பினவாகும். சுருங்கக் கூறுமிடத்து, ஒருவரின் வாழ்நாளில் மறக்கொணாத நிகழ்ச்சிகளில், இந்த மாநாடும் ஒன்றாக அமையுமென்றே சொல்லவேண்டும் தமிழுக்கு மலாய், சீனம், ஆங்கிலம் ஆகிய மொழிகளுடன் சமநிலை வழங்கி அதனை ஆட்சிமொழியாக்கி, எல்லா வழிகளிலும் தமிழுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்ற எங்கள் சிங்கப்பூர்த் தலைமையமைச்சர் திரு லீ குவான் ஆயூ அவர்கள் தமிழ் வழங்கும் நல்லுலகின் பாராட்டிற்கும் நன்றிக்கும் உரியவர்களாவார்கள் என்பதையும் இங்கே குறிக்க விரும்புகிறேன்.

தமிழன்னையின் பேறலரும் புதல்வர்கள் ஒவ்வொரு நாட்டிலும் உள்ளனர். இங்கே அண்ணா இருக்கின்றார்கள். எங்கள் நாட்டில் எங்கள் தமிழ் முரசு நாளேட்டின் ஆசிரியராகிய தமிழவேள் திரு கோ. சாரங்கபாணிஅவர்கள் இருக்கிறார்கள். சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் தமிழை நிலைபெறச்செய்த பெருமை எங்கள் தமிழவேள் அவர்களுக்கே உரியதாகும். இறுதியாக ஒன்று. ''அம்மா'' என வியக்கத்தக்கது, இம்மாநாடு என்பது எனது உறுதியான கருத்தாகும்.

உலகத் தமிழ் மாநாட்டினை ஒட்டி, மக்கள் திலகம் திரு எம். ஜி. ராமச்சந்திரனால் வழங்கப்பட்ட முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களின் உருவச்சிலை 1968-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதி சென்னை மலைச் சாலையின் மையத்தில், இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் முதல் நிகழ்ச்சியாக, டாக்டர் ஏ. ராமசாமி முதலியார் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

அனைவரையும் வரவேற்று மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில்,

"தமிழகத்தில் முதல் அமைச்சர் என்பதற்காக அண்ணாவுக்கு இந்தச் சிலை வைக்கப்படவில்லை. தமிழகத்திற்கு புத்துயிரும், தமிழ் மக்களுக்குப் புத்துணர்ச்சியும் ஊட்டி, தமிழ்மொழிக்கு ஏற்றமும் எழிலும் தேடித்தந்தவர் என்பதற்காக இந்தச் சிலை வைக்கப்படுகிறது" என்று குறிப்பிட்டார்.

உறுதிப்படுத்த அவரது கரங்களைப் பலப்படுத்துவோமாக" எனக்கேட்டுக்கொண்டார்.

1968-ம் ஆண்டு சனவரி மாதம் 2-ம் தேதியன்று கடற்கரையில் தமிழ்ச்சான்றோர்களின் சிலைகள் திறப்பு விழா, சீர்காழி கோவிந்தராஜனின் தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கியது.

தமிழ் வளர்ச்சிக் கழக இயக்குநர் திரு எம். ஆர். பெருமாள் முதலியார் வரவேற்புரைத்தார்.

முதலாவதாக திருவள்ளுவப் பெருந்தகையின் திருவுருவச்சிலையினை மாண்புமிகு கல்வி, தொழிலமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் தலைமையில், முத்தமிழ்க் காவலர் திரு கி.ஆ.பெ. விசுவநாதம் திறந்து வைத்தார்.

ஔவை மூதாட்டியாரின் சிலையை, மாண்புமிகு தகவல்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்துவின்

டாக்டர் திரு ஏ. ராமசாமி முதலியார்—ஒரு மின்சார விசையை அழுத்தவும், சிலையை மூடி இருந்த பட்டுத் திரைவிலகி, கழுத்தில் ரோஜாப்பூ மாலையுடன் அண்ணாவின் முழுஉருவச்சிலை வெளிப்பட, கூடியிருந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் கைதட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

உலகம் வியக்கும் தமிழ்ப் பெருவிழாவில்

# தமிழ் வளர்த்த சான்றோர்க்கு

## தலைநகரில் சிலையெடுப்பு

டாக்டர் முதலியார் பேசும் பொழுது,

"அமெரிக்க மக்களின் உள்ளங்கவர்ந்த தலைவன் ஆபிரகாம் லிங்கனின் வாழ்க்கையைப்பற்றிக் குறிப்பிடும் பொழுது 'மரக்குடியிலிருந்து வெள்ளை மாளிகைக்கு உயர்ந்தவர்,' என்று வர்ணிப்பார்கள். அந்த ஆபிரகாம் லிங்கனைப் போல், உழைப்பால், சுய முயற்சியால் முன்னுக்கு வந்தவர் நமது முதலமைச்சர். உண்மையான உழைப்பு, ஊக்கம், விடாமுயற்சி, அடக்கம், ஆகிய நற்குணங்கள் காரணமாக, இன்று இவர் இந்த உன்னத நிலைக்கு வந்திருக்கிறார். தன்னைப் பின்பற்றுகிறவர்களிடம் அவர் பாசம்மிக்க அண்ணனாக நடந்துகொள்கிறாரே தவிர, கட்டளையிடும் தலைவனாகவோ, சர்வாதிகாரியாகவோ நடந்து கொள்ளவில்லை. அவரது உயர்வுக்குத் தன்னம்பிக்கையும் பொறுமையுமே காரணம் ஆகும்" என்றார்.

தமிழக அரசின் சார்பில் இந்தச் சிலையை ஏற்றுக் கொண்டு, அதை வழங்கிய திரு எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களுக்கு நன்றி தெரிவித்துப்பேசிய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு கருணாநிதி," தமிழ் மக்களின் தலைவர், ஏழைகளின் பிரதிநிதி அண்ணா காட்டுகின்ற கொள்கைவழி நின்று, நிலையான ஆட்சியை

தலைமையில் ஆனந்தவிகடன் ஆசிரியர் ஜெமினி எஸ். எஸ். வாசன் திறந்து வைத்தார்.

கவியரசர் கம்பர் திருவுருவச் சிலையை மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் திரு ஏ. கோவிந்தசாமியின் தலைமையில் முன்னாள் முதலமைச்சர் திரு எம். பக்தவத்சலம் திறந்துவைத்தார்.

மூன்றாவதாக, சட்டப்பேரவைத்தலைவர் திரு சி. பா. ஆதித்தனார் தலைமையில் ஜி.யு. போப் சிலையை பிஷப் லெஸ்லி நியூபிகின் திறந்து வைத்தார்.

ராபர்ட் கால்டுவெல் சிலையினை சட்டமன்ற மேலவைத் தலைவர் திரு மாணிக்கவேலர் தலைமையில் பன்மொழிப் புலவர் திரு கா. அப்பாத்துரையார் திறந்து வைத்தார்.

மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு செ. மாதவன் தலைமையில் நாமக்கல் கவிஞர் திரு வெ. ராமலிங்கம் பிள்ளை அவர்கள் பாரதியாரின் திருவுருவச்சிலையைத் திறந்து வைத்தார்.

அடுத்து புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் சிலையை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி தலைமையில் டாக்டர் மு. வரதராசனார் திறந்து வைத்தார்

உலகத் தமிழ் மாநாட்டில்

# காணுதற்கரிய கண்காட்சி

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டையொட்டி கலைக்கண்காட்சியொன்று, 3—1—68 காலை சென்னை பல்கலைக் கழகத் தேர்வு மண்டபத்தில், சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ஏ. இலட்சுமண ஸ்வாமி முதலியார் தலைமை வகிக்க, மூதறிஞர் இராஜாஜி அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. தமிழர் நாகரீகத்தைப்பற்றி பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கிய 500 பக்க கையேடு ஒன்றை மாண்புமிகு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் அவ்வமயம் வெளியிட்டார்.

விழாவிற்குத் தலைமை தாங்கிய சென்னைப் பல்கலைக் கழக துணை வேந்தர், தூய தமிழில் சில நிமிடங்கள் பேசி அவை யோரை மகிழ்வித்தார். அவர் பேசுகையில் "உலகின் எந்த ஒரு நிலப் பகுதியை எடுத்துக் கொண்டாலும், தமிழரின் சுவடு படா இடமே இருந்திராது என்னுமளவுக்கு, தமிழ்க் கலையும் பண்பாடும் உலகின் பல பகுதிகளுக்குப் பரவி இருந்தது. அந்தப் புகழை மீண்டும் நிலைநாட்டி, அகற்கெனச் சகிப்புத் தன்மையோடு நாம் உழைத்திட இம்மாதிரியான கண்காட்சிகள் நமக்குத் துணை செய்யட்டும். நம் மூதாதையர்கள் நடந்துகாட்டிய பண்புடன் நாமும் நடந்து புகழ்தேட வேண்டும்" என்றார்.

அடுத்து மூதறிஞர் இராஜாஜி அவர்கள் கண்காட்சியைத் திறந்துவைத்துப் பேசும்போது, "பண்டைய வரலாறு தக்கவாறு எழுதப்படாத நாடுகளில் இம்மாதிரியான கண்காட்சிகள் மிகவும் தேவை. நம் நினைவெல்லாம் எதிர் காலத்தைப் பற்றியதாக இருக்கவேண்டும். இந்தியாவில் உள்ள இதரருக்கும், ஏனைய உலகத்தாருக்கும் தமிழ்மொழி, அதன் கலை, நாகரீகம், பண்பாடு, ஆகியவை பற்றிய தகவல்களை எடுத்துரைத்து அறிவூட்டும் பணியில் நாம் ஈடுபட வேண்டும். தமிழ் நாட்டின் பண்டைய பெருமைகள் குறித்து அறியவேண்டும் என்ற ஒரு ஆர்வம் இப்போது செயலாக மாறி இருக்கிறது. பல அறிஞர்கள் ஆராய்ச்சிகள் நடத்தி பல விஷயங்களை, பொருள்களை வெளிக்கொணர்ந்துள்ளனர். அவைகளை இப்பொருட் காட்சியின் மூலம் மக்கள் கண்டறிய இப்போது அறிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. இதை யாவரும் பார்த்து பயனடைய வேண்டும்" எனக் கேட்டுக்கொண்டார்.

தமிழக முதலமைச்சர், அறிஞர் அண்ணா அவர்கள் கண்காட்சி மலரை வெளியிட்டுப் பேசிய பொழுது, "தமிழகத்தார் மட்டுமின்றி தமிழறிந்தோர் அனைவரும், அவர்கள் உலகின் எந்தப் பகுதியைச் சேர்ந்தவராயினும், கூர்ந்து கவனிக்கும் இம் மாநாட்டினையொட்டிய கலைக் கண்காட்சியை அமைத்து நடத்திட அமைத்த குழுவினர் மெத்த ஆர்வத்தோடு, தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் அரிய கலைப் பொருட்களைச் சேகரித்து இன்று மட்டுமல்லாமல், என்றும் நிரந்தரமாக இருக்கத்தக்க கண்காட்சியை உருவாக்கி இருக்கின்றனர்.

தமிழ்மொழி, நாகரீகம், கலை, பண்பாடு ஆகியவை தனித்தன்மையது என்பதை இச் சின்னங்களும், இவற்றால் ஏற்படும் எண்ணங்களும் விளக்கிடும். இவற்றை நாமறிவதோடு, தரணி முழுவதும் அறிய இத்தகு கலைக்கண்காட்சிகள் தேவையே. பண்டைக் காலத்திலே கடல் கடந்த தமிழர்கள் கடாரம் போன்ற இடங்களுக்குச் சென்றார்கள். ராஜேந்திர சோழன் வெற்றிகொண்ட அம்மண்ணில் எல்லோரும் தமிழ் படித்தாக வேண்டுமென்று கட்டளையிடவில்லை. அன்பு வழியால் அம் மக்களைத் தன்வயப்படுத்தினான். இப்படியெல்லாம் கடாரம் வென்ற தமிழர் இன்று எந்தத் திக்கிலிருந்து என்ன உத்தரவு வருமோ என்று அஞ்சி வாழுகின்ற நிலையில் இருக்கிறோம். இந்நிலை மாற வேண்டிய ஆக்க வேலைகளில் நாம் ஈடுபட வேண்டும்" எனக் கேட்டுக்கொண்டார்.

கலைக் கண்காட்சி—தமிழனின் பண்பாடு, நாகரீகம் ஆகியவற்றை தெளிவுற எடுத்தியம்பும் கலைக் கருவூலமாக திகழ்கிறது என்றால் அது மிகையாகாது.

---

[தமிழ் வளர்த்த சான்றோர்க்கு—முன் பக்கத் தொடர்ச்சி]

மாண்புமிகு உணவமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் தலைமைவகிக்க, கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் திருவுருவச் சிலையை தமிழ்வேள் திரு பி.டி. இராசன் திறந்து வைத்தார்.

வீரமாமுனிவரின் சிலையானது பொதுநலத்துறை அமைச்சர் மாண்புமிகு சுகாதாரத்துறை அமைச்சர் திரு சாதிக்பாட்சா தலைமையில் ஆர்ச்பிஷப் அருளப்பா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

கற்புக்கரசி கண்ணகியின் சிலையை பொதுப்பணி அமைச்சர் மாண்புமிகு திரு மு. கருணாநிதி தலைமையில், சிலம்புச் செல்வர் திரு ம. பொ. சிவஞானம் திறந்து வைத்தார்.

சென்னையில் 1968-ம் ஆண்டு ஜனவரி மாதம் 2-ம் தேதியில் நடந்த சிலைகள் திறப்பு விழாவில் ஐரோப்பியரான பிஷப் நியூபிகின் அவர்களும் பங்கு கொண்டு போப்பின் சிலையைத் திறந்து வைத்தார்.

தமிழிலேயே அவர் பேசும் போது குறிப்பிட்டதாவது:—
"தமிழ் உலகத்தின் ஒரு சிறு பகுதியாருடைய செல்வம் அல்ல.

உலகச் செல்வத்தின் ஒரு பாகம். நூறு ஆண்டுகளுக்கு முன் ஜி.யூ. போப் ஒரு கருத்தை எழுதினார்.

"தமிழ் நாட்டு இளைஞர்கள் ஊக்கத்துடனும், திறமையுடனும், ஆங்கிலக் கல்வி கற்கின்றனர்" அவர்கள் வியக்கத்தக்க, தங்கள் இணையற்றத் தமிழ் மொழியைப் புறக்கணிப்பது நோக்கி வருந்துகிறேன்." என்று குறிப்பிட்டார்.

இப்போது போப் இருந்திருந்தால் நூறு ஆண்டுகளுக்கு முன் எவ்வளவு வருத்தப்பட்டாரோ அவ்வளவு மகிழ்ச்சி அடைவார். அந்த அளவுக்குத் தமிழ் மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது."

தமிழக அரசின் சார்பில் சிலைகளை ஏற்றுக்கொண்டு தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு சி. ஏ. ராமகிருஷ்ணன், ஐ.சி.எஸ். நன்றி கூறினார்.





2

## உலகம் வியக்கும் தமிழ்ப் பெருவிழா

படம் 1 பூம்புகார் நகரில் அமைக்கப்பட்ட வண்ணமுகப்பின் எழில் தோற்றம்.

*பள்ளி மாணவர்களின் திருக்குறள் திறமை*

படம் 2 பழனியைச் சார்ந்த எம். குப்புசாமி, துரைசாமி, எம். கண்ணாத்தாள் ஆகிய மூன்று மாணவர்களின் திருக்குறள் புலமையைப் பாராட்டி, பூம்புகார் நகரில், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு மா முத்துசாமி பரிசுகள் வழங்கினார் (8—1—1968).

படம் 3 சென்னைக் கடற்கரையில், தமிழ் வளர்த்த சான்றோர்க்கு சிலையெடுப்பு விழா-இறை வணக்கம். (2—1—1968)

படம் 4 'பூம்புகார்' நகரில் மாண்புமிகு முதலமைச்சர் நிறைவு விழாச் சொற்பொழிவாற்றினார் (10—1—1968).

படம் 5 மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரிடம், பூம்புகார் நகரில், மாணவர்கள் தாங்கள் ஏந்தி வந்த தீச்சுடரை அளித்தல்.



3



4



5









உலகத் தமிழ் மாநாடு

படம் 1 கலைக் கண்காட்சியை, சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் இலட்சுமண சாமி முதலியார் தலைமையில், மூதறிஞர் இராஜாஜி அவர்கள் 5-1-1968-ல் திறந்து வைத்தார்.

படம் 2 மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு மு. கருணாநிதி அவர்களின் 'பூம்புகார்' புத்தகப் பிரதி ஒன்றினை, இலங்கை அமைச்சரின் மனைவியார் திருமதி திருச்செல்வம் அவர்களிடம் மாண்புமிகு முதலமைச்சர் அளிக்கிறார். (18-1-1968)

படம் 3 'புகாரில் ஒரு நாள், கவிதைப் போட்டியில் பரிசு பெற்றோருக்கு, 'மக்கள் திலகம்' திரு எம். ஜி. இராமச்சந்திரன் பரிசுகள் வழங்கினார். (10-1-1968)

படம் 4 'பூம்புகாரில்' 8-1-1968-ல் 'மகளிர் மாண்பு' என்ற தலைப்பில் சொற்பொழிவுத் தொடர் நடைபெற்றது









படம் 1 குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேன் அவர்கள் மதுரைப் பல்கலைக் கழகக் கட்டிடத்தின் அடிக்கல்லை நாட்டினர் (4-1-1968)

## திருக்குறள் ஆராய்ச்சிக்கு ஒன்பது இலட்சம் ரூபாய்.

இரண்டாவது உலகத் தமிழ மாநாட்டை ஒட்டி, தமிழகத்தில் உள்ள மூன்று பல்கலைக் கழகங்களுக்கும், திருக்குறள் ஆராய்ச்சி நடத்த, 9 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

படங்கள் 2, 3, 4: சென்னைப் பல்கலைக் கழகத்திற்கான 5 இலட்சம் ரூபாயை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சரும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கான 3 இலட்சம் ரூபாயை மாண்புமிகு உணவமைச்சரும், மதுரைப் பல்கலைக் கழகத்திற்கான 3 இலட்சம் ரூபாயை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரும், அப் பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர்களிடம் அளித்தனர்.



1


2


3


4


5


6

# கிராம நலக் கண்காட்சி- "அறிவுச் செல்வம் வளர்க்கும் சாதனமாக அமையட்டும்"

## [மாண்புமிகு முதலமைச்சர் அறிஞர் அண்ணா]

[செங்கல்பட்டு மாவட்டக் கிராமநலக் கண்காட்சி மதுராந்தகத்தில் 21—12—67 முதல் 28—12—67 வரை நடைபெற்றது. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு ஏ. கோவிந்தசாமி கண்காட்சியைத் திறந்து வைத்தார். மாண்புமிகு முதலமைச்சர் நிறைவு விழாப் பேருரை ஆற்றினர். அப்பேருரையின் சாரத்தை, கீழே வடித்துக் கொடுத்திருக்கிறோம்.

''இப்படிப்பட்ட கிராமநலக் கண்காட்சிகள், அறிவுச் செல்வம் வளர்க்கும் சாதனங்களாக சிற்றூர்கள் தோறும் அமைக்கப்படவேண்டும்'' என்ற முதலமைச்சரின் வேண்டுகோள், பொன்னேபோல் போற்றத்தக்கதாகும். அதுமட்டுமின்றி, குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியத்தை அவர் வலியுறுத்திக் கூறும் கருத்துக்கள் அனைவரும் சிந்தித்து, செயல்படவேண்டிய சொல்வளமும் பொருள் வளமும் செறிந்த மிக உயர்ந்த கருத்துக்களாக அமைந்துள்ளன.

—ஆசிரியர்]

"இந்தக் கண்காட்சியை ஒரு சிற்றூரில் நடத்த வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவரிடம் நான் சொன்னபோது உண்மையாகவே அது வெற்றிகரமாக நடக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தாலும் நான் எதிர்பார்த்ததற்கும் மேலாக பெரு வெற்றியாக இக்கண்காட்சி அமைந்துள்ளது. நம நாட்டில் இப்படிப்பட்ட கண்காட்சிகள் பல சிற்றூர்களில் நடத்தப்பட வேண்டும்.

இந்தக் கண்காட்சி அளிக்கும் வெற்றியானது, இன்னும் பல்வேறு கிராமங்களில் இம்மாதிரி நலன் பயக்கும் கண்காட்சிகளை அமைக்க ஊக்கம் தருகிறது.

அறிவுச் செல்வம் வளர்க்கும் சாதனமாக இது அமைந்துள்ளது.

நம் நாட்டில் மக்கள் எல்லாவற்றையும் படித்துத் தெரிந்து கொள்வார்கள் என்றிருந்தால், அது இயலாத காரியம். கண்ணால் கண்டு, கேள்விகள் கேட்டு விளக்கங்களைப் பெறும் இம்மாதிரிக் கண்காட்சிகள் மூலம்தான் நம் நாட்டு மக்களுக்கு அறிவுத் தெளிவை ஏற்படுத்த முடியும். அதற்கு உறுதுணையாக இது அமைகிறது.

இதே போன்று தமிழகத்தின் மற்ற பகுதிகளில் உள்ளவர்கள் அதிக ஈடுபாடுகொண்டு அந்தந்தப் பகுதிகளில்—குறிப்பாக கிராமங்களில், இம்மாதிரிக் கண்காட்சிகளை நடத்தவேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். கிராமங்களுக்குப் புத்தறிவைத் தரப்பயன்படும் இது.

### அறிந்தது குறைவு ; அறிய வேண்டியது அதிகம் !

"நல்ல கருத்துக்களை இதன் மூலம் பெற வேண்டியுள்ளோம். நாம் அறிந்தது குறைவு, ஆனால் அறிய வேண்டியது மிக அதிகமாக இருக்கிறது.

நான், இன்று காலை, டெல்லி பட்டணத்தில் பிரிட்டிஷ் தூதரகத்தைச் சேர்ந்த ஒருவரிடம் பேசிக்கொண்டிருந்தபோது எனக்கு தூக்கிவாரிப் போடும்படியாக அவர் ஒன்று கேட்டார். "உங்கள் தமிழகத்தில் இந்த ஆண்டு மழை

---

**எதிர்ப்பக்க படங்கள் விளக்கம்:**

**படம் 1** :—செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகத்தில் கிராம நலக் கண்காட்சி டிசம்பர் கடைசி வாரத்தில் நடைபெற்றது. தமிழக அரசின் அமைச்சர்கள் கண்காட்சி விழாவில் கலந்துகொண்டு உரையாற்றினர். அமைச்சர்கள் கண்காட்சியினைப் பார்வையிடுதலை படங்களில் காணலாம்.

**படம் 2** :—மாண்புமிகு உணவமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் கிராம அதிகாரிகளின் குறைகளை நேரில் கேட்கிறார் (தமிழக அரசு தலைமைச் செயலகம், 21—12—1967)

**படம் 3** :—பாதுகாப்புக் கண்காட்சி ரயில் வண்டி, சென்னைக் கடற்கரை ரயில் நிலையத்தில் 7—1—1968-ல் மாண்புமிகு முதலமைச்சரால் துவக்கி வைக்கப்பட்டது.

**படம் 4** :—மதுராந்தகம் கிராம நலக் கண்காட்சியில் 27—12—1967-ல் பாசன நாள் (Irrigation Day) கொண்டாடப்பட்டது. நிலப்பட்டாக்களை அவ்வமயம் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் வழங்கினர்.

**படம் 5** :—அண்மையில் சென்னையில் நடைபெறவிருக்கும் அகில இந்திய மதுவிலக்கு மாநாட்டினை ஒட்டிய பூர்வாங்கக் கூட்டம் 24—12—1967-ல் தமிழக அரசின் செய்தி நிலையக் கட்டிடத்தில் நடைபெற்றது. மாண்புமிகு முதலமைச்சர் அக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றினர்.

**படம் 6** :—சிறு சேமிப்பு நிறுவனத்தின் துணைத்தலைவர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன், எம்.எல்.ஏ., சென்னை இராஜாஜி மண்டபத்தில். 6—1—1968-ல் தொழில் அதிபர்களுக்கு ஒரு தேனீர் விருந்தளித்தார். மாண்புமிகு முதலமைச்சர் அவ்வமயம் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

15 நாட்கள் கழித்துதான் பெய்ததே, இதனுல் உங்களுக்குப் பாதகமா—சாதகமா ?'' என்று கேட்டார்.

உரிய நேரத்தில் நாட்டில் மழை பெய்ததா, காலந்தவறி மழை பெய்ததா என்பதை இங்கிலாந்து தூதர் கேட்கும் அளவுக்கு அவர்கள் அறிவு பெற்றுள்ளனர். அந்த அளவுக்கு அறிவுத்தாகம் அங்கு. ஆனுல் இங்கு அவ்வளவு அறிவுத் தாகம் இல்லை.

சில ஆண்டுகளாக, கிராமப்புறத்தில் இந்தத் தாகம் ஏற்பட்டுள்ளது. அவர்களுக்கு எடுத்துச் சொல்லவும், உலக அறிவு பெறுவதற்கும் அதையே கிராமத்தில் உள்ள வர்கள் பெறுவதற்கும் உரிய வாய்ப்பு—பெரும் வித்தியாச நிலையில் உள்ளது. இந்த வித்தியாசங்களைப் போக்கக் கண்காட்சிகள் சிற்றூர்களில் நடத்தப்பட வேண்டும். அதன்மூலம் உலகத்தின் வளர்ச்சியை கிராம மக்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டும்.

1947–க்குப் பிறகு நம்முடன் சுதந்திரம் பெற்ற நாடுகள் இந்த பதினைந்து ஆண்டுகளில் எந்த அளவு முன்னேறியிருக்கின்றன, மக்கள் வாழ்க்கை எவ்வளவு

## மதுராந்தகம் கிராம நலக் கண்காட்சி

விளக்கிடவும் இம்மாதிரி கண்காட்சிகள் மெத்தவும் பயன்படும்.

இது முதல் முறையாக இங்கு நடத்தப்பட்டுள்ளது. இதில் இன்னும் பல திட்டங்கள் இணைக்கப்பட வேண்டும் என்பதை மாவட்ட ஆட்சித் தலைவரும் நாமும் பெற்றுள்ளோம்.

இன்னும் இதில் என்ன மாற்றங்களை செய்யலாம்—இதில், எதில் மக்களுக்கு அதிக விருப்பம் உள்ளது ? என்பதையெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கடிதம் மூலம் தெரிவியுங்கள்.

ஏன் கடிதம் மூலமாக என்கிறேன் என்ருல், நாம் அதிகாரிகளைப் பார்க்கும்போது சிபாரிசு கேட்கப்போவது பழக்கம். நல்ல காரியங்களைச் சொல்ல நாம் ஆலோசனை களைச் சொல்ல அவர்களிடம் போவதில்லை. சிபாரிசுக்காகப் போவது ஜனநாயகக் கெடுதல் என்பதை பலர் உணராமல் அதில் ஈடுபடுகிருர்கள், ஆகையால்தான் ஆலோசனைகளைக் கடிதம் மூலம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்தக் கண்காட்சி செங்கல்பட்டு மாவட்டத்திலேயே பல சிற்றூர்களில் இன்னும் விரிவான முறையில் நடத்தப்பட வேண்டும் என்பதில் நான் நாட்டம் கொண்டுள்ளேன்.

சீர்திருத்தி அமைக்கப்பட்டுள்ளது எனத்தெரிந்து கொண்டு அதோடு நம் நாட்டு நிலைமைகளைப் பார்த்தால் நாம் அந்த நாடுகள் மாதிரி ஆக எடுக்க வேண்டிய முயற்சிகள் எவ்வளவு இருக்கின்றன என்பதை அறியமுடியும்.

100-க்கு 40 பேர் எழுதப் படிக்கத் தெரிந்ததாக நாவலர் சொன்னுர். எழுதப் படிக்க என்ருரே தவிர, சரியாக எழுதப் படிக்க என்று சொல்லவில்லை. 'நான் எழுதியதை நான்தான் படிக்க முடியும், மற்றவர் படிக்க முடியாது' என்பவர்களையும், 'நான் எழுதினேன் ஆனுல் எனக்கே விளங்கவில்லை' என்று சொல்பவர் களையும் சேர்த்துத்தான் இந்த 40 பேர்.

இன்னும் ஒரு கதை சொன்னுல், கிராமத்தில் உள்ள ஒரு வீட்டில் எழுதப் படிக்கத் தெரியாதவன் வீட்டில் தவலை ஒன்று காணுமல் போனுல் அவன் அடுத்த வீட்டுக் காரனை அழைத்துத் தவலை காணுமல் போனது பற்றி போலீசுக்கு மனு எழுதிக் கொடுக்கச் சொல்கிருன்.

மனு போலீசுக்கு அனுப்பப்பட்ட 1 மணி நேரத்தில் போலீஸ் உயர்தர அதிகாரிகள் வீடு நோக்கி வருவதைக் கண்ட தவலை பறிகொடுத்தவன் இதல்லவோ தர்ம ராஜ்யம் என்கிருன். வீட்டுக்கு வந்த அதிகாரிகளை

## மாண்புமிகு முதலமைச்சரின் நிறைவு விழாப் பேருரை

உலக அறிவுபெற :

**பட்டணத்திலுள்ள 10 படித்தவர்கள் அறிய வேண்டும் என்பதற்காகப் பொருட்காட்சி நடத்து வதைவிட, மற்றவர்களுக்கு—குறிப்பாக கிராம மக்களுக்கு உலக அறிவு ஊட்டக் கண்காட்சிகள் நடத்தப்பட வேண்டும். கிராம மக்களுக்கு நாம் உலக அறிவை ஊட்டவில்லையென்ருல், அது நாட்டை வாழ வைக்காது ; வளர வைக்காது.**

நம்நாட்டில் 100–க்கு 80 பேர் கிராம மக்கள். 10 பேர் பட்டணத்திலும் மீதி 10 பேர் கிராமத்திலும் நகரத்திலும் உழன்று கொண்டிருப்பவர்கள். நகரத்திலுள்ளவர்கள் வரவேற்று உட்கார சொல்கிருன், ஆனுல் அதிகாரியோ பரபரப்போடு '' எங்கே நடந்தது ? எங்கே நடந்தது ?'' எனகிருர்.

அப்போது தவலை பறிகொடுத்தவர், '' ஐயா —எதற்காக வந்தீர்கள் ?'' எனக் கேட்டார். '' ஏதோ இங்கே கொலை நடந்ததாக மனு வந்தது. நீதானே அனுப்பினுய் !'' என்கிருர் அதிகாரி. உடனே அவன் மனுவை அடுத்த வீட்டுக்காரன் எழுதினுன் ! எனக்கூறி அவனை அழைத்து வருகிருன். வந்தவன் நான்தான் எழுதினேன் என்கிருன். மனுவில் நீ ஏதோ கொலை விழுந்ததாக எழுதியிருக்கிருயே என போலீஸ் அதிகாரி

கேட்க, நான் தலையைக் காணோம் என்றுதானே எழுதினேன் என்கிறான். மனுவில் தலை காணமல் போய்விட்டது என்பதற்குப் பதிலாக நடுவில் உள்ள 'வ" எழுத்தை விட்டு விட்டு "தலை என" எழுதியதால் இந்தப் பரபரப்பு.

அப்படி எழுதிய அவனையும் சேர்த்துத்தான் இந்த 40 பேர்! ஆகையால் நாம் செல்ல வேண்டிய தூரம் வெகு தொலைவு. எடுக்க வேண்டிய முயற்சி ஏராளம். அறிவுத் தெளிவுபெற இக்கண்காட்சி பயன்படுகின்றது.

**இடைவெளியை நிரப்ப..**

உலகத்தின் அறிவுக்கும் நமக்கு கிடைத்துள்ள அறிவுக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது. மற்ற நாடுகளுக்கும் நமக்கும் செல்வம் என்ற காலம். அதுவும் 2 அல்லது 3 குழந்தைகள் வரைதான். அதற்கும் மேலிருந்தால் குழந்தை எத்தனை என்று கேட்பதில்லை, குழந்தை குட்டி எத்தனை என்றுதான் கேட்கிறோம்.

ஆகையால் குட்டி வேண்டாம். குழந்தை என்ற அளவோடு குடும்பத்தைக் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டியதுதான்—ஒரு குழந்தைக்கும், 2-வது குழந்தைக்கும் நடுவில் இடை வெளி இருக்கவேண்டும். நாம் சினிமாவுக்கு போகிறோம். 3 மணி நேரம் நடக்கக்கூடிய அந்த சினிமாவிலும் 15 நிமிடம் இடைவெளி விடுகிறார்கள். ஆனால் பிள்ளைகளைப் பெறுவதில் இடைவெளியே இல்லாமல் செய்கிறோம்.

முதல் குழந்தை பிறந்து அது வளர்ந்து 2-வது குழந்தையை அது தூக்கி வைத்துக்கொள்ளும் அளவு

## கிராம மக்களுக்கு உலக அறிவை ஊட்டவில்லையென்றால் . . .

உள்ள இந்த பள்ளத்தை பல்கலைக் கழகங்களால் நிரப்ப முடியாது, அல்லது உயர்நிலைப் பள்ளிகளால் நிரப்ப முடியாது.

அதற்காகத்தான் இம்மாதிரி கண்காட்சிகளின் மூலம் பகுத்தறிவைக் கொடுத்து விஞ்ஞான அறிவை எடுத்துக் காட்டித்தான் இந்தப் பள்ளத்தை—உலக அறிவுக்கும், நம் மக்களுக்கும் உள்ள இடைவெளியை நிரப்ப முடியும்.

ரஷ்ய நாடு சுக்கிரமண்டலம் செல்ல வழி அமைத்துக் கொண்டுள்ளது. அமெரிக்கா சந்திர மண்டலத்திற்கு இன்னும பத்து வருடங்களில் சென்று வர பாதை அமைத்துவிட்டதாம் அந்த அளவுக்கு மற்ற நாடுகளில் விஞ்ஞான அறிவு வளர்ந்துவிட்டது.

நான் 12-மணிக்கு டெல்லியில் புறப்பட்டு 3-மணிக்கு விமானத்தின் உதவியால் 1,360 மைல்களைக் கடந்து வர முடிந்தது. இன்னும் 25 ஆண்டுகளுக்குப் பிறகு மதுராந்தகத்திலிருக்கும் ஒருவர் தன் நண்பரிடம், "நான் சந்திர மண்டலம் போய்விட்டு, அடுத்த வியாழக்கிழமை வருகிறேன்" என்று சொன்னால் அதைக்கண்டு வியப்படைவதற்கில்லை. அந்த அளவுக்கு விஞ்ஞான அறிவு கால இடைவெளி ஒவ்வொரு குழந்தை பிறப்புக்கும் இடையே இருத்தல் வேண்டும். 3 அல்லது 5 வருட இடைவெளி இருக்க வேண்டும். ஒரு குழந்தைக்கும், மற்ற குழந்தைக்கும் இடையே எத்தனை வருட வித்தியாசம் என்று கேட்கும் நிலையில் குடும்பங்கள் இருக்க வேண்டும்.

நீங்கள் ஆண்டவனையே எடுத்துக்கொள்ளுங்கள் பரம சிவனுக்கு 2 குழந்தைகள், ஒன்று விநாயகர், மற்றொருவர் முருகன், விநாயகர் குடும்பக்கட்டுப்பாடே வேண்டாம் என திருமணத்தினின்றும் ஒதுங்கி விட்டார். மற்றொருவரான முருகனுக்கு இரண்டு மனைவிகள், ஆனால் குழந்தை இல்லை. முருகனுக்கே குடும்பக்கட்டுப்பாடு தேவையென்றால், முத்துசாமிக்கும், சின்னசாமிக்கும் தேவையில்லையா? 20 ஆண்டுகளுக்குக் கொஞ்சம் மனதை திடப்படுத்திக் கொள்ளுங்கள். நாட்டின் உற்பத்தியை பெருக்கித் தொழில் வளத்தை ஏற்படுத்தி, வருமானத்தை உயர்த்தி வாழ்க்கைத்தரம் உயர்ந்து வளர வேண்டியவைகள் வளர்ந்து செல்வம் பெருகினால் பிறகு குழந்தை செல்வத்தைக் கவனிக்கலாம்.

## அது நாட்டை வாழ வைக்காது: வளர வைக்காது

மற்ற நாடுகளில் வளர்கிறது. ஆனால் நாம் காஞ்சீபுரத்தில் உட்கார்ந்துகொண்டு தேர் எந்த தெருவுக்கு போயுள்ளது எனப் பேசிக்கொண்டிருக்கிறோம். உலகம் நம் மனிதர்களை மதிக்க வேண்டும். பகுத்தறிவு இருந்தால் தான் மற்ற நாட்டவர் நம்மை பாராட்டுவர்.

**குழந்தையும் குட்டியும்!**

நம் நாட்டில் மக்கட்தொகை பெருக்கம் மிகவேகமாக நடந்து வருகிறது. நிபுணர் கணக்குப்படி நாம் ஒவ்வொரு ஆண்டும் ஒரு ஆஸ்திரேலிய (நாட்டு ஜனத்தொகையை) நாட்டை உண்டு பண்ணி நம் நாட்டோடு சேர்த்துக் கொண்டிருக்கிறோம். இதைத் தடுத்தாக வேண்டும். ஆகவே தான், குடும்பக் கட்டுப்பாட்டினை கைக் கொள்ள வேண்டும் என்று சொல்கிறோம். ஒரு காலம் இருந்தது—குழந்தைகளை

**ஆசிரியர்கட்கு மதிப்பு!**

கல்விச் செல்வத்தை அளிப்பதில் எவ்வளவு ஆர்வம் ஆசிரியர்கள் காட்டுகிறார் என்பதை இங்கு படங்கள் எடுத்துக் காட்டுகின்றன. அந்த ஆசிரியர்களுக்கு சமுதாயத்தில் நல்ல மதிப்பு கிடைக்கச் செய்ய வேண்டும். ஏனென்றால், அவர்கள்தான் அறிவுக் கண்களை திறந்து வைக்கிறார்கள். நான் இங்கு ஒரு பிரிவில சென்றபோது திருக்குறளையும் சங்க இலக்கியத்தைப் பற்றியும் விளக்கி சொல்லும்போது மகிழ்ச்சியடைந்தேன். கிராம மக்களுக்கு இம்மாதிரி கருத்துக் கருவூலங்கள் கண்காட்சிகளின் மூலம் கிடைக்கப் பெற வேண்டும்."

**[செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் நடைபெற்ற "கிராம நலக் கண்காட்சி விழாவில் கலந்துகொண்டு மாண்புமிகு முதலமைச்சர் ஆற்றிய உரையின் சாரம்]**

[கிராம நலத் திட்டங்கள்—9-ம் பக்கத் தொடர்ச்சி]

மக்கள் நலனைப் பேணுகின்ற பொதுநலப் பணியில் ஈடுபடுவோர், பல்வேறு துன்பங்களையும் சிக்கல்களையும் எதிர்கொள்ள நேரிடுவதில் வியப்பில்லை. எண்ணற்ற துன்பங்கள் நேரிடும் பொழுது, அவற்றை அஞ்சாமல் எதிர்கொண்டு. அவற்றை தீர்க்க உழைப்பவரைக் கண்டு, திருவள்ளுவர்

'இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ' என்று பாராட்டுகிருர். இத்தகைய பொதுநலத் தொண்டர்களின் உள்ளத்தை, 'இன்பம் விழையான், இடுக்கண் இயல்பு என்பான்' என்று படம் பிடித்துக் காட்டுகிருர்.

மக்கள் சமுதாயத்தை, 'மன்பதை' என்று கூறுவது பழங்கால மரபு. "மன்பதை காக்கும் நல்குடி பிறத்தல் துன்பம் அல்லது தொழுதகவில்லை" என்ற சிலப்பதிகார வரிகள், அனைவரும் போற்றவேண்டிய பொன்மொழிகளாகும். மக்கள் நலனில் நாட்டம் கொண்டு உழைப்பவர் அனைவரும் இந்த மனப்பக்குவத்தைப் பெறுவது நலம்.

இன்றைய நிலையில் மக்களாட்சி முறையின்படி. 'மன்பதை' காக்கும் பொறுப்பு. தேர்தல் வாயிலாகக் கிடைக்கிறது. ஆகவே மக்களின் துன்பங்களை நன்குணர்ந்தவர்களே, அவற்றை தீர்க்கும் பொறுப்பை மேற்கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் தலைவர்கள், உள்ளாட்சி நிறுவனங்களைச் செயல்படுத்தும் பொறுப்பையும் பெருமையையும் பெறுகின்றனர்' இவர்கள் வகுக்கும் திட்டங்களை நிறைவேற்றி வைக்கின்ற கடமையும் வாய்ப்பும், அரசாங்க, உள்ளாட்சி அலுவலர்களைச் சாரும். இந்த இரு சாராரும் தமது பொறுப்புக்களையும் கடமைகளையும் சரிவர உணர்ந்து, எத்தகைய மோதலுக்கும் இடமில்லாமல், இரயில்பாதையின் இரு தண்டவாளங்களைப் போல், சரியான நிலையில் இயங்க வேண்டும். கிராமநலத் திட்டங்கள் வெற்றி பெறுவதற்கு, மக்கள் தலைவர்கள், அரசாங்க அதிகாரிகள் ஆகியோர்களிடையே இருக்கும், பண்பட்ட தோழமை உணர்வே, அடிப்படையாக அமையும் என்பதில் ஐயமில்லை.

## மதிய உணவுத் திட்டத்தில் ஒரு புதிய மாற்றம்

கிராமங்களில் வாழும் ஏழை எளியவரின் குழந்தைகளுக்கு, மதிய உணவு அளிப்பதில், புதிய மாற்றம் செய்ய முயன்று வருகிறோம். ஒரு வட்டாரத்திலுள்ள எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் தேவையான மதிய உணவை, மையமான ஓரிடத்தில், தயார் செய்து, தக்க சுகாதார வசதிகளோடு எல்லாப்பள்ளிகளுக்கும் அளிக்க முன்வந்துள்ளோம். சோதனைத் திட்டமாக, பூவிருந்தமல்லி வட்டாரத்தில், 'கேர்' நிறுவனத்தாரின் உதவியுடன் செயல்படும் இத்திட்டம், விரைவில் பல்வேறு மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும். இந்த வகையில் எல்லா ஊராட்சி மன்றங்களிலும், இதைப்பற்றிச் சிந்தித்து நடைமுறைக்கேற்ற ஏற்பாடுகளைச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். வட்டார முழுவதிற்கும் மையமான ஒரே இடத்தில் உணவைத் தயாரிப்பதின்மூலம், தற்சமயம் பள்ளிக்கூட ஆசிரியர்கள் இதற்காக எடுத்துக்கொள்ளும் நேரமும் சிரமமும், கணிசமாகக் குறையும் என எதிர் பார்க்கலாம்.

30 ஏக்கர் நிலம் பள்ளி மதிய உணவுத்திட்டத்துக்கென நன்கொடையாகக் கிடைத்தால், அதைச் சாகுபடி செய்து' அதிலிருந்து கிடைக்கும் முதலைக்கொண்டு, ஒரு வட்டாரத்தில் எல்லாப்பள்ளிக்கூடங்களுக்கும் தேவையான மதிய உணவைப் பெற முடியுமென கருதப்படுகிறது.

கிராமங்களில் படிக்கும் ஏழைச் சிறுவர் சிறுமியர்களுக்கு இலவசமாகப் பாடப்புத்தகங்களை அளிக்கும் திட்டம், சேலம் மாவட்டம், நாமக்கல் பகுதியைச்சார்ந்த, மோகனூர், எருமைப்பட்டி, நாமக்கல் ஆகிய இடங்களில் 1967-ம் ஆண்டு நவம்பர் மாதம் 12-ம் தேதியில் துவக்கி வைக்கப்பட்டது. இதை மேலும் மற்ற இடங்களுக்குப் படிப்படியே விரிவு படுத்த எண்ணியுள்ளோம்.

ஊராட்சி மன்றங்கள் எல்லாவற்றிற்கும், வானொலி மன்றங்களை அமைத்துக் கொடுத்ததில் இந்தியாவிலேயே, தமிழக அரசு, முதலிடம் பெற்றுள்ளது. கிராம மக்களிடையே புதிய விஞ்ஞானக் கருத்துக்களைப் பரப்பி, நாட்டின் நலனுக்கு ஊக்கம் அளிக்க, வானொலி மிகவும் பயன்பட்டு வருகிறது. அதற்கேற்ப, வானொலி வாயிலாக உழவர்கள் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு, கிராம வானொலி மன்றங்கள் பெரிதும் உதவி வருகின்றன. இவ்வாண்டு, மாவட்ட அளவில், பரிசுத் திட்டம் ஒன்றை நிறுவி, சிறந்த பணியாற்றும் வானொலி மன்றங்களுக்கு ஊக்கமளித்துள்ளோம். நவம்பர் மாதம், திருச்சி வானொலிநிலையத்தில் ஏற்பாடான விழா ஒன்றில் பங்கு கொண்டு பரிசளித்த மாண்பு'மிகு வேளாண்மைத் துறைஅமைச்சர் அவர்கள், கிராம வானொலி மன்றங்கள் விவசாயமேம்பாட்டுக்கு உறுதுணையாக இருப்பதைப் பாராட்டியது குறிப்பிடத்தக்கது,

## வள்ளுவர்கூறும் நல்லுரை

'பயன் மரம் உள்ளூர் பழுத்தற்றால்' என்றும் 'ஊருணி நீர் நிறைந்தற்றே' என்றும்,

ஒப்பரவறிதலுக்கு, அதாவதுபொதுநலத் தொண்டிற்கு இரு சிறந்த உவமைகளை வள்ளுவர் மேற்கோளிட்டுக் காட்டுகிருர். அனைவருக்கும் பயன் தரும் தீங்கனிகளை வாரிவழங்கும் மரத்தை யார் தான் வாழ்த்த மாட்டார்கள்? அதேபோல, அனைவருக்கும் தேவையான நீரை வற்றுமல் அளிக் ஊருணியை யார்தான் போற்றுமல் இருப்பார்கள்?

இக்காலத்தில் " மன்பதை " காக்கும் நன்குடிப் பொறுப்பை, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் தலைவர்கள் மட்டுமின்றி, அரசாங்கத்தில் பணிபுரியும் அலுவலர்களும் ஏற்றுள்ளனர். இந்த இரு சாராரும், வள்ளுவர் கூறும் இந்த இரு முக்கிய பண்புகளை நினைவு கொள்வது நலம்.

ஏழை எளியவர் அனைவரும், வேற்றுமையின்றிப் பயனடையும் வகையில் தீங்கனி பலதரும் நன் மரம் போலவும், தீஞ்சுவைநீர் தரும் ஊருணி போலவும், தொண்டாற்றுவோமாக."

[வானொலிப் பேச்சு 28—12—67]

# சீரிய பணியாற்றும் நகராட்சிகள்

## சங்கரன்கோவில் நகராட்சி, திருநெல்வேலி மாவட்டம்

சங்கரன்கோவில் ஊராட்சி மன்றம் நகராட்சி மன்றமாக 1964-ம் ஆண்டு எப்ரல் மாதம் 1-தேதி முதல் உயர் நிலைப்படுத்தப்பட்டது. ஊராட்சி மன்றமாக இருந்த காலத்தில் இந்நகரிலுள்ள வீடுகளில் எல்லாம் 1000க்கு மேற்பட்ட சாக்கடை தொட்டிகள் இருந்து வந்தன. அவைகளை 10 சாக்கடை வண்டிகள் மூலம் அப்புறப்படுத்தி வந்தும் பிரச்சினை நீங்கவில்லை. மேலும் நகரெங்கும் சாக்கடைநீர் வழிந்தோடிக் கொண்டிருந்தது. 1964-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ந் தேதி முதல் குழாய் மூலம் குடி தண்ணீர் வழங்கு திட்டமும் அமுலாக்கப்படவே கழிவு நீர் போக்கு மிகமிக அதிக மாகிவிட்டது. இப்பெருங் குறையைப் போக்க நகராட்சி யிலிருந்து ரூபாய் 50,000 வரை செலவு செய்து தாங்கு சுவர்கள் கட்டியும் 600க்கு மேற்பட்ட சாக்கடை தொட்டிகளை அதில் இணைத்தும் நகரின் அழகைக் கெடுத்து வந்த சாக்கடைப் பிரச்சினை பெருமளவில் நிவர்த்திக்கப்பட்டது.

நகராட்சி தண்ணீர் தேக்க நிலையை இடத்திலும் மற்றுமொரு இடத்திலும் அழகான இரண்டு பூங்காக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஒரு பூங்காவில் தத்ருபமான பலவகை அலங்கார சிலைகள் வைக்கப்பட்டிருப்பது கண்ணுக்கும் கருத்துக்குமொரு விருந்தாகும்.

நகராட்சி ஆரம்பக் காலத்திலிருந்து இதுவரை ஆறு ரோடுகளுக்கு அரசாங்க கடனும் உதவித் தொகையும் பெற்று தார் ரோடு போடப்பட்டுள்ளது. நகரிலுள்ள முக்கியமான சில சந்துகளுக்கு சிமிண்டு தளம் போடப் பட்டுள்ளது. அரசாங்கத்திலிருந்து ரூபாய் 19 இலட்சம் செலவில் தண்ணீர் சப்ளை திட்டம் நிறைவேறி இந்நக ராட்சி பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. செப்டம்பர் 1967 முடிய 726 வீடுகளுக்கு குழாய் இணைப்புக் கொடுக் கப்பட்டுள்ளது.

நகராட்சியான பிறகு நகரின் பல்வேறு தெருக்களிலும், சந்துகளிலும் தேவையான அளவுக்கு டியூப் லைட்டுகளும் சாதாரண பல்பு லைட்டுகளும் போட்டு நகர் அலங்காரப் படுத்தப்பட்டிருக்கிறது.

25 வீடுகளுக்கு புதிதாக தண்ணீர் இணைப்புகள் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ரூ 3,043 செலவில் 4 தெருக்களில் தாங்கு சுவர்கள் கட்டி சாக்கடைகளின் பெருக்கை தடுக்கப் பட்டிருக்கிறது.

## குற்றால நகரியத்தின் புதிய வேலை விவரங்கள்

குற்றாலத்தின் உல்லாசப்பயணிகளின் வருகை ஆண்டு தோறும் ஜூன் மாதம் தொடங்கி செப்டம்பர் மாதம் வரை நீடித்திருக்கும். அந்தக் காலங்களில் வருகிறவர்களுக்கு கீழ்க்கண்ட வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன:

**நகரமைப்பு தங்கும் விடுதி.**—குற்றாலம், தென் காசி ரோட்டில் பஸ் ஸ்டாண்டிற்கு கிழக்கே ஒரு இலட்சம் ரூபாய் செலவில், நவீன கால வசதிகளுடன் நான்கு 'ஏ' வகுப்பு அறைகளும், ஆறு 'பி' வகுப்பு அறைகளும் கட்டப்பட்டுள்ளன. சமையலுக்கும், சாப்பிடுவதற்கும் தனி இட வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**மேற்கூரை பூங்கா ஓட்டல்.**—குற்றாலம் பஸ் ஸ்டாண்டில் ரூபாய் 25 ஆயிரம் செலவில் மேற்கூரை பூங்கா கட்டப் பட்டுள்ளது. சீசனுக்கு வருகிறவர்கள் அனுபவிக்கத் தக்க ரீதியில் வண்ண விளக்குகள் ஒளி வீசும் காட்சி களில், சிற்றுண்டிகள் அருந்த வசதிகள் செய்யப் பட்டுள்ளன.

**விளம்பரக் காட்சி அறை.**—குற்றாலம் முக்கிய அருவிப் பக்கம் விளம்பர காட்சி அறைகள் ரூபாய் 10 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ளன. இவற்றில் உள்ள விளம்பரக் காட்சிகளை அருவியில் குளிக்க வருகிறவர்கள் கண்டுகளிக் கின்றனர்.

**ஐந்தருவி கார் நிற்குமிடம்.**—ஐந்தருவி சுமார் 2 மைல் தொலைவில் உள்ளது. அங்கு காரில் செல்பவர்கள் கார்கள் நிறுத்த இடமில்லாமல் இருந்ததை மாற்றி ரூபாய் 22 ஆயிரம் செலவில் கார்கள் நிறுத்தத்தக்க இடவசதிகள் செய்யப்பட்டிருக்கிறது.

**பொருள் காப்பறைகள்.**—ஐந்தருவிக்கு செல்பவர்கள் தங்கள் உடமைகளைப் பாதுகாக்க இடவசதியில்லாத குறைவெகுகாலமாக இருந்ததை நிவர்த்திக்கும் பொருட்டு ரூபாய் 2,000 செலவில்பொருள் காப்பறைகள் கட்டப்பட்டுள் ளன. மேலும் அங்கு கக்கூஸ் வசதிகளும் செய்யப்பட்டிருக் கின்றன.

**சிற்றில்லங்கள்.**—குற்றாலம் தென்காசி ரோட்டில் புதிய விடுதிக்கு எதிர்ப் பக்கத்தில் இரண்டு சிற்றில்லங்கள் ரூபாய் 18000 செலவில் கட்டப்பட்டுள்ளன. நவீன வசதிகளுடன் கூடியவை இவை. இங்கு குடும்பத்தினர் தனிமையில் ஒரு சேர தங்குவதற்கு ஏற்றவாறு இருக் கும். இங்கு கார் நிறுத்தவும் வசதி இருக்கிறது.

லெட்சுமிபுரம் கிழக்கு ரோடு ரூபாய் 19 ஆயிரம் செலவில் போடப்பட்டிருக்கிறது. இதனால் புதிய வீடுகள் இங்கு கட்டப்படுகின்றன.

பேருவியில் குளிக்க வருகிறவர்களுக்கு காபி அருந்து வதற்கு வசதியாக அங்கு காபி அருந்தும் இல்லம் ரூபாய் 1,500 செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

**பொருட்காட்சி.**—குற்றாலம் வருகிற பொது மக்களுக்கு; அவர்கள் பகலில் அருவியில் குளித்து இன்புற்ற பிறகு மாலையில் இன்பகரமாகவும், சுவையான அரசியல் திட்ட கருத்துக்களும், அதிசய காட்சிகளும் சுவைக்கும் வண்ணம் பல அம்சங்கள் கொண்ட பொருட்காட்சி ஜூலை 15-ந் தேதி முதல் ஒரு மாத காலத்திற்கு நகரியக் குழுவால் நடத்தப்படுகிறது. இதில் வருகின்ற நிகர லாபம் குற்றாலம் வருகின்ற மக்களுக்கு வசதிகள் செய்வதிலேயே செலவிடப்படுகின்றது.

**கலையரங்கு.**—குற்றாலத்தில் பூங்காவிற்கு பக்கத்தில் பாறையில், பொது மக்கள் நன்மையைக் கருதி ஒரு கலையரங்கு ரூபாய் 4இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகிறது.

## கிருஷ்ணகிரி நகராட்சி

இந்நகராட்சியானது 1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ந் தேதி முதல் ஏற்படுத்தப்பட்டது. நகராட்சியான பின் கீழ்கண்டவை பராமரிக்கப்பட்டு வருகின்றன.

| | |
|---|---|
| முதுநிலை ஆதாரப்பள்ளிகள் | 4 |
| ஆரம்ப பள்ளிகள் | 3 |
| தாய்சேய் நல விடுதிகள் | 2 |

கல்வி: 1966-67-ம் வருடத்தில் மேலும் மூன்று புதிய ஆரம்பப் பள்ளிகள் துவக்கப்பட்டன. 1967-68-ம் வருடத்திலும் மேலும் ஒரு புதிய ஆரம்ப பள்ளி துவக்க முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன. மாவட்ட கல்வி அதிகாரியின் உத்திரவு இக்கல்வி ஆண்டு ஆரம்பிப்பதற்கு முன்பே கிடைக்கப்பெறுததனால், மேற்படி புதிய ஆரம்ப பள்ளியை 68/69-ல் துவக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

**பேருந்து நிலையம்.**—இந்நகராட்சி எல்லையில் பஸ்கள் நிற்பதற்கான சரியான பேருந்து நிலையம் இல்லாததனால் ரூ. 2,00,000 மதிப்பீட்டில், இந்நகரின் ஒரு பகுதியான பழையபேட்டையில் ஒரு பேருந்து நிலையம் கட்டப்பட்டு வருகிறது. கட்டப்பட்டுவரும் பேருந்து நிலையம் முடியும் தருவாயில் உள்ளது. இவ்வருட இறுதிக்குள் முடிவு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ரோடுகள்.—ரோடுகள் பராமரிப்புக்காக நகராட்சியான பின் கீழ்க்கண்டவாறு செலவுகள் செய்யப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| 1. | சிமெண்ட் கான்கீரீட் ரோடுகள் போட்டதற்கு | ரூ. | 11,600 |
| 2. | தார் ரோடுகளாக போட்டதற்கு | ரூ. | 28,900 |
| 3. | கற்கள் பரப்பினதற்கு | ரூ. | 77,300 |
| 4. | கல்வர்ட்டுகள் கட்டினதற்கு | ரூ. | 14,200 |
| 5. | சாக்கடைகள் கட்டினதற்கு | ரூ. | 16,500 |
| 6. | ரோடுகள் இருபுறமும் பக்கச் சுவர்கள் கட்டினதிற்கு | ரூ. | 33,500 |
| 7. | கால்வாய்கள் கட்டினதற்கு | ரூ. | 14,500 |

**மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியம் வழிகாட்டுகிறது**

**கிராம நல-தல நிர்வாகத் துறைச் செயலாளர் அவர்கள், தமிழகத்தில் எல்லா ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களுக்கும், நகராட்சி மன்ற ஆணையாளர்களுக்கும், கிராம வளர்ச்சிக்ெனவே அரசினரால் வெளியிடப்படும் 'கிராம நலம்' மாத இதழுக்கு அதிகப்படியான சந்தாதாரர்களை சேர்க்குமாறு, 17-10-1967-ல் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இதற்கிணங்க, கோயம்புத்தூர் மாவட்டம் மடத்துக்குளம் பஞ்சாயத்து ஒன்றிய ஆணையாளர் திரு தி. பா. நாகமுத்து, 'கிராம நலத்'திற்கு 805 புதிய சந்தாதாரர்களை சேர்ப்பித்துள்ளார். இது மிகவும் பாராட்டுக்குரியதாகும். மடத்துக்குளம் பஞ்சாயத்து ஒன்றியத்தைச் சேர்ந்த அலுவலர்கள் ஆர்வத்தோடு மேற்கொண்டிருக்கும் இம் முயற்சி, ஏனைய ஒன்றியங்களும் நகராட்சிகளும் பின்பற்றத்தக்கதாகும்.

சென்ற வருடம் அரசினர் மான்யம் பெற்று கீழ்கண்ட இரண்டு ரோடுகளுக்கு தார் போடப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| 1. | காலனி ரோடு | ரூ. | 9,600 |
| 2. | லக்ஷ்மணராவ் ரோடு | ரூ. | 11,600 |

இவ்வருடம் அரசினரின் மான்யம் பெற்று கீழ்க்கண்ட இரண்டு ரோடுகளுக்கு தார் போடப்பட்டு வருகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | நேதாஜி ரோடு | ரூ. | 17,500 |
| 2. | சப்ஜெயில் ரோடு | ரூ. | 18,200 |

**விளக்குகள்.**—கீழ்க்கண்டவாறு தெரு விளக்குகள் இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

| | | |
|---|---|---|
| சாதாரண தெரு விளக்குகள் | .. | 322 |
| குழாய் விளக்குகள் | .. | 158 |
| மெர்குரி விளக்குகள் | .. | 18 |

நகரின் முக்கிய இடங்களிலுள்ள 84 சாதாரண விளக்குகளை குழாய் விளக்குகளாக மாற்றி பொருத்தவும், விளக்குகள் இல்லாத இடங்களில் 14 புதிய குழாய் விளக்குகள் பொருத்தவும் கோரிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளன. இவ்வருட இறுதிக்குள் விளக்குகள் யாவும் மின்சார போர்டாரால பொருத்தப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நகராட்சிக்கு நீர் வழங்கு திட்டம் இல்லாததனால், மேல் நிலைத்தொட்டிகள் மூலம் பொதுமக்களுக்குத் தேவையான தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. அரசாங்கத்தினராலும் இந்நகராட்சிக்கான நீர்வழங்கு திட்டத்தை ரூ. 28 இலட்சம் மதிப்பீட்டில் முழுத்தொகையையும் கடனாக அளித்து அனுமதி செய்யப்பட்டுள்ளது.

# வளர்ச்சிப் பாதையில் ஆதிவாசிகள்

**இந்தக் கிராமம் ஏனைய கிராமங்கள்போல் பரவலாக இல்லை ; வீடுகளும் ஒன்றையடுத்து மற்றொன்று இல்லை ; இங்கொன்று அங்கொன்றுமாக தனித்தனியே காணப்படுகின்றன. பல கிராமங்களிலுள்ள பாசன வசதிகளிலிருந்து அங்குள்ள பாசன வசதி பெரிதும் மாறுபட்டுள்ளது. அந்தக் கிராமம் நகரை யொட்டியோ, அல்லது நகரிலிருந்து சற்று தூரத்திலோ இருக்கவில்லை ; நகரிலிருந்து பெருந் தொலைவிலிருக்கிறது. இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள இந்த கிராமத்தின் பெயர் ' கஹாரி ' என்பதாகும்.**

இராஜஸ்தானிலுள்ள துன்கார்பூர் என்னுமிடத்திலிருந்து, மலைச்சரிவில் 16 மைல் தூரம் வளைவான பாதைகளில் பொறுமையுடன் சென்றால், கஹாரி என்ற கிராமத்தையடையலாம். ஒவ்வொரு விவசாயியும் தன் வயலின் நடுவில் ஒரு மேடான இடத்தை அமைத்து, அதில் குடிசையைக் கட்டிக்கொண்டு வாழ்கிறார். அவரது வீட்டைச் சுற்றி அவரது வயல்களே காணப்படும். இம்முறையில் சுமார் 500 வீடுகள் இருக்கின்றன. இங்கே இரண்டு வீடுகளைக் கூட ஒரு சேரக் காணக் கிடைக்கவில்லை.

### மக்கள் கட்டிய பள்ளி

சோளமும், கோதுமையுமே முக்கிய பயிர்கள். மழை நீர் சிறு சிறு ஓடைகளின் வழியே ஆங்காங்கு சென்று கொண்டிருக்கிறது. சில ஓடைகளை ஒன்று சேர்த்து, ஒரு சிறு அணையைக் கட்டி, மழை நீரை தேக்கி வைத்து, அதன் மூலம் தேவையான போது வயலுக்கு பாசனம் செய்து கொள்கின்றனர். முதலில் கோதுமையைப் பயிர் செய்கின்றனர் ; அது அறுவடையானதும், மழை நாட்களில் சோளத்தைப் பயிரிடுகின்றனர். அதன் பிறகு மீண்டும் கோதுமை.

இங்குள்ள 500 வீடுகளும் தனித்தனியே காணப்படுகையில், ஒரே ஓர் இடத்தில் மட்டும் மூன்று கூரைகள் ஒன்றாகத் தென்படுகின்றன. அவை எதுவாயிருக்கக் கூடும் ? அது தான் கஹாரி கிராமத்தின் கல்விக்கூடம். தாங்களாகவே முன்வந்து கட்டிய பள்ளி இது. அக்காலத்தில் எவருமே எழுத்தறிவு பெறாதிருந்த இக்கிராமத்தில், தற்போது குழந்தைகள் அனைவரும் கல்வி கற்க முனைந்துள்ளனர். நாடு விடுதலை பெற்றவுடன் ஏற்பட்ட மறுமலர்ச்சியில் கஹாரியும் பங்கு பெற்று தன் கடமையுணர்ந்து, செயல் புரியத் தொடங்கியுள்ளது. இந்த சிறு பள்ளியில் சுமார் 80 முதல் 100 மாணவர்கள் வரை கல்வி கற்கின்றனர்.

### சமூக விரோதிகள் தீவிர உழவர்களாயினர்

கஹாரி ஊராட்சியில், கஹாரியைத் தவிர பலோடா, தொல்வார் என்ற இரண்டு சிறிய கிராமங்களும் அடங்கியுள்ளன. பலோடா மக்கள் விவசாயத்தை அண்மைக் காலம்வரை புறக்கணித்து வந்தனர். விவசாயத்தின் மூலம் போதிய வருவாய் இல்லை என்பதே அவர்களின் இப்போக்கிற்குக் காரணம். ஆனால் அதே மக்கள், ஆறு இடங்களில் ஓடைகளைத் தடுத்து, கரைகளைக் கட்டி, ஆண்டிற்கு மூன்று போகம் விவசாயம் செய்யுமளவிற்கு வளர்ச்சியடைந்துள்ளனர். ஒரு காலத்தில் சமூக விரோதிகள் என்று அழைக்கப்பட்ட இம்மக்கள், இன்று முதல் தர விவசாயிகளாக மாறியுள்ளனர். மலையடிவாரத்திலுள்ள தங்கள் கிராமத்தில், பற்பல இடங்களில் கிணறுகளைத் தோண்டி, நீரை இறைப்பதற்காக பாரசீக சக்கரங்களைப் பொருத்தியுள்ளனர்.

### நிறைவேறா ஆவல்.....

கஹாரி கிராம வாசிகளின் ஒரே ஓர் ஆவல் இன்னும் நிறைவேறாமலேயே இருக்கிறது. அவர்கள் ஊரில் ஒரு வானொலிப் பெட்டிகூட இல்லை. நகரங்களுக்கு அப்பால் வெகு தொலைவில் வசிப்பதால், உலக நடவடிக்கைகளிலிருந்து அவர்கள் துண்டிக்கப்பட்ட நிலையில் வாழ்கின்றனர். ஒரு வானொலிப் பெட்டியாவது இருந்தால், நாடு நகரைப் பற்றி அறியக்கூடும் என்று தங்கள் ஆவலை வெளிப்படுத்துகின்றனர். இருப்பினும், கிராமத்திலுள்ள பள்ளிக்கு நாளிதழ்கள் தருவிக்கப்படுகின்றன. அவற்றை பள்ளிச் சிறுவர்கள் தங்கள் பெற்றோர்களுக்கு வாசித்து உதவுகின்றனர்.

ஆதிவாசிகள் தங்களின் பழைய வாழ்க்கையை உதறித் தள்ளி, புதிய உலகில் புகுந்துவிட்டனர். நம்பிக்கையுடனும், விடா முயற்சியுடனும் முன்னேற்றப் பாதையில் விரைந்து சென்ற வண்ணமிருக்கின்றனர்.

## பிற மாநிலங்களில்

# சொன்னதைச் செய்வேன்... ...செய்வதைச் சொல்வேன்.

**ஊராட்சியில்** நிறைவேற்றப்படவிருக்கும் எந்த ஒரு திட்டத்தையும், தனிப்பட்ட முறையில் அவர் செயல்படுத்தி பார்த்த பின்னரே, அதைப் பற்றி பிறருக்கு கூறும் இயல்புள்ளவர் திரு டி. எஸ். கொர்கேட் என்ற ஊராட்சி தலைமை நிர்வாக அதிகாரி. புல்தாளு மாவட்ட (மகாராஷ்டிர மாநிலம்) அதிகாரி இவர்.

"நான் சொல்வதைச் செய்வேன்; செய்வதைச் சொல்வேன்" என்று ஆழ்ந்த அனுபவத்துடன் கூறும் இவர், "பஞ்சாயத்து ராஜ்" என்ற ஆங்கில திங்கள் இதழ் நிருபருடன் நிகழ்த்திய உரையாடலின் ஒரு பகுதி இது.

ஒட்டுச் சோளப் பயிர் மிகச் செழிப்பாக கண்களுக்கு பெருவிருந்தாய் காட்சியளித்தது. அப்பயிரைக் காணும்போது, அதற்கு மிகுந்த கவனம் அளிக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாயிற்று. பயிர் அறுவடைக்குத் தயாராயிருந்தது.

"எப்போது அறுவடை செய்யப் போகிறீர்கள்?" —நிருபர்.

"இவ்வார இறுதியில் அறுவடை செய்யலாமென்றிருக்கிறேன்." —திரு கொர்கேட்.

"எவ்வளவு மகசூல் கிடைக்கும் என்று எதிர்ப்பார்க்கிறீர்கள்?"

"என்னுடைய நிலம் சுமார் ஓர் ஏக்கர்; சுமார் 10 குவிண்டால் கிடைக்குமென்று நினைக்கிறேன்."

"தங்களுடைய மதிப்பு மிகவும் குறைந்ததாயிருக்கும்போலிருக்கிறது. நிச்சயமாக 12 குவிண்டால் கிடைக்கும்."

அவருடைய புன்னகை ததும்பிய முகத்தை உற்று நோக்கினேன். "உண்மையை ஏன் ஒளிக்கிறீர்கள்? விளைச்சலை அதிகமாகவும் கூறவேண்டாம். குறைத்தும் சொல்லவேண்டாம் என்று நினைக்கிறேன்" என்றேன். அவர் அதற்கு ஒன்றும் பதில் சொல்லவில்லை.

**தன்னைப் பற்றி கூறத் தயக்கம்....**

புல்தாளு மாவட்ட ஊராட்சி தலைமை நிர்வாக அதிகாரியான திரு டி. எஸ். கொர்கேட் என்ற இவரிடமிருந்து, தனிப்பட்ட முறையில் தகவல்களைச் சேகரிப்பது மிகவும் இன்னலான காரியம். ஆனால் அவரது ஊராட்சியின் திட்டங்கள், பணிகள், அதிகாரிகள், அலுவலர்களைப் பற்றி அவர் ஏராளமான தகவல்களைத் தருகிறார். ஆனால் தன்னைப்பற்றி கூறுவதற்கு அவருக்கு ஏனோ இந்த தயக்கம்!

"உங்கள் தோட்டத்தில் மலர்ச் செடிகளை பயிரிடாமல், ஒட்டுச் சோளத்தைப் பயிரிட்டிருக்கிறீர்களே, ஏன்?"

**"செய்யாததை சொல்லமாட்டேன்"**

"மலர்களையும் நான் வேறொரு இடத்தில் பயிரிட்டுள்ளேன். இந்த

ஓர் இடத்தில் மட்டுமே சோளம் பயிரிடப்பட்டுள்ளது. ஊராட்சியில் சோளப் பயிர் திட்டம் ஒன்றை செயல்படுத்த தொடங்கியுள்ளோம். அப்பயிரின் நன்மை, தீமைகளைப் பற்றி நான் முதலில் நன்கறிந் திருத்தல் வேண்டும். இல்லாவிடில் அதைப்பற்றி நான் எப்படி பிற ருக்கு கூறமுடியும்? இந்த ஒட்டுச் சோளப் பயிருக்கு கூடுதலாக செல வாகி, விவசாயிகளுக்கு ஏற்றதாக இல்லாவிடில், இத்திட்டத்தை எதிர்க் கக்கூடிய முதல் மனிதன் நானாகத் தான் இருக்கமுடியும். சொல்வதைச் செய்வேன். செய்வதைச் சொல்வேன்" என்றார், திரு கொர்கேட்.

"இப்பயிருக்கு அதிகமான செலவு எதுவும் கிடையாது. பனிரெண்டு மூட்டை சோளத்திற்கு மார்க்கெட்டில் கிடைக்கும் விலை ரூ. 800. ஆனால் எனக்கு ஏற்பட்ட செலவோ மிகக் குறைவு. தவிர, மூன்று மூட்டை அம்மோனியம் சல்பேட்தான் எனக்கு தேவைப்பட்ட உரம்" என்று மேலும் கூறினார் திரு கொர்கேட்.

### "இப்போதுதான் கற்றுக் கொள்கிறேன்.."

அவருடன் மேலும் அளவளாவிய தில், சாதாரண ரக விதைகளை விட ஒட்டுச்சோள ரக விதைகளின் விலை அதிகம் என்றும், விளைச்சலில் ஒட்டு ரக விதைகள் மூலம், மூன்று மடங்கு அதிக மகசூல் கிடைக்கும் என்பன நன்கு தெளிவாயிற்று.

சாதாரண ரக விதைகளைப் பயிரிட் டால் ஏக்கருக்கு 5 குவிண்டால்தான் கிடைக்கும். ஆனால் ஒட்டு சோள விதைகள் மூலம் 15 குவிண்டால் விளைச்சலை எளிதாகப் பெறமுடியும்.

"எனவே நீங்களும் ஒரு தீவிர விவசாயிதான்" என்றார் நிருபர்.

"எனக்குத் தெரியாது. இப்போது தான் விவசாயத்தைக்கற்றுக்கொண்டு வருகிறேன்" என்றார், திரு கொர்கேட் அமைதியுடன்.

# பிற மாநிலங்களில்..

'மெங்கன்வாடி' என்பது ஒரு மிகச் சிறிய கிராமம். இது மகாராஷ்டிர மாநிலத்தில் சங்கிலி ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கிறது. கிரா மத்தைச் சுற்றியுள்ள வயல்களுக்குப் போதிய பாசன வசதியின்மையால், வளமான நிலத்தில் கூட உணவுப் பொருள்களை விளைவிக்க முடிய வில்லை. இங்கு 37 அடி குறுக்களவுள்ள 35 அடி ஆழக் கிணறு ஒன்றைத் தோண்டினால், அதன் மூலம் ஏராளமான நீர் பாசனத் திற்கு கிடைக்கும் என்று கிராம வாசிகள் அனைவரும் எண்ணினர். மேலும் அதன் மூலம் குடிநீர் பிரச்னைக்கும் ஒரு முடிவு ஏற்படக் கூடும்.

1966-ம் ஆண்டு மே திங்களில் இப்பணி தொடங்கியது. மூன்றே நாட்களில் 25 அடி அகலமுள்ள 125 அடி நீள கால்வாயும், 25 அடி ஆழ கிணறும் தோண்டப்பட்டு விட்டன. நான்காம் நாள் வேலையை ஆரம்பிக்கையில் இயற்கை இவர் களுக்கு துணை செய்யவில்லை. அன்று முதல், அடுத்த மூன்று நாட்களில் ஓயாத பெருமழை பெய்ததன் விளை வாக, கால்வாய் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுவிட்டது; 25 அடி ஆழ கிணறும் சேற்றால் மூடப் பட்டுவிட்டது. இருப்பினும் கிராம வாசிகள் மனந்தளராமல், மீண்டும் கால்வாயை வெட்டியதுடன், கிணற் றில் சேர்ந்த சேற்றையும் உடனே அப்புறப்படுத்தினர். இதைச் செய்வ தற்காக பெண்கள் தங்களது நகைகளை அடகுவைத்து, பணத்தைத் தந்து, கிராமத்தைச் செழிப்பாக்க, தங்களது கடமையையாற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மனந்தளராத உழவர்கள்

கிணற்றை வெற்றிகரமாக தோண்டி முடித்துவிடின், மலைப் பகுதியினைக் குடைந்து, 600 அடி நீள சிமெண்ட் குழாய்கள் வாயி லாக வயல்களுக்கு பாசன வசதி செய்யக்கூடும். இப்பணியில் அரும் பணியாற்றியவர் திரு. பாபுராவ் சம்பாஜி என்ற வயது முதிர்ந்த கிராமவாசி.

விவசாயிகளில் பெரும் பாலோர் ஒன்றுகூடி, நில அடமான வங்கியில் தங்களது நிலங்களை அடகுவைத்து ரூ. 32,000 சேர்த்தனர். அத் தொகையைக் கொண்டு கிணறு வெட்டும் பணியில் தங்களது முழு உழைப்பையும், கவனத்தையும் செலுத்தத் தொடங்கி னர்.

கிராம மக்களின் இத்தியாக உணர்வைக் கண்ட ஊராட்சி ஒன்றி யம், குழாய்ப் பாசனத் திட்டம் ஒன்றிற்கு அனுமதி வழங்கியது. ரூ. 7,500 செலவில் 9 அங்குல குழாய்களை ஒன்றியம் அளித்ததுடன் கிணறு தோண்டுவதற்கென, ரூ. 8,000-ம் தந்தது. இவற்றின் காரணமாக, இன்று 20 ஏக்கர் நிலத்தில் ஒட்டுச் சோளப் பயிர் செழித்து வளர்ந்துள்ளது.

"இன்று என்ன சமைப்பது?"— இதுவே குடும்பப் பிரச்னை; இது தாய்மார்களின் தலையாயப் பிரச்னை; ''மார்க்கெட்டில் என்னென்ன கிடைக்

# அசாமில் சத்துணவுத் திட்டம்

கும், எவற்றை வாங்க முடியும், எவற்றை வாங்கினால் பசியைப் போக்கிக் கொள்ள முடியும்?''—இவை யெல்லாவற்றையும் பொறுத்துத் தான் அன்றைய சமையல் பிரச்னைக்கு ஒரு முடிவு காண முடியும். ஆனால் விஞ்ஞானம் இதற்கொரு எளிய முறையை வகுத்துத் தந்துள்ளது. உணவில் புரதம், மாவு, கொழுப்பு, தாதுச் சத்துக்கள், உப்பு உயிர்ச் சத்துக்களெல்லாம் வேண்டிய அளவில் கலந்திருத்தல் மிகவும் இன்றியமையாதது. அவ்வாறு உணவைச் சமைத்து உண்பது பெரும் பாலோர் எண்ணுவது போன்று ஓர் இன்னல் மிகுந்த காரியமல்ல. அது ஓர் எளிதான செயலே. குழந்தைகளின் உணவில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும். அவர்களின் வயது, வேலை, விளையாட்டுகளுக்கேற்ப உடல் வளர்ச்சியைப் பேணும் வகையில் சத்துள்ள உணவுகளை அவர்களுக்கு அளிக்க தவறக் கூடாது. நாட்டில் கிடைக்கும் உணவுப் பொருள்களை தகுந்த முறையில் சாப்பிட்டு, மிகுந்த அளவில் ஆரோக்கியத்துடன் வாழ, மக்களுக்கு போதிய பயிற்சி அளிக்கப்படுதல் வேண்டும்.

இதனைக் கருத்தில் கொண்டே, சத்துணவு திட்டமானது அசாமிலுள்ள 'மைய ஜொர்ஹாட் வளர்ச்சி வட்டார'த்தில் செயல்படுத்தப்படுகிறது. இவ் வட்டாரத்திற்கு சிபாஹீகோலா என்ற மாற்றுப் பெயரும் உண்டு. திட்டம் துவக்கப்பட்ட ஓராண்டிலேயே வட்டாரத்தில் அதற்கு நல்ல ஆதரவு கிடைத்துள்ளது. பள்ளிக் குழந்தைகளுக்கு, மதிய உணவு சத்துள்ளதாக இருக்க வேண்டியதன் அவசியத்தை மக்கள் தெளிவாக உணரத் தலைப்பட்டுவிட்டனர். குழந்தைகள் தூய உடையணிந்து, சுத்தமாக பள்ளி சென்று, சகோதரர்களாக பழக வழி வகை செய்யவேண்டுமென்பதையும் அவர்கள் அறிந்துள்ளனர். வேளாண்மை, கோழிப் பண்ணை, மீன்வளம், சமூகக் கல்வி பணிகளடங்கிய சத்துணவு திட்டமொன்று "யூனிசெஃப்"பின் ஆதரவில் 1966-ம் ஆண்டு அக்டோபர் திங்களில் துவக்கப்பட்டது.

**பள்ளிகளில் காய்கறித் தோட்டம்**

பள்ளிகளில் காய்கறிகளை உற்பத்தி செய்வதற்கு முதலிடம் தரப்பட்டு, அதற்கென இருபது தொடக்கப்பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. இப்பள்ளிகளில் 1966-ம் ஆண்டு முதல் காய்கறிகள் பயிரிடப்படுகின்றன. மழைக் கால, கோடைக்காலக் காய்கறிப் பயிர்களுக்கேற்ப விதைகள் அளிக்கப் படுகின்றன. சிறுவர்களால் எளிதாகக் கையாளக்கூடிய உழுபடைக் கருவிகள், அவர்களிடம் தரப்பட்டுள்ளன. பள்ளிகள் தவிர, தனியார்த் தோட்டங்களிலும் காய்கறிகள் பயிரிடப்படுகின்றன. இத் தோட்டங்களில் பயிராகும் காய்கறிகள் அனைத்தும் பள்ளிகளுக்கு அனுப்பப் படுகின்றன.

பழத் தோட்டங்களை அமைப்பதற்கு தகுந்த இடங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன. இவற்றில் ஐந்து பழத் தோட்டங்கள் அமைக்கப்படவிருக்கின்றன. இவற்றில் பழ உற்பத்தி தொடங்கியதும் குழந்தைகளின் பழ உணவுத் தேவை பூர்த்தியடைந்து விடும்.

**இருவித பண்ணைகள்**

தனியார் கோழிப்பண்ணை, சமுதாய கோழிப்பண்ணைகள் என்று இரு வித பண்ணைகள் 45 இருக்கின்றன. இவை 1966-ம் ஆண்டு அக்டோபர் திங்களில் ஆரம்பிக்கப்பட்டவை. ஒவ்வொரு சமுதாய கோழிப் பண்ணைக்கு 100 பறவைகளும், தனியார் பண்ணைக்கு 20 பறவைகளும் அளிக்கப்பட்டுள்ளன. இப்பறவைகளுக்கென பண்ணைகள் அதன் உற்பத்தியில் 50 சதவீத முட்டைகளை பள்ளிகளுக்கு கொடுத்துவிடவேண்டும். பண்ணைகளுக்குரிய கருவிகள் எல்லா பிரிவுகளுக்கும் தரப்பட்டுள்ளன. தீவனங்களும் தவறாது கொடுக்கப்படுகின்றன.

**திட்டத்தை நிறைவேற்றும் மன்றம்**

மீன் உற்பத்தித் திட்டம் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் அதற்குரிய தொடக்க பணிகள் அனைத்தும் முடிவுபெற்றுள்ளன. கிராமத்திலுள்ள நீர் நிலைகளுக்கு, சீக்கிரமே மீன் குஞ்சுகள் வழங்கப் படவிருக்கின்றன.

சத்துணவு திட்டத்தை செம்மையாக நிறைவேற்றுவதற்கு இளைஞர் மன்றங்களும், மகளிர் மன்றங்களும் அமைக்கப்பட்டுள்ளன. மன்ற உறுப்பினர்களுக்கு, வட்டார தலைமையிடங்களில் போதிய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

பள்ளிகளில் பாத்திகள் அமைக்கவும், தோட்டத்தைச் சுற்றி வேலிகளை அமைக்கவும் இளைஞர்கள் மன்றம் பேருதவி புரிந்

[அடுத்த பக்கம் பார்க்க]

காப்பு வீரர்களுக்கோ, தங்க ளுக்குச் சொந்தமாக பாசறையை அமைத்துக்கொள்ள வேண்டும் என்ற நெடு நாளைய அவா, கனவு சீக்கிரமாகவே நினைவாயிற்று.

# வீரர்கள் சமைத்த பாசறை

திரிபுராவிலுள்ள எல்லைப் பாது காப்பு வீரர்களுக்கு ஒரு தலை மையிடம் அவசியமெனத் தோன் றியது. அதற்கென மேலதிகாரி களுக்கு விண்ணப்பம் செய்து நிலத்தை தேர்ந்தெடுத்து, திட்டங்கள் போட்டு, பொறியாளர்கள் வந்து, வேலையைத் தொடங்குவதற்கு நீண்ட காலதாமதம் ஆகுமல்லவா? எனவே, எல்லைப் பாதுகாப்புப் படையின் பிரிவுத் தளபதி தன்னுடைய வீரர் களை அணுகி, "இது போன்ற காரியங்களை யெல்லாம் நீங்களே செய்து கொள்வது தான் சிறந்தது; தன் கையே தனக்குதவி ; மூன்று மாதகாலத்தில் இத் தலைமையிடத்தை நாமே அமைத்துக் கொண்டு விட லாம்" என்று கூறியபோது, ஒரு போர் வீரராவது அவர் சொல்வதை ஏற்க மறுக்கவில்லை. முடிவு ? காட் டுப் பகுதியிலே ஓர் அழகான தங்கு மிடம் மூன்று மாதத்தில் தோன்றி விட்டது.

இந்த எல்லைப்பாதுகாப்புப் படையி னருக்கு, திரிபுரா காவலர்கள் தேவை யான உதவிகளை செய்து வந்தனர். இருப்பினும், தங்களுக்கென ஒரு தலைமையிடத்தை தனியே அமைத் துக்கொள்ள படையினர் விரும்பினர். மேலும், மலையின் உச்சியிலுள்ள காந்தி கிராமம், கோகுல்நகர் ஆகிய ஊர்கள் இயற்கை வளம் மிகுந்த அழ கிய தோற்றமுள்ளவை. இங்கு தலைமையிடத்தை நிர்மாணிக்கத் திட்டமிட்டிருந்ததானது, அவர்களின் உற்சாகத்தை பன்மடங்கு பெருக் கியது.

பாதுகாப்பு படை வீரர்கள் வேலை யைத் தொடங்கினர். மரங்களெல்லாம் பளபளக்கும் இரம்பங்கள் கொண்டு அறுத்து கீழே தள்ளப்பட்டன. புதர் கள், செடிகளெல்லாம் கனவுகள் தோன்றி மறைவது போன்று சற் றென மறைந்தன. சுறுசுறுப்பான, ஓயாத உழைப்பினுல், காட்டுப் பகுதி கள் சீரமைக்கப்பட்டு, தலைமை யிடத் திற்குரிய நிலம் கண்முன்னே தயா ரென காட்சியளித்தது.

## அனுபவற்ற கரங்கள் செயலில் முனைந்தன....

திரிபுராவில் மூங்கில்களுக்கோ பஞ்சமில்லை. களிமண் ஏராளம். புற்கள் தான் சில பிரச்னைகளை ஏற் படுத்தின. அங்குள்ள உள்ளூர் வாசிகள் எப்படி வீடுகளைக் கட்டுகின்ற னர் என்பதை வீரர்கள் சீக்கிரத் திலேயே அறிந்துக்கொண்டனர். அனுபவமற்ற கரங்கள், கீற்றுக்களை தயாரித்தன. கூரைகளை வேய்வது தான் சற்று சிரமமான காரியமாக இருந்தது. ஆனல் போர் வீரர்கள் பின்தங்கக் கூடிய அளவிற்கு அவ் வளவு சிரமமான செயலாக அது இல்லை. சில கிழமைகளிலேயே, பாசறை மேல் நோக்கி வளர்ந்து வந் தது. இப்படித் துரிதமாக சுவர்கள் கட்டப்படுவதையும், கூரைகள் அமைக்கப்படுவதையும் கண்ட உள்ளூர் கட்டிட அமைப்பாளர்களுக்கு பொரு மையே ஏற்பட்டு விட்டது எனலாம். மேலும், அவை வலுவாக இருப்பது, அவர்களின் பொருமையை மேலும் வளர்த்தது! ஆனல், எல்லைப் பாது

நாட்டின் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்ட நேரம் போக, எஞ்சிய நேரத் திலேயே அவர்கள் இதில் ஈடுபட லாயினர். இடத்தை அமைத்ததில் பெரும் சிக்கனமும் ஏற்பட்டது. இதை முறையோடு கட்டியிருந்தால், அதற்கு குறைந்தது இருபதாயிரம் ரூபாயாவது ஆகியிருக்கும். ஆனல், வீரர்களின் தனிப்பட்ட உழைப்பு, மூங்கில், களிமண் போன்ற மூலப் பொருள்களின் சகாய விலை ஆகியவை செலவைக் குறைத்தன. ஏற்பட்ட செலவு சில நூறு ரூபாய்கள் மட்டுமே.

உள்ளூர் வாசிகள் கட்டடம் கட்டும் முறையைத் தான் வீரர்களும் கை யாண்டார்கள். ஆனல், அவர்களின் செயல், அவர்கள் ஒரு முன் மாதிரியை ஏற்படுத்தவில்லையா ?

---

அசாமில் சத்துணவுத் திட்டம்....

[முன் பக்கத் தொடர்ச்சி]

துள்ளது. மகளிர் மன்றங்கள் மதிய உணவுகளை சமைத்து, குழந்தை களுக்கு பரிமாறும் பணியை மேற் கொண்டுள்ளன. இம் மன்றங்களின் சேவையைப் பாராட்டி, உறுப்பினர் களை ஊக்குவிப்பதற்கென, இளைஞர் மன்றத்திற்கு ரூ. 7,555-ம் மகளிர் மன்றத்திற்கு ரூ. 2,500-ம் மானி யங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சுமார் 1,710 மாணவர்கள் வாரத் தில் இரு நாட்கள் மதிய உணவைப் பெறுகின்றனர். 'மைய ஜொர்ஹாட் வட்டாரம்' 1966-ம் ஆண்டு அக் டோபரிலிருந்து இந்த திட்டத்தை நிறைவேற்றி வருகிறது. உணவில் காய்கறிகளும், முட்டைகளும் உள் ளன. தேவையான அரிசியை பெற் ருேர்கள் அன்பளிப்பாகத் தருகின்ற னர். ஒவ்வொரு மாணவனுக்கும் 75 கிராம் அரிசி, 90 கிராம் காய்கறி, ஒரு முட்டை ஆகியவை அளிக்கப் படுகின்றன.

வெயிலின் கொடுமை தாங்க முடியவில்லை; புழுதிக் காற்று பலமாக அடித்துக்கொண்டிருக்கிறது. இருப்பினும், அவர்கள் வெயிலின் கொடுமைக்கோ, புழுதிக் காற்றுக்கோ சிறிதும் அஞ்சாமல், அந்த வாய்க்காலை

# துன்புற்றோருக்கு துணிவு பிறந்தது.

வெட்டும் பணியிலேயே அவர்களின் முழுக்கவனமும் ஆர்வமும் செல்கின்றன. ஆண்கள், பெண்கள், சிறுவர்களென சுமார் 150 பேர்கள் இதில் ஈடுபட்டிருந்தனர். இயற்கையை வென்று, அதை தங்களுக்கு அடிமைப்படுத்த எண்ணி அவர்கள் செயல்பட்டனர்.

இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள மற்ற இருபத்திரெண்டு மாவட்டங்களைப் போன்று, பில்வாரா மாவட்டமும் வரட்சியால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. பில்வாரா மாவட்டத்திலுள்ள சாபுரா ஊராட்சி ஒன்றியமும் இதற்கு விலக்கல்ல. இங்குள்ள கிணறுகளும் வற்றிப்போய்விட்டன. பெரிய, பெரிய நீர்த் தேக்கங்களில் கூட ஒரு சொட்டு நீர் காணக் கிடைக்கவில்லை. செழிப்பு மிகுந்த கரிசல் பூமி, நீரில்லாமையால் வெடிப்பு கண்டுவிட்டது. ஆனால் இவையொன்றும் அத்தொண்டர்களின் நெஞ்சங்களை கலக்கவில்லை; அவர்களின் உற்சாகத்தை குறைக்கவில்லை. இவர்களின் ஆர்வத்தைக் கண்ட ஊராட்சியும், அவர்களுக்கு தேவையான உதவிகளைச் செய்ய முன் வந்தது.

### ஊராட்சி ஒன்றியமே விவசாயம் செய்தது

இங்குள்ள மூன்று வரிகளைச் சுற்றியும் சுமார் 5,106 ஏக்கர் நிலங்கள் விவசாயத்திற்குத் தகுதியானவை. இவற்றில் 485 ஏக்கர் நிலம் முதலில் சாகுபடிக்கு கொண்டுவரப்பட்டது. இந்த நிலங்களை விவசாயம் செய்வதற்காக 1965-ம் ஆண்டு உழவர்களிடம் தரப்பட்டது. ஆனால் அவற்றை சீராக்கும் பணிதான் விவசாயம் செய்வதைவிட, பெரியதொரு செயலாக விருந்தது. டிராக்டர்களையும் பம்புசெட்டுகளையும் அங்கே கொண்டு வந்து நிலங்களை சீராக்க ஊராட்சி ஒன்றியம் பெரிதும் உதவியது. அறுவடைக்குப் பின்னரே டிராக்டர், பம்பு செட்டுகளின் வாடகையை வசூலிப்பதென ஒன்றியம் தீர்மானித்தது. ஒன்றியத்தின் துணை கொண்டு, 1965–66-ம் ஆண்டில் சுமார் 1,500 ஏக்கர்களில் விவசாயம் செய்யப்பட்டன. விவசாயிகளுக்கு ஒதுக்கிய நிலம் போக, எஞ்சியிருந்த 824 ஏக்கர்களை ஊராட்சி ஒன்றியமே ஏற்றுக்கொண்டு, விவசாயம் செய்து, 20,000 மணங்கு கோதுமையை உற்பத்தி செய்தது. இந்த மகத்தான உற்பத்தியினால் ஊக்கம் பெற்ற ஊராட்சி ஒன்றியம், 1965-66 ஆண்டில் மேலும் 1,600 ஏக்கர்களில் விவசாயம் செய்ய தொடங்கியது.

அங்குள்ள நிலங்களை சீராக்கி, செப்பனிட்டு, அவற்றில் தானியங்களை உற்பத்தி செய்வது என்பது சாதாரண விவசாயி செய்யக்கூடிய ஒரு செயலன்று. நிலங்கள் வரண்டும், எங்கு நோக்கினும் புதர்களும் மண்டிக்கிடந்தன. டிராக்டர்களைக் கொண்டு புதர்களை அப்புறப்படுத்தி, நிலத்தை நான்கைந்து முறை உழுதால்தான் அதில் வேளாண்மையைத் தொடங்க முடியும்.

### துன்புற்றோருக்கு துணிவு பிறந்தது

கடந்த இரு வரட்சிகளாலும் துன்புற்ற விவசாயிகளிடம்,போதிய மூலதனமோ, பொறுமையோ இல்லை. ஆனால் ஊராட்சி ஒன்றியம் எல்லா உதவிகளையும் அளிக்க முன்வரவே விவசாயிகளுக்கு ஊக்கம் பிறந்தது. தங்களால் தனிபபட்ட முறையில் சாகுபடி செய்ய நிதி வசதியற்றவர்கள், ஒன்றியத்துடன் சேர்ந்து உழைக்க முன்வந்தனர்; அவர்களிடம் தான் மதிப்பிற்கரிய உழைப்புச் சக்தி மலிந்து கிடக்கிறதே ! திரு காலுபில் என்பவர் பசுமையான கோதுமை பயிர்களைச் சுட்டிக்காட்டி, "ஊராட்சி ஒன்றியம் தானே முன் நின்று உற்சாகமூட்டி, ஆதரவு தந்திராவிட்டால், இந்த பயிரைக் காண முடியுமா?" என்று மகிழ்ச்சியுடன்

[அடுத்த பக்கம்]

[முன் பக்கத் தொடர்ச்சி]

கூறினார். அவரது கண்களிலே நன்றியுணர்வு தெளிவாகத் தெரிந்தது.

சென்ற ஆண்டு, 824 ஏக்கர்களில் ஊராட்சி ஒன்றியம் விவசாயத்தை மேற்கொண்டது. இந்த ஆண்டின் நீண்ட பருவக் கால பயிரில், சாகுபடி இரண்டு மடங்காகப் பெருகியது. மொத்தமுள்ள 1,600 ஏக்கர்களிலே, சுமார் 1,200 ஏக்கர்களில் கோதுமை, பார்லியும், 200 ஏக்கர்களில் காய்கறிகளும் பயிரிடப்படுகின்றன. இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, மூன்று டிராக்டர்கள், 45 பம்பு செட்டுகள், மற்றும் சிறு சிறு கருவிகளை ஊராட்சி ஒன்றியம் விலைக்கு வாங்கியது. மேலும் வாய்க்கால்கள் வெட்டுதல், கிணறுகள் தோண்டுதல், சிறிய நீர்ப்பாசன வசதிகள் ஏற்படுத்துதல் போன்றவற்றிற்காக ரூ. 3·36 லட்சம் செலவழிக்கப்பட்டது. சம்பளம், எண்ணெய், விதைகள், கலவையுரம், ரசாயன உரம் போன்றவற்றில் சுமார் 60 லட்சம் செலவாயிற்று.

ஊராட்சி ஒன்றியத்திற்கு கிடைத்த வருவாய் ரூ. 9 லட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. காய்கறி விற்பனை மூலம் சென்ற ஆண்டு 1.95 லட்சம் வருவாய் கிடைத்தது; இந்த ஆண்டு கோதுமைப் பயிர் மூலம் ரூ. 1·50 லட்சமும் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. தழைகளின் மூலம் கிடைக்கும் ரூ. 60 ஆயிரத்தையும் சேர்த்து ரூ. 2.60 லட்சம் மொத்தமாக இலாபம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

“ஊராட்சிக்கு ஏற்பட்ட லாப நஷ்டங்களை மட்டும் கணக்கெடுத்துப் பார்ப்பதில் எவ்வித பயனும் இல்லை. ஊராட்சியின் பெருஞ் செயலை, அங்கு வருங்காலத்தில் ஏற்படவிருக்கும் கூடுதல் உணவு உற்பத்தியை கருத்தில் கொண்டு இதை ஆராய வேண்டும்” என்று கூறுகிறார், இத்திட்டத்தின் அதிகாரி. “தேசிய நெருக்கடி காலத்தில், இந்த ஒன்றியம் 30,000 மணங்கு அதிக உணவு உற்பத்தி செய்ததை ஒரு சாதனையாகவே கொள்ளலாம்” என்று மேலும் கூறினார் அவர்.

பனாரஸ் இந்து பல்கலைக் கழகத்திலிருந்து அரை பர்லாங் தூரத்திலிருக்கிறது, பகவான்பூர் என்ற ஒரு சிறிய கிராமம். நாடு விடுதலையடைவதற்கு முன் அந்த கிராமம் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருந்தது; நிலமும் வளமுடையதாக இல்லை. ஆனால் விவசாயமோ அவர்களின் முக்கியத் தொழிலாக இருந்தது. பாசனத்திற்கு போதிய வாய்ப்புகளும், வசதிகளும் இல்லை. வெள்ளம் அடிக்கடி பெருக்கெடுத்து, வயல்களை நாசம் செய்தது. இதனால் விவசாயிகள் மனங்குன்றி, செயலற்றவர்களாகி விட்டனர். ஒவ்வொரு நாளும் அவர்களுக்கு ஒரு யுகமாகக் கழிந்தது.

ஆனால் சமுதாய நலத்திட்டம் அங்கு செயல்படத் தொடங்கியவுடன் தான் வாழ்க்கையிலே ஏதோ ஒரு பொருள் இருப்பதாக அவர்கள் எண்ணத் தலைப்பட்டனர். திட்டங்கள், அவற்றை நிறைவேற்ற திறமை மிக்க வளர்ச்சி அதிகாரிகளின் உழைப்பால், அக்கிராமம் மிகுந்த முன்னேற்றத்தை அடைந்தது.

### சீரமைப்புப் பணி

பகவான்பூர் மக்கள் தொகை 1,436 மட்டுமே. இதில் பெரும்பான்மையோர் இந்துக்கள்; படித்தவர்கள் 14 சதவீதம். அறியாமையை அகற்றி, வாழ்க்கையை சீரமைத்துக் கொள்வதற்கென முதியோர் கல்விக்கூடங்கள், ஆங்காங்கே கிராமத்தில் இயங்குகின்றன; இது நல்ல பலனையும் தந்துள்ளது.

ஆங்கில, இந்தி நாளிதழ்களில் பெரும்பாலானவை இங்கு தருவிக்கப்படுகின்றன. வேளாண்மைக்கு உதவி புரியும் தகவல் கொண்ட செய்திக் குறிப்புகள் இங்கு வந்தவண்ணமிருக்கின்றன. ஒரு சிறிய நூலகத்தை ஏற்படுத்தும் முயற்சி தீவிரமாக நடைபெற்று வருகிறது. ‘டிரான்சிஸ்டர்’களையும் வானொலிப் பெட்டிகளையும் கடந்த பத்தாண்டுகள் வரை அறியாதிருந்த அவர்களுக்கு, அவை இன்று இன்றியமையாதவையாகிவிட்டன.

ரசாயன உரம், கடன்கள் வழங்குவதற்கென ஒரு சேவைக் கூட்டுறவுச் சங்கம் இருக்கிறது, இது 1964-ம் ஆண்டு பிப்ரவரி 19-ம் நாளன்று பதிவு செய்யப்பெற்றது. ரூ. 15,878·96 மூலதனத்துடன் 155 உறுப்பினர்களால் இது நடத்தப்படுகிறது.

### பெருகிவரும் ஆர்வம்

இரண்டு டீசல் பொறிகளை ரூ. 8,000 செலவில் வட்டாரம் வாங்கி, அவற்றை கிராமத்திற்கு அளித்துள்ளது. இவற்றினுதவியால் வயல்களுக்கு பாசனம் கிடைக்கிறது; 35 டன்கள் இரசாயன உரம் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளது. இரண்டு செயல் விளக்கப் பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டு. அவற்றின் மூலம் கிராம வாசிகளுக்கு நவீன விவசாய முறைகள் விளக்கப்படுகின்றன. பொறுக்கு விதைகள், உரங்கள், பூச்சி மருந்துகள் ஆகியவற்றிற்கு நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது. தீவிர உழவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் வளர்ந்துக்கொண்டேயிருக்கிறது.

விவசாயத்தையே நம்பி வாழ்ந்த மக்கள் பிற தொழில்களிலும் தங்கள் கவனத்தை செலுத்த முனைந்துள்ளனர். வளர்ச்சிக்கு ஒரு எடுத்துக்காட்டாகும். தற்போது 60 சதவீத மக்களே விவசாயம் செய்கின்றனர். எஞ்சியவர்கள், வணிகம், போக்குவரத்து, கைத்தொழில்கள் போன்ற இன்னபிற தொழில்களில் ஈடுபடுவராயினர்.

### புதிய வாழ்க்கை, புதிய கிராமம்

மக்களின் வாழ்க்கையில் ஒரு புதிய அத்தியாயம் தொடங்கியுள்ளது. பரம்பரைத் தொழிலையும், சொந்தத் தேவைகளைக் கொண்டே வாழ்ந்த வாழ்க்கையை அவர்கள் வெறுக்கத் தலைப்பட்டுவிட்டனர். குழந்தைகளுக்கு கல்வி, தீவிர விவசாயம், கடனில்லா வாழ்க்கை, நல்ல வீட்டு வசதி போன்றவற்றை பெற்றுக் கொள்வதில் ஆர்வம் காட்டுகின்றனர். வாழ்க்கையில் முன்னேறி, தம் சந்ததியினருக்கு ஓர் அழகான பகவான்பூரை விட்டுச் செல்ல அவர்கள் தங்களை அர்ப்பணித்துக்கொண்டுள்ளனர்.

## புதிய வாழ்க்கை

# பயிற்சியின் பயன்

"திராட்சை பயிர் செய்யும் முறையை நேரில் சென்று அறிந்துக் கொள்ள ஒரு விவசாயக் குழுவை மகாராஷ்டிரம், ஆந்திர மாநிலங்களுக்கு அனுப்ப இமாசல மாநில அரசு திட்டமிட்டு, அக்குழுவில் என்னையும் ஒருவனாகத் தேர்ந்தெடுத்தபோது, மற்றவர்களெல்லாம் என்னை வியப்போடு நோக்கினார்கள்" என்கிறார் ராணாராய் சிங். இவர் அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்து தன்னையும் குழுவில் சேர்த்துக் கொண்டார் என்றும் கூட சிலர் கூறத் தயங்கவில்லை. ஆனால் என்னுடைய திராட்சைத் தோட்டத்தை கண்ட அவர்கள், "தகுதியானவரைத்தான் அரசு அம்மாநிலங்களுக்கு அனுப்பியிருந்தது" என்பதை ஒப்புக்கொள்கின்றனர் என்றார் திரு சிங்.

திராட்சை வளர்ப்பதற்கென்றே பிறந்தவர் ராணா ராய் சிங். இமாசலப் பிரதேசத்திலுள்ள கங்கராவில் அவரை அறியாதார் யாருமில்லை. 1926-ம் ஆண்டில் பிறந்த அவர், 1951-ம் ஆண்டில் 'கும்மர்' என்ற ஊராட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1960-ம் ஆண்டு வரை அப்பதவியை அவர் தொடர்ந்து வகித்து வந்தார். அதே ஆண்டில் அவர் விவசாயத்தைத் தொடங்கிய போது, "விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கத்"திற்கு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மகாராஷ்டிரம், ஆந்திர மாநிலங்களுக்குச் சென்று திராட்சை வளர்ப்பு முறையை நேரில் கண்டறிந்து வர, தீவிர விவசாயக் குழு ஒன்றை மாநில அரசு அனுப்ப திட்டமிடுகையில், திரு சிங்கும் அதில் ஒருவராக சேர்த்துக் கொள்ளப்பட்டார். 1964-ம் ஆண்டில் அக்குழு இந்த இரண்டு மாநிலங்களுக்கும் சென்றது.

### பெருகிவரும் உற்பத்தி

சுற்றுலாவிலிருந்து திரும்பிய அவர், திராட்சையே பயிரிட்டு அதில் மிகு விளைச்சலை பெறவேண்டுமென்று தீர்மானித்துவிட்டார். முதலில் 40 திராட்சைத் துண்டுகளை அவர் நட்டார். மீண்டும் மகாராஷ்டிரா, ஆந்திரா மாநிலங்களுக்கு அவர் பயிற்சிக்காக அனுப்பப்பட்டார். பயிற்சி பெற்று திரும்பிய அவர், ஓர் ஏக்கர் நிலத்தில் திராட்சையை பயிரிடுவதற்குரிய எல்லா ஏற்பாடுகளையும் செய்து, அதில் முழு மனதுடன் செயல்பட்டார். இந்த ஓர் ஏக்கர் நிலத்தில் அவர் ரூ. 12,000 வரை முதலீடு செய்தார். 1966-ம் ஆண்டில் அவருக்கு 50 மணங்கு மகசூல் கிடைத்தது. அடுத்த ஆண்டில் இது 70 மணங்காக உயர்ந்தது. திராட்சைப் பயிர்கள் அனைத்திலுமிருந்து அவருக்கு கிடைத்த மொத்த உற்பத்தி 160 குவிண்டால் முதல் 200 குவிண்டால் வரை இருக்கக்கூடும்.

### பண்ணை ஒரு புனித இடம்

இந்த மலைப்பாங்கான மாநிலத்தில், திராட்சையைப் பயிரிட்டு, அது ஓர் இலாபகரமான தொழில் என்பதை முதலில் விளக்கிக் காட்டிய பெருமை திரு ராணாசிங்கையேச் சேரும். இம்மாவட்டத்திலுள்ள ஏனைய விவசாயிகள் இவருடைய பண்ணையை ஒரு புனித இடமாகக் கருதுகின்றனர். திராட்சையை பயிரிடும் முறையைக் கற்றுக்கொள்ள ஆந்திரவிற்கோ, மகாராஷ்டிரத்திற்கோ இனி எவரும் செல்ல வேண்டியதில்லை. திரு ராணாவிடம் சென்றால் போதும்; எல்லா ஐயங்களையும் அவர் தீர்த்து வைப்பார். இத்துறையில் அவர் பெரும் சேவை செய்தவராவர். உணவு தானியங்களை உற்பத்தி செய்வதைவிட, பழங்கள், காய்கறிகளை உற்பத்தி செய்வதில், கங்ரா மாவட்டம் அதிக கவனம் செலுத்தி பெரும் லாபமடையலாம் என்கிறார் திரு சிங்.

"மக்கள் கஷ்டப்பட்டு உழைக்கக் கூடியவர்கள்; சீதோஷ்ண நிலையும் அதற்கேற்றவாறே இருக்கிறது" என்கிறார் திரு சிங்.

திரு ராணா ராய் சிங் போன்று பல விவசாயிகள் நாட்டில் தோன்றினால், உணவு உற்பத்தியை நாம் பன்முறை அதிகரிக்க முடியும்.

---

"பஞ்சாயத்து ராஜ்" இதழ்களிலிருந்து இடம் பெறுபவை :

பக்கங்கள் : 31 முதல் 38 வரை.

**Articles reproduced from 'Panchayati Raj' on pages : 31 to 38.**

கிராம நலம்
பகுதி – 2
GRAMANALAM
PART – 2

# ஊராட்சி அரசிதழ்
# PANCHAYAT GAZETTE

(இந்தப் பகுதியில் ஊராட்சி, ஊராட்சி வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய அரசு ஆணைகள், குறிப்பாணைகள், விதிகள் முதலியவற்றின் தமிழாக்கம் சுருக்கமாக இடம் பெறுகிறது.)

—o—

## திருச்சிராப்பள்ளி வானொலி நிலையத்தில் ஊராட்சிகள், ஊராட்சி நிறுவனங்கள் பற்றி விளம்பரம் செய்தல்—செய்திகளைத் தொடர்ந்து அனுப்புதல்—விளக்க ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

## Publicity—Panchayats and Panchayat institutions over All India Radio, Tiruchirappalli - Materials—Regular supply—Instructions—Issued.

திருச்சி வானொலி நிலையம், சமீபத்தில் இரண்டு புதிய நிகழ்ச்சிகளைத் தொடங்கியுள்ளது; "ஊர் ஆட்சி", "பொது மேடை" ஆகிய இவ்விரண்டு நிகழ்ச்சிகளும், கிராம மக்களுக்காக ஏற்பட்டுள்ளன என்பதை ஊராட்சி ஒன்றியத் ஆணையாளர்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

2. ஒவ்வொரு செவ்வாய்க்கிழமை மாலையிலும், 6-45 மணி அளவில், ஊராட்சி நிறுவனங்களைப் பற்றி 'ஊர் ஆட்சி' என்ற நிகழ்ச்சி ஒலிபரப்பப்படுகிறது. இந்த நிகழ்ச்சியில் (அ) "வட்டாரச் செய்திகள்" (ஆ) "அறிமுகம்" (இ) "சிற்றுரை" ஆகியவை அடங்கும். "அறிமுகம்" என்ற நிகழ்ச்சியில், ஊராட்சித் தலைவர்கள் வானொலி வாயிலாக, நேயர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்படுதலும், 'சிற்றுரை' நிகழ்ச்சியில், ஊராட்சி நிறுவனங்களைப் பற்றிய சுவையான குறிப்புகளும் அடங்கும்.

3. ஊராட்சி நிறுவனங்களைக் கருத்தில்கொண்டு, பலரின் பிரச்னைகளுக்கு தீர்வு காணும் முறையில், இந்தப் புதிய நிகழ்ச்சிகள அமைந்திருப்பதால், ஊராட்சிகளும் ஊராட்சி ஒன்றியங்களும் இந்தப் புதிய நிகழ்ச்சியில் முக்கிய பங்கு பெறுவது அவசியமாகும்.

4. எனவே, ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள், தங்களுடைய ஒன்றியத்தில், கிராம வளர்ச்சி திட்டங்களைப் பற்றி—மேற்காணும் நிகழ்ச்சிகளுக்காக—தனிச் சிறப்பு உடைய நிகழ்ச்சிகள் கொண்ட விவரத்தை, தொடர்ந்து திருச்சி வானொலி நிலைய இயக்குநருக்கு கட்டுரைகள் வடிவில் அனுப்புவதோடு, அதன் ஒரு நகலை "ஆசிரியர் 'கிராம நலம்' கோட்டை, சென்னை–9" என்ற முகவரிக்கு அனுப்பினால், அது பற்றிய நிகழ்ச்சிகளை அவர் அறிவதற்கும், மேல் நடவடிக்கை எடுப்பதற்கும், மற்றும் பிற மாநிலங்களில் சிறப்பாக விளம்பரம் செய்வதற்கும் உதவியாக இருக்கும் என்று ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

5. ஊராட்சி ஒன்றிய ஆணையர்களில் மிகச் சிலரே, கிராம வளர்ச்சி திட்டத்தில் அடைந்துள்ள சாதனைகளைப் பற்றி அறிக்கைகள் அனுப்பி வருகிறார்கள். ஊராட்சி ஒன்றிய ஆணையர்களில் பெரும்பாலோர், மேற்கூறிய நிகழ்ச்சிகளைப் பற்றிய செய்திகளை அனுப்பாததால், கிராமப் புறங்களில் மேற்படி திட்டங்கள் பற்றிய விளம்பரம் இல்லாமல் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறது. ஆகையால், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் இத் துறையில் தங்களது தனி ஆர்வத்தை செலுத்தி, குறித்த காலத்தில், அவை பற்றிய அறிக்கைகளை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

6. ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் அனுப்பி வைக்கும் அறிக்கைகள், கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்தில் விரிவாக மறு பரிசீலனை செய்யப்படும்; ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் இந்த அறிக்கைகளை அனுப்பத் தவறுவது கடுமையான நடவடிக்கை எடுக்கக் காரணமாக அமையும்.

* * *

(கிராம வளர்ச்சி இயக்குநரின் 1967-ம் ஆண்டு டிசம்பர் 29-ம் நாளிட்ட குறிப்பாணை எண் 214939-ன் சுருக்கம்.)

* * *

## உருவப்படங்கள் —ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் மற்றும் அவற்றால் நடத்தப்படுகின்ற நிறுவனங்களில் திருவள்ளுவர் திருவுருவப் படத்தை அமைத்தல்.

## Portraits—Panchayats and Panchayat Union Councils and institutions run by them—Installation of portraits of Tiruvalluvar.

திருவள்ளுவர் திருவுருவப் படத்தை அமைக்க விரும்பும் ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியக் குழுக்களும் ஓவியர் திரு கே. ஆர். வேணுகோபால் சர்மா அவர்கள் வரைந்த திருவள்ளுவர் திருவுருவப் படத்தை வாங்கலாம் என்று கிராம வளர்ச்சி இயக்குநருக்கு தெரிவிக்கப்படுகிறது. இது பற்றி சம்பந்தப்பட்ட அனைவருக்கும் ஒரு சுற்றறிக்கை அனுப்பிவைக்கும்படி கிராம வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

2. விற்பனைக்குத் தயாராக உள்ள திருவுருவப் படங்களின் அளவு, அவற்றின் விற்பனை விலை, மற்றும் எந்த வியாபாரியிடமிருந்து அவற்றைப் பெறலாம் என்ற விவரங்கள், இக் குறிப்பாணையின் இணைப்பில் தரப்பட்டுள்ளன.

### இணைப்பு

திருவுருவப் படத்தின் விற்பனை விலை—ரூபாய் 6 (ரூபாய் ஆறு மட்டும்).

திருவுருவப் படத்தின் அளவு—29" × 19"

அனுமதிக்கப்பட்ட விற்பனையாளர்கள் என்று ஓவியரால் தற்போது நியமிக்கப்பட்டிருக்கும் விற்பனையாளர்கள்: இவர்களிடமிருந்து திருவுருவப் படங்களைப் பெறலாம்.

| | | |
|---|---|---|
| 1. சென்னை மாநகர், வடஆர்க்காடு, தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு, சேலம், தர்மபுரி மாவட்டங்கள். | .. | லக்கி ஸ்டோர்ஸ், 68, இராஜா தெரு, வாலாசாபாத் மற்றும் நெ. 2/27, பிராட்வே, சென்னை–1. |
| 2. கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்கள். | .. | ஸ்ரீ புவனா எண்டர் பிரைசஸ், நெ. 85, இராமசந்திரா ரோடு, ஆர். எஸ். புரம், கோயம்புத்தூர்-2. |
| 3. மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்கள். | .. | வி. எம். நாராயண நாடார் அண்டு சன்ஸ் 37, அம்மன் சன்னதி, மதுரை–1. |
| 4. திருச்சி, தஞ்சாவூர், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்கள். | .. | கனி அண்டு சன்ஸ், நெடுஞ்சாலை, திருநெல்வேலி சந்திப்பு–1. |

• • •

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1967–ம் ஆண்டு டிசம்பர் 4–ம் நாளிட்ட அரசு குறிப்பாணை எண் 139866–ன் சுருக்கம்)

* * *

## கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறை—தந்திச் செய்திகளுக்கு சுருக்க முகவரி

## Rural Development and Local Administration Department—Abbreviated telegraphic address—Intimation of.

கீழ்க்காணும் சுருக்கமான தந்தி முகவரிகளை கைவிட்டு விடும்படி ஆணையிடப்படுகிறது.

| வரிசை எண். | தந்திச் சுருக்க முகவரி. | முகவரிக்குரிய பதவிப் பெயர். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | 'காம்ஜெட்' (Comjet) | இணை அபிவிருத்தி ஆணையாளர், மற்றும் அரசு இணைச் செயலாளர், கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறை, சென்னை-9. |
| 2. | 'விக்காஸ்' (Vikas) | அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் அரசுச் செயலாளர், கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறை, சென்னை-9. |

2. கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் உதவி செயலாளர் பதவிக்குப் பதிவு செய்யப்பட்டிருந்த "டெவலப்மெண்ட்" (Development) என்ற சுருக்கமான தந்திச் சொல், சென்னை-9, செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் உள்ள, கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் அரசுச் செயலாளர் பதவிக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறைக்கு தந்தி அனுப்புவோர், மேற்கூறிய மாற்றத்தைக் கவனித்து, புதிய தந்தி முகவரியான "டெவலப்மெண்ட்" (Development) என்ற முகவரியை பின்பற்றும்படி சம்பந்தப்பட்ட அனைவரும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1967-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 27-ம் நாளிட்ட அரசு குறிப்பாணை எண் 103255-ன் சுருக்கம்).

## சமுதாய வளர்ச்சித் திட்டம் அலுவலக நடைமுறை—ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களைச் சோதித்தல்—விறைப்பட்டியல்—திருத்தம்—வெளியிடப்படுகிறது

## Community Development Programme—Office Procedure—Inspection of Panchayat Union Offices—Questionnaire—Amendment—Issued.

கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1966-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 2-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 1894-ல் நிர்ணயிக்கப்பட்ட விறைப்பட்டியலுக்கு, கீழ்க்கண்ட திருத்தம் வெளியிடப்படுகிறது.

### திருத்தம்

ஆணையின் இணைப்பிலே பிரிவு 111-ல் உள்ள, வளர்ச்சித் திட்டங்களில் "போக்குவரத்து" என்ற தலைப்பின் கீழ் உள்ள "கிராமப் பணிகள் திட்டத்தின் கீழ தாழ்த்தப்பட்டோரின் நன்மைக்காக ஒட்டிய வேலைகளுக் கென தனியே 20 சதவீதம் ஒதுக்கப்பட்டுள்ளதா?" என்ற கேள்விக்கு மாறாக, கீழ்க்கண்டவற்றை சேர்த்துக்கொள்ள வேண்டும்.

### தாழ்த்தப்பட்டோர் நலம்

1. கிராமப் பணிகள் திட்டத்திலுள்ள நிதி ஒதுக்கீடு எவ்வளவு ?
2. தாழ்த்தப்பட்டோரின் நன்மைக்கென எத்தனைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன ?
3. தாழ்த்தப்பட்டோரின் நன்மைக்கென அனுமதிக்கப் பட்ட நன்கொடைத் தொகை எவ்வளவு ?
4. நன்கொடைத் தொகையைக் கோராதிருப்பின், அதற்குரிய காரணங்கள் ?
5. தாழ்த்தப்பட்டோருக்குரிய பணிகளுக்காக, கிராமப் பணிகள் திட்டத்திலிருந்து பெறப்பட்ட தொகை எவ்வளவு ?

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1967-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30-ம் நாளிட்ட அரசு குறிப்பாணை எண் 27809-ன் சுருக்கம்).

## சைக்கிள்கள் வாங்குவதற்கு கிராமசேவக்குகள் முன்பணம் பெறுதல்—இழப்பீட்டு பத்திரத்தை 1-1-1967-க்கு பிறகும் நீடித்தல்—ஆணையிடப்படுகிறது

## Advances—Drawal of advances for the purchase of cycles by Gramasevaks—Indemnity Bond prescribed in G.O. Ms. No. 3100 Public (R.D.P.) dated 18-11-58—Continuance beyond 1-1-1967—Ordered.

கிராமசேவக்குகள் சைக்கிள் வாங்குவதற்கென முன் பணம் பெறுவதற்காக தமிழக நிதிச் சட்ட தொகுப்பு நூல் 1, பிரிவு 227 (2) (1)-ல் [Madras Financial Code, Volume 1, Article 227 (2) (1)] உள்ள விதித்துறைகளைத் (Provisions) தளர்த்தி, பொதுத் துறையின் (கிராம வளர்ச்சித் திட்டங்கள்) 1958-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 18-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 3100—ல் ஆணையிடப்பட்டுள்ளது. அந்த ஆணையின் இணைப்பிலுள்ள படிவத்தில், சொத்து மதிப்புடைய ஒருவரின் உறுதிமொழியுடன், கிராமசேவக்குகள் உடன்பாடு பத்திரம் எழுதிக் கொடுக்கவேண்டும். கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1960-ம் ஆண்டு நவம்பர் 29-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 1012-ல், இந்தச் சலுகையை, அவ்வாணையை பிறப்பித்த நாளிலிருந்து, மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடித்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. அடுத்து, கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1963-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 16-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 2637-ல், மேற்குறிப்பிட்ட சலுகைகளை மீண்டும் மூன்று ஆண்டுகளுக்கு அதாவது 1963-ம் ஆண்டு டிசம்பர் 18-ம் நாள் முதல் 1966-ம் ஆண்டு டிசம்பர் 31-ம் நாள் முடிய நீடித்து ஆணை பிறப்பிக்கப்பட்டது.

2. 1966-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26-ம் நாளிட்ட அரசு குறிப்பாணை எண் 150763-ல், மேற் குறிப்பிடப்பட்டுள்ள சலுகை நீடிப்பது பற்றி, தமது கருத்தைத் தெரிவிக்கும்படி, கிராம வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டார். மாவட்ட ஆட்சித் தலைவர்களில் பெரும்பாலோரும், தமிழக கிராமசேவக்குகள் சங்கத் தலைவரும் இச்சலுகையை நீடிக்கவேண்டும் என்று விரும்புவதாகக் கூறி, கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1963-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 16-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 2637-ல் நீடிக்கப்பட்ட இச்சலுகையை, மேலும்

இரண்டு ஆண்டுகளுக்கு—அதாவது 1967-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 1-ம் நாள் முதல் 1968-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாள் முடிய நீடிக்கவேண்டும் என்று கிராம வளர்ச்சி இயக்குநர் பரிந்துரைத் துள்ளார்.

3. மேற்காணும் பத்தி 1-ல் அளிக்கப்பட்டுள்ள சலுகையை நீடிக் கும் அவசியம் பற்றி அரசு பரிசிலனை செய்தது. அதற்கேற்ப, கிராம வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரையை அரசு ஏற்றுக்கொண்டு, பொதுத் (கிராம வளர்ச்சித் திட்டங்கள்) துறை யின் 1958-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 18-ம் நாளிட்ட அரசு ஆணை யில், கிராமசேவக்குகள் சைக்கிள் கள் பெற அனுமதிக்கப்பட்டிருக்கும் சலுகைகளும், அதற்கென நிர்ண யிக்கப்பட்ட இழப்பீட்டு பத்திர (Indemnity Bond) படிவமும்— கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1963-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 16-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 2637-ல் இறுதியாக நீடிக்கப் பட்டவாறு—1967-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 1-ம் நாள் முதல், 1968-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாள் வரை மேலும் நீடிக்கப்படவேண்டு மென்று அரசு ஆணை பிறப்பிக்கிறது.

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1967–ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 2ம் நாளிட்ட அரசு ஆணை எண் 2230ன் சுருக்கம்).

## சாலைகளைப் பராமரித்தல்—விளக்க ஆணைகள்—பிறப்பிக்கப்படுகின்றன

## Roads—Maintenance of roads—Instructions—Issued.

பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களை கிராம வளர்ச்சி இயக்குநர் சோதனையிடுகையில், அவ்வொன்றியங்களில் ஏற்கனவே போடப்பட்டுள்ள சாலைகளெல்லாம் சரிவர பராமரிக்கப்படவில்லை என்பது கவனிக்கப்பட்டுள்ளது.

1958-ம் ஆண்டு தமிழக ஊராட்சிகள் சட்டத்திலுள்ள பிரிவு 63 (a)-ன்படி, கிராமம் அல்லது நகரத்தின் தேவைகளுக்கு ஏற்ப—அதாவது கிராமம் அல்லது நகரத்திலுள்ள பொதுச் சாலைகள் அனைத்தும்—அதன் ஆட்சி வரம்பிலுள்ள சாலைகளை செப்பனிடவும், பராமரிக்க வும், கிராமம் அல்லது நகரம், அதன் நிதி வரம்பிற்குள் ஒரு நிதியை ஒதுக்க வேண்டும். (இச் சாலைகளில் தேசிய நெடுஞ் சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட பெருஞ்சாலைகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் அடங்கா.)

அதைப்போன்றே, 1958-ம் ஆண்டு தமிழக ஊராட்சிகள் சட்டத்திலுள்ள பிரிவு 65 (a)-ன் படி, ஊராட்சி ஒன்றி யச் சாலைகள் என்று பிரிக்கப்பட்ட பொதுச் சாலைகள் அனைத்தையும் செப்பனிட, மற்றும் அவற்றைப் பராமரிக்கவும் ஒன்றியங்கள், அதன் நிதி வரம்பிற்குள் போதிய நிதியை ஒதுக்க வேண்டும்.

ஏற்கனவேயே போடப்பட்டுள்ள இணைப்புச் சாலைகள், கிராமச் சாலைகள் மற்றும் ஒன்றியச் சாலைகளை, ஊராட்சி நிர்வாகிகளும், ஊராட்சி ஒன்றிய மன்றங்களும் நல்ல நிலையில் பராமரிக்க வேண்டும். சாலைகளில் முளைத்துள்ள புற்பூண்டுகளையாவது அகற்றி, சிறிய பழுதுகளையாவது அவை செப்பனிடுதல் வேண்டும். மேற்கண்ட விளக்க ஆணைகளை பின்பற்றுமாறு ஒன்றிய ஆணையாளர்கள் அனைவரும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தமது அலுவல் வரம்பிலுள்ள ஊராட்சி நிர்வாகிகளுக்கு, இதன் நகல்களை அனுப்பி, இதிலுள்ள விளக்க ஆணைகளெல்லாம் தவறாது பின்பற்றப்படுவதை, அவர்கள் மேலும் கவனித்துக் கொள்ள வேண்டும்.

(கிராம வளர்ச்சி இயக்குநரின் 1967ம் ஆண்டு டிசம்பர் 1–ம் நாளிட்ட குறிப்பாணை எண் 182423/67–ன் சுருக்கம்.)

## ஒவ்வொரு ஆண்டிலும் முதல் அரையாண்டில், பல துறைகளின் பணிகளைப் பற்றி பிரசுரிக் கப்படும் ஆய்வுரை கைவிடப்படும்.

## Books and Publications—Publication of short review of activities of various departments for first half-year of each year—Discontinued.

பொதுத் துறையின் 1956–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 23-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 3939-ல் பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணைகளின்படி, ஒவ்வொரு துறை யின் சாதனைகள், மற்றும் அதன் பணிகளைப்பற்றி ஒரு சிறு அறிக்கையைத் தயாரித்து, அதை அச்சிட்டு சட்டமன் றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. பிறகு ஏற்பட்ட தேசிய நெருக்கடி நிலையையொட்டி செலவினங்களில் சிக்கனத் தைக் கடைப்பிடிக்கவேண்டிய தேவையை முன்னிட்டு, அரையாண்டு அறிக்கைகளை அச்சிட்டு சட்டமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு மாறாக, சில 'ரோனியோ' (Roneo)

பிரதிகளை எடுத்து, அவற்றில் 10 பிரதிகளை சட்டமன்றத்தின் நூலகத்தின் வைத்தால் போதுமானது என்று பொதுத் துறையின் 1963-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 4-ந் நாளிட்ட அரசு ஆணை எண் 23-ல் ஆணையிடப்பட்டது. இந்த அரை யாண்டு அறிக்கைகளைத் தொடர்ந்து தயாரிப்பதன் அவசி யம் பற்றி, 'சிக்கனம் மற்றும் நிர்வாக சீரமைப்பு உயர் மட்டக் குழு' (High Power Committee on Economy and Administrative Reorganisation) பரிசீலனை செய்தது. வெவ்வேறு துறைகளின் அலுவல்களைப்பற்றி, கீழ்க்காணும் வெளியீடுகள் வாயிலாக, சட்டமன்ற உறுப்பினர்கள் அறிந்துகொள்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அவையாவன :

1. சம்பந்தப்பட்ட துறையின் ஆண்டு நிர்வாக அறிக்கை.
2. தமிழக அரசு நிர்வாக அறிக்கை.
3. தலையாய நிதி நிலையைப்பற்றி விவாதிக்கும் சட்டமன்றக் கூட்டத்தில் துறையின் பணிகளைப் பற்றிய அறிக்கை.

ஆகவே, ஒவ்வொரு துறையின் நிர்வாகத்தைப் பற்றியும் அரையாண்டு அறிக்கை தயாரித்து வெளியிடுதல், உட னடியாக கைவிடப்படவேண்டும் என்று இதன் வாயிலாக அரசு ஆணையிடுகிறது.

(பொதுத் துறையின் 1967-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 9-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 1792-ன் சுருக்கம்.)

## முழுவதும் அல்லது பாதி அரசுக் கடன் தொகையைக்கொண்டு கட்டப்பெற்ற வீடுகளை வாடகைக்கு விடுதல்—கூடுதல் வட்டி விகிதம் விதித்தல்—தெளிவுபடுத்தி ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

## Loans and Advances—House building advances—Renting out of houses constructed partly or wholly out of Government loan—Levy of enhanced rate of interest—Orders—Clari fication—Issued.

அரசு அலுவலர்கள், தங்களது வீடுகளை வாடகைக்கு விடுவதில் இலாபம் பெறவில்லையென்றால், அவர் களிடமிருந்து சாதாரண வட்டி விகி தமே வசூலிக்கப்பட வேண்டும் என் பதும், இவ்வாறான நேர்வுகளிலெல் லாம், அவர்கள் வசூலிக்கும் சரியான வாடகைத் தொகையைக் கொண்டு கணக்கிடுதல் வேண்டும் என்பதும் தொழில், தொழிலாளர் நலன், வீட்டு வசதித் துறையின் 1966-ம் ஆண்டு ஜூலை 11-ஆம் நாளிட்ட அரசு ஆணை எண் 2918-ல் பிறப்பிக்கப்பட்ட ஆணை கள் பலவற்றில் ஒன்றாகும். ஓர் அரசு அலுவலர் இலாபம் அடைகிறாரா, இல்லையா என்பது பற்றி தீர்மானிக்க, ஒரு நியதி அல்லது ஓர் அடிப்படைக் கொள்கையை ஏற்படுத்துவது பற்றி அரசு ஆராய்ந்தது. வாடகைக்கு விடப்படும் வீடுகள் அனைத்திற்கும் பொருந்தும்படியாக, சரியான, ஒரு சீரான கொள்கை ஏற்படுத்துவது சிரம மாக இருக்கும் என்று அரசு கருது கிறது. ஏனெனில், அரசு கடன் மற் றும், அரசு ஊழியர்களின் முதலீடு களில் வேறுபாடுகள் இருப்பது தவிர, அந்த முதலீடுகளை அவர்கள் அடைந் தது பற்றியும் விவரமாக ஆராய வேண்டியுள்ளது. சான்றாக, ஓர் அரசு ஊழியர் ரூ. 45,000 அல்லது ரூ.50,000 மதிப்பில் ஒரு கட்டிடத்தைக் கட்டி, அதற்கு திங்கள் வாடகையாக ரூ. 750 அல்லது ரூ. 1,000 அடையும்போது தனக்கு சாதாரண வட்டி விகிதமே அனுமதிக்கவேண்டுமென்று வேண் டிக் கொள்ள முடியாது. ஏனெனில் உயர் வட்டி விகிதமான 9 சத வீதத்தை அவர் செலுத்திய பின்பும் அவர் நிச்சயமாக இலாபம் அடைகிறார். இவ்வாறு இல்லாமல் கீழ் நிலை யில் உள்ள அரசு அலுவலர்கள், தங்களது பொருளாதாரத் துன்பங் களின் விளைவாக தங்களுடைய சொந்த வீடுகளில் வசிக்க முடியாமல், அவற்றை வாடகைக்கு விடும் நிலை யில் இருக்கலாம். அப்படித் துன் புறுபவர்கள், தங்களது இன்னல்களை நிரூபிக்கையில்; அவர்கள் மீது அரசு அனுதாபங்கொண்டு அதை கவனிக் கும். எதனால் இலாபம் ஏற்படுகிறது என்பது குறித்து ஆராய்ந்து, சரியான கொள்கை ஏற்படுத்துவது அவசியமில் லாதபோது, தனிப்பட்டவர்களின் விஷயத்தை, தகுதி அடிப்படையில் ஆய்ந்து, முடிவு எடுக்க வேண்டும் என்று துறைத் தலைவர்களுக்கு அறி விக்கப்படுகிறது.

(தொழில்கள், தொழிலாளர்கள் நலன், வீட்டு வசதித்துறையின் 1967-ம் ஆண்டு ஜூலை திங்கள் 18-ம் நாளிட்ட அரசு குறிப்பாணை எண் 33792-ன் சுருக்கம்.)

# மகிழ்ச்சி தரும் செய்தி!

தமிழ்நாட்டின் மூலைமுடுக்குகளில் உள்ள எல்லாக் கிராமங்களிலும் பணியாற்றுகின்ற ஊராட்சிகள், நூல் நிலையங்கள், செய்தி நிலையங்கள், பள்ளிக்கூடங்கள், மகளிர் மன்றங்கள் முதலிய பல்வேறு நிறுவனங்களுக்கெல்லாம் செல்லும் "கிராம நலம்" இதழில், கிராம மக்களுக்குத் தேவையான பொருள்கள் பற்றிய தகவல்களும், கிராமங்களில் தயாராகும் பண்டங்கள் பற்றிய விவரங்களும் விளம்பரங்களாக ஏற்றுக்கொள்ளப்படும். ஏப்ரல் 1968 இதழிலிருந்து "கிராமநலத்"தில் விளம்பரங்கள் வெளியிடுவதென தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

## விளம்பரக் கட்டண விவரம்

| | | அவ்வப்போது வெளியிடப்படும் விளம்பரங்களுக்கு. (1) ஒவ்வொரு இதழுக்கும். ரூ. | | குத்தகையாக ஒரே இட அளவிற்கு [குறைந்தது 12 விளம்பரங்கள்.] (2) ஒவ்வொரு இதழுக்கும். ரூ. |
|---|---|---|---|---|
| **இரண்டாவது, மூன்ருவது அட்டைப் பக்கங்கள்—(ஒரே வண்ணத்தில்)** | | | | |
| முழுப் பக்கம் | .. | 420 | .. | 315 |
| அரைப் பக்கம் | .. | 215 | .. | 165 |
| **நான்காவது அட்டைப் பக்கம்—(இரண்டு வண்ணங்களில்)** | | | | |
| முழுப் பக்கம் | .. | 450 | .. | 325 |
| அரைப் பக்கம் | .. | 230 | .. | 170 |
| **உள்பக்கம்—** | | | | |
| முழுப் பக்கம் | .. | 400 | .. | 300 |
| அரைப் பக்கம் | .. | 210 | .. | 160 |

மேற்கொண்டு விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
**மக்கள் தொடர்பு அதிகாரி,**
கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகம்,
**கோட்டை, சென்னை-9.**

---

### உலகத் தமிழ் மாநாடு விழா மலர்:
"குறளகத்தில்" விற்பனைக்குக் கிடைக்கும்.

உலகத் தமிழ் மாநாடு விழா மலர் இப்பொழுது பொது மக்களுக்கு விற்பனைக்குக் கிடைக்கிறது. தமிழ் அறிஞர்களின் எழுத்தோவியங்களும், கண்ணையும் கருத்தையும் பறிக்கும் வண்ண ஓவியங்களும் அடங்கிய இம்மலரின் தனிப்பிரதி ஒன்றின் விலை ரூ. 30 இம்மலர், சென்னை நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சாலையில், சட்டக் கல்லூரிக்கு எதிரில் அமைந்துள்ள "குறளகத்தில்" விற்பனைக்குக் கிடைக்கும்.

'புகாரில் ஒரு நாள்' பரிசுக் கவிதைகள் அடங்கிய புத்தகமும் கலைக்காட்சி குழுவினர் வெளியிட்டுள்ள கையேடும் "குறளகத்தில்" கிடைக்கும். "புகாரில் ஒரு நாள்" தனிப்பிரதி ஒன்றின் விலை ரூ 1, கையேட்டின் விலை ரூ. 15.

---

### இந்த இதழில்


| | பக்கம் |
|---|---|
| உயரிய பண்பாட்டின் களஞ்சியம்—தமிழ்மொழி | 1 |
| தனக்கென்று உள்ளதை இழக்க தமிழன் ஒருக்காலும் சம்மதிக்கமாட்டான் .. | 3 |
| விவசாயப் புரட்சிக்கு வித்திட்ட மாநாடு .. | 6 |
| கிராம நலத் திட்டங்கள் .. .. | 9 |
| புகாரில் ஒரு நாள் .. .. .. | 11-14 |
| வரலாறு படைத்திட்ட ஊர்வலம் .. | 17 |
| தமிழ் வளர்த்த சான்றோர்க்கு சிலையெடுப்பு | 19 |
| காணுதற்கரிய கண்காட்சி .. .. | 20 |
| கிராம நலக் கண்காட்சி— அறிவு வளர்க்கும் சாதனமாக அமையட்டும் | 25 |


### அடுத்த இதழில்...

தமிழகத்தில் பனைத்தொழில்

ஏர்முனைவிழா—சட்டத்துறை அமைச்சர் கலந்து கொண்ட சிறப்பு நிகழ்ச்சிகள்

உள்ளத்தைச் சிலிர்க்க வைத்த உலகத் தமிழ் மாநாடு (சிறப்புக் கட்டுரை)

கிராம நூலகம் (கட்டுரைத் தொடர்)

---


வெளியிடுபவர்:
**திரு வி. நடராஜன், ஐ. ஏ. எஸ்.**

ஆசிரியர்:
**திரு எஸ். வேங்கடசாமி, எம். ஏ.**

**Printed by the Director of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras Edited by the Public Relations Officer and published by the Director of Rural Development Madras-9.**



உலகத் தமிழ் மாநாட்டிற்கு வருகை தந்த வெளிநாட்டு அறிஞர்கட்கு
கிராம வளர்ச்சித் துறையின் பரிசு